உ

குகமயம்

# அன்பு விடு தூது



நூலாசிரியர்

**P. N. இராஜமாணிக்கம் பிள்ளை**

புதுவை.

---

[illegible]] 1942. [விலை அணா 12.

This book can be had from

**Mr. P. N. RAJAMANICKAM PILLAI,**

Messrs. GUHA Co.,

43, Dupleix St. **Pondicherry.**

(F. INDIA.)

உ

குகமயம்

# அன்பு விடு தூது

இது

புதுவை

## P. N. இராஜமாணிக்கம் பிள்ளை

(அன்பு மாணிக்கனார்)

பண்டவாணிகர்

அவர்களால்

இயற்றப்பட்டது.

---

பதிப்பகம்

ஸ்ரீ ஷண்முகா பிரிண்டிங் ஒர்க்ஸ்,

திருப்பாதிரிப்புலியூர்.

1942.

நூல் கிடைக்குமிடம் :-

முருகவேள் முத்தமிழாகரம்,

113. அம்பலத்தாடையார் மடத்து வீதி,

புதுவை. F INDIA.



மயிற்பரி மேலழகன் மாண்பழனிக் கம்பன்
மயிலவரை வாழிளங்கோ வந்தான்......
எண்ணுற்ற போதெல்லா மென்பிதய மெங்குமின்பம்
பண்ணுற்ற சத்தனையான் பற்றுற்றேன்......

உ



# ஸ்ரீ பாலயசித்தர் வாழ்த்து.

## விருத்தம்

நூலவன் மாலுங் காணா நுண்ணியன்;வரையின் செல்வி
பாலனெம் முதல்வன் பாலன் பனிமதி முகவா தித்தன்
வேலனெம் மிறையின் போது விரும்பிமுப் போது மோதும்
**பாலயன்** பதமென் னுள்ள வாலயத் தமர்க மாதோ.

குகமயம்

## சிறப்புப்பாயிரம்

பெருக்குற்ற மால்கொண்டு பேர்கொள் மயிலத்
திருக்குற்ற மாமுருக னின்பால்—உருக்குற்ற
அன்புதனைத் தூதனுப்பு மன்புமா ணிக்கன்சீர்
மன்புகழ்க மாநிலத்தர் மன்.

அன்புமா ணிக்கனரு ளன்புவிடு தூதுரைக்கு
நன்குசெய் யுங்குறிப்பும் நல்கினன்—தன்னேரில்
வேனிவந்த தோண்முருகற் கேகிவந்த மெய்யன்பன்
ஸ்ரீநிவா ஸச்செம்ம லான்.

வித்வான், T. S. தியாகராஜதேசிகர்,
தமிழாசிரியர்,
செயின்ட் ஜோசப் உயர்தர கலாசாலை,
கடலூர் N. T.



P. N. இராஜமாணிக்கம் பிள்ளை,

புதுவை.

உ

வேலுமயிலுந் துணை

# முன்னுரை.

"சேயோன் மேய மைவரை யுலகம்" என்ற பழைய தமிழிலக்கண நூற்பாத் தொடரால் முருகத்தெய்வமும், சேயோன் என்னும் பொருளை யுணர்த்துந் தமிழ்மொழியும் தொன்மையுஞ் சிறப்பும் வாய்ந்தனவாமென்பது நன்கு விளங்கும். தமிழ் மொழியினுல் தெய்வங் குறித்துப்பாடும் மரபுந் தொன்மையதே.

முருகக்கடவுளுக்குப் பூசனை விழா முதலியவற்ருற் சிறப்பெடுத்து அவனருள் வேட்டலினும், தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான முத்திக்கனி யான முத்தமிழால் முத்துத்தமிழால் அவனைக் குறித்துப் பாடுதலினுற் பெறும் பேறு பெரிதாகு மென்பதை 'முத்தமிழால் வைதாரையு மங்கு வாழவைப்போன்' என்ற அருள் வாக்கானும் அனுபவத்தானும் உணர்கின்ருேமன்றே? ஆதலின் கவிக்குற்றம் பாராத கந்தக்கடவுளை நினைத்தவாறெல்லாம் பாடலாம்என்பதும் அடியேன் துணிபு. மற்றும், செந்தமிழ் மரபு குன்ருமற் பாடுவார்பால் அவனருள் உடனே சென்றெய்தும் என்பதும் தெளிவுண்மையே யாகும்.

அவன்றிருவருட்பேறு விழைந்து யான் யாத்து வைத்திருந்த இந்த 'அன்பு விடு தூது' என்னுஞ் சிறு பிரபந்தத்தைக்கண்ணுற்ற என்னுடைய அரியகெழுதகை

நண்பர்கள் உயர்திரு வித்வான் ஸ்ரீநிவாஸாச்சாரியாரவர்களும், உயர்திரு வித்வான் தியாகராஜ தேசிகர் அவர்களும், இதனை வெளியிடுவது நலமெனத் தெரிவித்தார்கள். அன்றியும் அவர்கள் சிறப்புரை நல்கியும் தாமே உடனிருந்தும் பதிப்பித்தார்கள். அவர்கள் செய்த நன்றியை எழுமையும் உள்ளுவேனாக! அடியேன் வேண்டுகோட் கிணங்கி, பிரமபுரம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருவருளுக்குப் பெரிதுமிலக்காகிப் 'பாடாண்பாட்டு' 'ஞாயிறுவாழ்த்து' 'முருகன் புகழ் மாலை' 'துதிபஞ்சகம்' 'மயிலாசலமாலை'முதலிய பல நூல்களையியற்றித் தமிழ்ப்பணி புரிந்துவரும் மேற்குறித்த திரு. தே. ஆ. ஸ்ரீ. ஆசாரியாரவர்கள் திட்பநுட்பம் வாய்ந்த இன்னுரையொன்றும் எழுதிச் சேர்த்தார்கள். அவர்கள் பொன்னுரைக்கு யான் என்னுரை கூறுகேன்! அடக்கமுந்தெளிவு மறிவு முடைய அவ்விருநேயர்களும் இறைவன் திருவருளால் இருவகைப்பயனும் எய்துவார்களாக. இங்ஙனம் வாழ்த்துவதன்றி யான் செயத்தகு செயல்வேறொன்றறியகில்லேன்.

அவ்வப்போது அடியேற்கு நல்லுரைகூறி ஆட்கொண்டு ஆசீர்வதித்து வருகின்ற அருந்தவ யோகிளாகிற திருமிகு சுத்தானந்த அடிகளாரும் இந்நூல் மூலத்தை அருள் நோக்கு நோக்கி முகவுரை யொன்றெழுதி உதவினர்கள். அவர்கள் பல்லாண்டு வாழ்க!

இந்நூல் மூலத்தையுங் குறிப்புரையையும் பார்த்தருளினதன்றி ஒப்புநோக்குதல் முதலியனவுஞ் செய்து முகவுரையும் வரைந்தனுப்பியவர் வைணவச்செம்மல்

உயர்திரு வித்வான் வே. வேங்கடராஜுலு ரேட்டியா ரவர்களாவர். அவர்களுடைய மாசற்ற குழந்தையுள்ளம் புலவர் பலரிடைக்காண்பதரிது. பன்மொழிப் புலவ ராகிய இவர்களை நினைதொறும் 'மெலியரென மீக்கூற லன், வலியரென வழிமொழியலன், நட்டோரையுயர்பு கூறினன்' என்ற அடிகளின் கருத்துக்களும் உடன் எழுந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் இலக்கணப் புலமையைப் பல்லோரும் பயன் படுத்திக்கொள்ளும் பொருட்டும் இவர்கள் பல்லாண்டு இனிது வாழ்வார்க ளாக.

நெடுநுகத்தும் பகல் போல நடுவுநின்ற நன்னெஞ் சினோரும், ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கைச் சான் றோருமாகிய, சைவத்திருவாளர். பண்டித. ந. மு. வேங் கடசாமி நாட்டார் அவர்கள் இந்நூலை நோக்கியருளித் தம் கடிதத்தின் வாயிலாகத் தம் திருவுளத்தெழுந்த விழு மிய கருத்துக்களைப் பட்டாங்கு வரைந்தனுப்பி யுதவினர் கள். அவர்கள் பரந்தாழ்ந்த வுள்ளத்தினின்று விசைத்து மேலெழுந்து வழியும் அன்பூற்றினை யுள்ளுந்தோறும் பெருவியப்படைகின்றேன். இவர்கள் பல்லாண்டு தமி ழுலகில் இனிதிருந்து நனிநீடு வாழ்வார்களாக.

வீறிட்டு விளங்குங் கவியழகோடு செந்தமிழ் நலங் கனிந்து இன்பச்செழுந்தேன் பிலிற்றும் 'தமிழரசிக் குறவஞ்சி' முதலியன பாடும் பேராண்மைபெற்ற நாவ லரும், சைவசாத்திரநூற் புலவரும், எனது அருமை யன்புப் பெரியாருமாகிய உயர்திரு. ஆசிரியர். அ. வரத நஞ்சைய பிள்ளை அவர்கள் அன்போடு வரைந்துதவிய

'அன்பு விடு தூது குறித்த ஐயநீக்கம்' என்னும் ஆராய்ச்சிச் சிறப்புப் பாயிரமும் ஏற்ற வகையில் நூலுக்கு அரண் செய்வதாகவே உள்ளமைபற்றி மிகவும் மகிழ்கின்றேன். இவர்கள் மேற் கொண்டுள்ள 'தமிழ்த்தாய்திருப்பணியும்' ஏனைய பணிகளும் முடிவுற்றுத் திகழ இவர்கள் நீடு வாழ்க.

குறட்கடலுக்கோர் உரைக்கடல் வழங்கியவரும் ஒரு திரு முருகனுக்கே உளமெலாம் வழங்கியவருமாகிய உயர்திரு. கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியர் அவர்கள் நண்பு கூர்ந்து அனுப்பிய சிறப்புப் பாயிரத்திற்கு அவர்கள் நெடுங்காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துதல் அல்லது பிறிது கைம்மாறு யாது புரியக்கடவேன் !

அறிவும், உருவும், ஆற்றலும், புகழும், கவலல் களித்தலற்றசமநிலை உளமுமுடைய, நல்லிசைப்புலவரும், எனது அன்பு கெழீஇய கெழுதகைமையாளரும், சென்னைச்சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆசிரியருமாகிய, சைவத் திருவாளர், தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார்) உரிமையோடு சிறப்புப்பாயிரம் ஒன்று வரைந்துதவினர்கள். அவர்கள் பல்லாண்டு தமிழர்க்கும் பயன்பட வாழ்வார்களாக.

அடியேன் பால் பேரன்புகூர்ந்து பாயிரம் வரைந்துதவிய பேரன்பர்களாகிய, மைலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரிச் சொற்பொழிவாளரும் வீரசைவப்புலவருமாகிய மறைத்திரு S. துரைசாமி

ஐயர் அவர்களுக்கும், புதுவை கல்வை கல்லூரி ஆசிரியரும், புதுவையில் அறிஞர்களிடையே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குபவருமாகிய உயர்திரு. பண்டித ஸ்ரீ. அ. நாராயணசாமி நாயுடு அவர்கட்கும், புதுவை. மகாவித்வான் பு. அ. பெரியசாமிப்பிள்ளை மாணவராகிய உயர்திரு. கோ. இராமாநுஜசெட்டியார் அவர்களுக்கும், கடலூர், கல்வி இலாகா உதவியதிகாரி உயர்திரு. K. சம்பந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கட்கும், கெழுதகை நண்பர் வித்வான். சோ. இராமானுஜம் அவர்கட்கும்,இனி இந்நூலை நோக்கித் தம் கருத்தையறிவிக்கும் பெரியோர்க்கும் எனது மனமார்ந்த அன்பு வணக்கம் என்றும் உரியதாகுக.

இச்சிறுநூலைப் பாடுவித்தும், ஏற்றும் திருவருள் புரிகின்ற திருமுருகன் திருவடி வாழ்க.

அம்முருகனருள் பரிபூரணமாகப் பெற்றுள்ள அடிகளார் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நீடு நிலவுக! அடியார்கள் பலரும் வாழ்க!

நூலாசிரியன்.

# நூன்முகம்

அன்பே வாழ்க்கை; அன்பின்பயனே இன்பம்; இன்பமே கடவுள்; கடவுளை அடையும் வழியும் அன்பே. "அன்பு" மூன்றெழுத்து மந்திரம்; இந்த மந்திரம் மட்டும் மாந்தர் உள்ளத்திற் பற்றிச் சுழன்ருல், சாதி மத வேறுபாடிராது; நாடுநிற வேறுபாடிராது; தனிச் செருக்கிராது; உயிர்க்கொலையிராது; உலகெலாம்அருள் விளங்கும்; போர் வெறியடங்கும்; எங்கும் அமைதி நிலவும். இப்போது நடக்கும் குண்டு வீச்சுகளுக்கும், படுகொலை வெறிகளுக்கும் இடமேயிராது. உலகோர் உள்ளத்தினின்று அன்பு மறைந்தது; அருள் குறைந்தது. இருள் அடர்ந்தது. மீண்டும் அன்பொளி புகுந்தால் உலகிற்கு உய்வுண்டு. அப்பர், மாணிக்கவாசகர், தாயுமானவர், அருட்சோதிவள்ளலார் போன்ற கடவுட் பெரியார் அன்பு வழிகாட்டிச் சென்றனர். கடவுளையே "இன்பமே என் பெரும் அன்பே" என்று போற்றினர்.

அந்த அன்பின் பெருமையை இந்நூல் மிகவும் அழகாக விளக்குகிறது. "அன்பு விடு தூது" என்னும் இந்தநூலே ஒரு இனிய தூதாகவந்து படிப்போர் உள்ளத்தில் அன்பைத் தூண்டுகிறது. இந்நூல் யாப்பமைதியுடன், இனிய எளிய நடையில், வரிக்கு வரி ஆழ்ந்த கருத்துடன் விளங்குகிறது. இது புலவர் போற்றத்

தக்க அன்பு விருந்தாகும். கவிச்சுவையிலும் கற்பனையிலும் சொல்லமைப்பிலும் இது சிறந்து விளங்குகிறது.

இந்நூலை ஆக்கிய **அன்பு மாணிக்கனுர்** முருகக்கடவுளிடம் மனதைப்பறிகொடுத்த அடியார்; முருகனுக்கடுத்தபடி அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது முத்தமிழே. தமிழில் இவ்வாசிரியருக்கு ஆழ்ந்தகன்ற பயிற்சியுண்டு. சொல்வன்மையுண்டு. கவிநயம்மிகவுண்டு. இவர் முருகன்மேல் பல கவிகைகள் பாடியிருக்கிருர். இவ்வாசிரியர் இனிய வியல்புடையவர். அடக்கம், அன்பு, வாய்மை, சொற்றவருமை, அறம், உயிர்க்கருணை, குருபக்தி, தெய்வபக்தி முதலிய அரிய குணங்கள் வாய்ந்தவர் இவர் தமது அன்பையே முருகக் கடவுளுக்குத் தூதாக அனுப்புகிருர். அன்புமயமான இந்த அன்பர் உளத்திற்பூத்த "**அன்பு விடு தூது**" அன்புள்ளவரையில் தமிழருக்கு அன்பொளி காட்டி நிலவுக!

அன்பே கடவுளா மன்பே யருஞ்சமயம்;
அன்பே யறிவிற் கனி.

சுத்தானந்தபாரதி,
புதுவை.

ஸ்ரீ

## சென்னைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியாளர் ஆசிரியர் வித்வான் ஸ்ரீ. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் அருளிய

# புகழுரை.

முற்காலத்தில் நமது நாட்டில் பல்வேறு தொழிலாளரும் பலவகை வாணிகத்தினரும் தமிழ்மொழியை நன்கு கற்றுப் புலவராய் விளங்கினர் என்பது சங்கச் செய்யுட்களான் அறிய வருகின்றது. அவர், செய்யுளின்பந் துய்த்த லொன்றனையே பயனாகக் கருதிக் கல்வி கற்றதனுல் உண்மையறிவுபடைத்தவராகி உலகத்தாரால் என்ஞான்றும் பாராட்டப்படுவராயினர். இக்காலத்தில் அவ்வெண்ணம் மாறிற்று; 'வயிற்றுப்பெருமான் பொருட்டு'க் கற்பதே குறிக்கோள் ஆயிற்று. ஆயினும், முன்னையோரேபோன்று கற்பவர் இக்காலத்திலும் ஒரோவழி ஒரு சிலர் இருப்பர் என்பது புதுவை, திருவாளர் பி. என். இராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் போல்பவரால் உறுதிப்படுகின்றது.

திரு. இராஜமாணிக்கனுர் புதுவை நகரில் பண்டவாணிகத்திற் பெயர் பெற்றவர்; தொல்காப்பியம் முதலிய பல இலக்கண நூல்களையும் அவற்றின் உரைகளையும் பல்வேறு காலத்திலக்கியங்களையுங் கற்று, கற்பிக்

குந் திறனும் வாய்ந்தவர்; தமது நல்லியற் பண்பினால் மாமிமருகி (பூமகள் நாமகள்) இருவருக்கும் உட்பகை தவிர்த்து ஒற்றுமை யுண்டுபண்ணி வாழ்க்கை நடத்து பவர். இத்தகைய இருஞ்செல்வர் தீங்கவிப் புதல்வனை யும் பெற்றிருப்பது பெரிது பாராட்டற் பாலதேயாகும்.

திரு. இராஜமாணிக்கனார் பழமை விரும்புங் கெழு தகையராகலின் பழைய பிரபந்தவகையு ளொன்றாகிய 'தூது' நூலொன்றனை இயற்றியுள்ளார். படுக்கையி லிருந்தே காபி தேநீர் பருகுவோர் பல்கியுள்ள இக்காலத் தில், பற்றுலக்கிப் பழஞ்சோறுந் தயிரும் உண்பவ ரும் இருத்தலின், கும்மியடிப்பாட்டு, ஹிந்துஸ்தானி மெட்டு, இங்கிலீஷ்நோட்டு முதலிய துறைகளி லமைந் துள்ள பாட்டுக்களையே படித்துத் தமிழறிஞராவோர் வாழுமிக்காலத்தில் இத்தூது நூலைப்படித்து இன்புறு வோரும் இருப்பர் என்னுந் துணிபு இவ்வாசிரியருக்கு உண்டாதற்பாலதே.

## தூது

தமிழ்மொழியில் தூதுச்செய்யுட்கு அடிகோலியவர் சங்கப்புலவருட் சிலர் உளர். 'கானலுங் கழறாது....... நீயே சொல்லவேண்டுமா லலவ' என்று நண்டுவிடுதூது பாடினார். (அகநானூறு செ. 170. மதுரைக் கண்ணிற் கடையத்தன் வெண்ணாகனார்.) பிற்காலத்தில் ஆழ்வார் கள் முதலிய அடியார்கள் பல தூதுச்செய்யுட்களைப்பாடி இந்நூலை வளர்த்தனர். அதன்பின் தனித் தூது நூல்கள் பல்கலாயின.

## அன்பு விடு தூது.

இந்நூலில் ஆசிரியர் அன்பினைத் தூது விடுத்தற்குக் காரணங் கூறும் வழி,

'மற்றுமெவர் சென்றலும் மன்னிய நீதான்றுணையா
உற்றிடுவர் தூதன்றி யோங்கருட்கும்—பெற்றதாய்
நீயாவா யென்றே நிகழ்த்தினரால் யானுமவன்
வீயா வருளன்றே வேண்டுவது—தாயாகும்
நீசென் றழைத்திட்டால் நேருமருள்'

என்று கூறியிருப்பது ஓதியோதி இன்புறத்தக்கது. அன்பின் பலபெயர்களைக் கூறுமிடத்து,

'பத்தி யருளீகை பல்லுயிர்கள் பாலிரக்கம்
ஒற்றுமையு முள்ளுறவு நீயன்றே—முற்ற
உணர்ந்தே மிவைகளைநீ ஒன்றாகக் கட்டல்
உணர்ந்தாரே காரேன் றுரைத்தார்'

என்றும்,

கொடுக்குங் கொடையுன் குணமே யதனால்
அடுக்கும் நினக்களியேன் றும்பேர்'

என்றும், இவ்வாறே காரணங் கூறிச் சிறப்பித்திருப்பது சொற்பொருளின்பந் துய்ப்போருக்கு எத்துணையின்பம் பயக்கும்! முப்பத்தொன்றாங் கண்ணிமுதலாகப் பல கண்ணிகளில், அஃறிணைப் பொருள்களின்பாற் காணும் அன்பின்திறத்தைக் கூறியிருப்பது ஆழ்ந்து நோக்கி இன்புறற் குரியது. இவ்வாறு நூலின் நயத்தினை எடுத்தெழுதின் மிகவிரியுமாகலின், அஞ்சி இத்துணையில் நிறுத்துகின்றேன்.

## நூலாசிரியர்.

இந்நூலாசிரியர் அன்பின்வயப்பட்டவர் என்பது,

'உன்னை யடைந்தாரை யுய்விக்கும் பெற்றிமையால்
என்னை உனக்களித்தேன் என்னன்பே'

என்னுங் கண்ணியினுல் அறியவருகின்றது.

'வேலைசெய்தார் கூலி விரும்புகின்ற செல்வரைநீ
வேலையுள்ள மட்டும் வியவாதே'

என்பதை நோக்கின், ஏழைத் தொழிலாளரிடத்தில் இவ்வாசிரியருக்குள்ள அருளும் இரக்கமும் அறியலாகும்.

'ஞானத் தமிழ் தூதாய் நாடியே—மோனமுடன்
வந்திருக்கு மவ்விடத்தில் வாயைத் திறவாதே'

என்னும் அடிகளை அறியின், இவ்வாசிரியரின் அடக்கம், வணக்கம் முதலிய நல்லியல்பு நன்கு புலனுகும்.

## உரை.

இனி, ஒன்றனைக்குறித்துக் கூறுவது ஈண்டு வேண்டற்பால தாயுளது. அஃதாவது: இந்நூலுக்கு அமைந்துள்ள உரையைப்பற்றியது. இவ்வுரை குறிப்புரையாயினும், இக்காலத்திற் பலர் எழுதுவது போலாது, அரும்பொருளைத் தக்க மேற்கோள்காட்டி விளக்கிச் சிறப்புரையாயுளது. இவ்வுரையைப் படிப்போர், பல நூல்களின் சிறந்த கருத்துக்களை அறிந்து இன்புறுதல் கூடும். நூலின் சிறப்பிற்கேற்ப உரையும் அமைந்திருப்பது நன்று பாராட்டிப் போற்றற் குரியது.

புலவர், திரு. இராஜமாணிக்கனுர் தமிழன்னைக்கு இன்னும் பல பாமணிப்பூண்களை அணிந்து, தமிழ் மக்களையும் இன்புறுத்தி இனிது நீடுவாழ இறைவன் திருவருள் புரிவாஞக.

உ

# சேலம், தோரமங்கலம்
# ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்
# அருளிய

## அன்பு விடு தூது குறித்த ஐயநீக்கம்

செந்தமிழ் தேர்ந்த நுண்மாண்புலத்தரும், நட்டோர் மனங்கவர் நடைசால் நலத்தரும் ஆகிய அன்பர், புதுவை திருமிகு செல்வர் அன்பு மாணிக்கனார் ஆக்கி வழங்கிய (அன்பு விடு தூது) என்னும் அருமை நூலை ஏற்றுக் கற்றுச் சுவைத்தேன். சுவைத்தேன் சுரந்து துளும்பும் இடங்கடோறும் வியந்து அடிபெயராது மெய்ம்மறந்து நின்ற என் மனத்தை மேற்கூட்டிச்செல்ல யான் கொண்ட முயற்சி சிறிதன்று. நூலின் பொருட் சுருக்கம் என்னுந் தலைப்பின் கீழ் இந்நூலின் அரும் பெருங்கருத்துக்கள் பலவும், நூலகத்தே அடிக்குறிப்பாக எழுதப்பெற்றுள்ள வுரைப்பகுதிகளால் பொருள் விளக்கமும் தெளிவாக எழுதப்பெற்றிருத்தலின் அவற்றை விடுத்து இந்நூற்கிட்ட பெயர் குறித்துக் கருதலானேன். கீழ்க்கண்ட கடா என்னுள்ளத்தே இடம் பெற்றது. பின்னர் அதனை என் சிற்றறிவு முகந்த சின்னூற் கருத்துக்களின் துணைகொண்டு நீக்கிய நிகழ்ச்சிகளையே சுருங்கவெடுத்துக்கூற முற்பட்டேன். ஆன்ற அறிவுடையன்பர்கள் என் கருத்திற் பிழைதோன்றிற்களைந்து நன்கமைத்துக் கொள்வார்களாக.

கடா:—அன்பு, உயிரின் பண்புகளுள் ஒன்று. பண்பியைப்பிரிதல் பண்புக்கியல் பன்ருகலின் அவ்வன்பை வேருென்றுபோற் கொண்டு உயிரின்நீக்கித்தாது செலுத்தல் அமைவுடைத்தன்று.

விடை :— நன்றுகூறினுய்? தம் வயமிழந்து பத்தியின்பாலராகி, "உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ உளபடியையுணரும் அநுபூதி மான்களுக்கு" உயிரென்றும் அதன்பண்புகளாகிய அறிவு இச்சை (அன்பு) செயலென்றும் வேறுகருதும் கருத்தின்மையானும்,"அறிவு முதலிய இம்மூன்றும்முறையே இறைவனது பேரருட்டுணையால் வித்தை, அராகம், கலை என்னும் தத்துவங்களின் தூண்டுதலால் தொழிற்படுவன" என்னும் சைவசித்தாந்தக் கருத்தானும், விதை கொடுத்தோர்க்குக் காயுதவல் போன்று, ஆன்மாக்களை அனுதி இருட்கேவலத்திற் பெயர்த்து மாயையிற் புணர்த்து உடல் முதலியன வுதவிச் சகலத்தேநிறுத்திச் சிறிது சிறிதாய்ப் பக்குவம் வருந்துணையும் பாதுகாத்துப் பின் சுத்தநிலையில் அவனேதானேயாகியநன்னிலைமைக்கண் உய்த்து நீங்கா இன்பம் வழங்குந் தலைவனுக்குத் தம் ஆவியை உடலை உடைமைகளை முற்றும் வழங்கும் கடப்பாட்டின்கண் அன்பைச்செலுத்தல் அரியதன்ருகி உரியதாகலானும், ஆவின் பாலை அதன் கன்று காட்டிக் கறத்தல் போன்று அன்பேமயமாகி நிறையும் கடவுளை ஆன்மாவின் ஓர் பண்பாய்க் குறுகிக் கிடக்கும். அன்பைச் செலுத்தி இன்பப்பேறடைதல்

அல்லது வேறு நேர்வழி இன்மையானும் இதுகடாவன்மையறிக. "என்பேவிறகா இறைச்சியறுத்திட்டுப் பொன்போற் கனலிற் பொரியவறுப்பினும், அன்போடுருகி யகங்குழைவார்க்கன்றி யென்பொன்மணியினை யெய்தவொண்ணாதே." (திருமூலர் திருமந்திரம் 272.)

அல்லதூஉம், அன்பில்வழி அதன்காரியமாகிய இன்பமும் இன்றாமாகலின் அன்பேபோல "எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தானமர்ந்து வரூஉ மேவற்றாகும்" (தொல் பொருள் 223)என இலக்கணங்கூறப்படும் இன்பமும் உயிர்களின் இயற்கை முழு நோக்கமாதல் கொண்டு இறைவன்பாற் போந்து அவன் அருள்பெற்று எனக்கு இன்பம் அளிக்க மீள்கவென அன்பைத் திரும்பிவரப்பணித்ததல்லது பிறிதன்றாகலானும், அங்ஙனம் ஏவப்பெறும் அன்புதானும், உயிரொடு, உளத்தொடு ஏனை அகத்துப் புறத்துப் பொருள்களொடு வேறறக்கலந்து எல்லாமறிந்தியற்றி நிற்கும் நிகரற்ற பெருங்கள்வனை முதல்வனை அங்கின்ற நிலையிலேயே அடைந்து அருட்பேறு பெறுதலின் தன்பண்பியாகிய உயிரின் நீங்கிப் பெயர்ந்து சேய்மைக்கட்சேறல் இன்மையானும், அன்பைத் தூதுய்த்தல் அமையாதென்கையே அமையாதென மறுக்க. பண்பியாகிய உயிரையே இறைவற்குக் காணிக்கை தரும் நிலையில் அதன் பண்பாகிய அன்பைச் செலுத்தல் பொருந்தாதோ? இவ்வாற்றால் அன்பைத் தூதுவிடுதல் பற்றி வேறுகருதல் ஆன்றோர் துணிபன்மை தேற்றப்பெற்றது.

---

உ

## தஞ்சை, கரந்தைத் தமிழ்க்கல்லூரித் தலைவர்
## ஸ்ரீமான் நாவலர்
## ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
## அருளியது.

தாங்கள் இயற்றிய அன்பு விடு தூது என்னும் நூலும், எழுதிய கடிதமும் வரப்பெற்றேன். அன்பு விடு தூதினை முழுதும் படித்து இன்புற்றேன். சொன்னயம் பொருணயங்களாலும் கற்பனையாலும் இந்நூல் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலாயினார் பனுவல்களை யொத்து விளங்குகிறது. முருகப்பிரான் பால் உருகிய அன்பு பெருகி வழிந்ததே இப்பிரபந்த மென்றலும் சாலும். இஃது அன்பு சிறிது மில்லாத எனக்கே அதனை அரும்புவித்து இன்பம் நல்குவதெனின், ஏனை நன்மக்கட்கு எத்துணை அன்பும் இன்பமும் பெருக்குவதாமெனல் கூறவேண்டா. முருகப்பிரானைத் தங்கள்பாற் சேர்ப்பித்தற்குரிய இத்தூது இதனைக் கண்ணுறுவோர் யாவருள்ளத்தும் தங்களைச் சேர்ப்பித்தல் ஒருதலை. மன்பதைகட்கு அன்பினை வழங்கும் கடவுட் டோராகிய நுங்கட்கு உலகம் கடமைப்பாடுடையது.

உ

## சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் புலவர் உயர்திரு ஆசிரியர் இளவழகனார் அவர்கள் அருளியது.

புதுவைத் திருவாளர் P. N. இராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் இயற்றிய **அன்பு விடு தூது** என்னும் அன்பு நிறைந்த தமிழ்மாலை நூலை முழுவதும் படித்துப் பார்த்தேன். தமிழ்மொழியில் இதுகாறும் வெளிவந்திருக்கும் அழகிய தூதுநூல்களுள் ஒன்றாய் ஈது அமையத்தக்கதென்பது, இதன் அமைப்பானும் பொருளானும் சுவையானும் கவிநலனானும் நன்கு விளங்குகின்றது.

தூது விடுதற்குரிய பொருளாக இவ்வாசிரியர் அன்பினைத் தேர்ந்தது மிகவுங் கருத்தூன்றுதற்குரியது. உண்மையில், அன்பொளியே யாண்டுஞ் சூழவிட்டு விரிந்து விரிந்து பரவி எதனையும் எவரையும் தன்கண் ஈர்க்க வல்லது. பிறபொருள்களைத் தூதுவிடுதலென்பது முகமனேயல்லால், உண்மையன்று. நெஞ்சமும், அன்பு கிளர்ந்தெழுந்துணையும் உதவிப் பின் மறைந்துபோவதொன்று. ஆதலாற், பட்டாங்கு கிளக்கும் இவ் விழுமிய தூதுநூல், இதன் ஆசிரியரது நுண்மாண் உண்மையையே இனிது புலப்படுக்கின்றதென்று தோற்றுகின்றது. அன்பு, தலைவியின் ஆற்றாமையைப் புலப்படுத்தி இறைவன் திருவுள்ளத்தைப் பெற்றுவருதலென்பது இதன் கருத்து.

இந்நூல், திருமயிலம் என்னுந் திருப்பதியில் விளங்கும் முருகக்கடவுளின் திருவருள் கருதியது. ஆதலால் இது, திருமயிலத்தின் மாண்பும் ஆண்டெழுந்தருளியிருக்குஞ் சிவத்திரு சிவஞானபாலைய அடிகள் திருத்தொண்டுகளும்விளக்குமுகத்தாற் சிற்சில வரலாற்றுப் பகுதிகளும் உட்கொண்டதாய் விளங்குகின்றது.

நூலின் முகப்பில் நூலின்பொருட்சுருக்கமும், நூன்முழுமையும் அவ்வப் பக்கத்தின் அடியில் விளக்கமான உரைக்குறிப்புக்களும் நல்ல உரை நடையில் எழுதிச் சேர்க்கப்பட்டிருப்பது, கற்பார்க்கு மிகவும் உதவியாகும்.

மெய்யன்பும் தமிழ்நேயமும் உருக்கமும் எளிமை இனிமைகளுமுடைய இந்நூல் தமிழ்க்கு ஒரு நல்விருந்தேயாமெனக.

---

## மதுரை, திருவள்ளுவர் நிலையம்
## கவிராஜ பண்டிதர்
## ஸ்ரீ ஜெகவீர பாண்டியன் அவர்கள்
## அருளியது.

### ஆசிரிய விருத்தம்.

அருள்வள்ளல் மயில்வரைவாழ் அயில்வீரன் ஆனந்த அமுதமான
பெருவெள்ளம் தனிலாடிப் பேரின்ப முறஅன்பு விடுதூ தென்னும்
ஒருவள்ள மொளிர்நூலை உலகுவப்ப வுதவினன் உயிர்பாலென்றும்
திருவுள்ளம் இரங்கியருள் புதுவை மாணிக்கமெனும் சீர்மை
[யோனே.

"அன்பு விடு தூது" அறிவு நலஞ்சுரந்துள்ளது. குறிப்புரை நன்கு அமைந்திருக்கிறது. தங்களுடைய உள்ளப்பண்பும், எம்பெருமான் பாலுள்ள அன்பும், தமிழார்வமும், இந்நூல் மூலம் தெரிந்து உவகைமீக்கூர்ந்தேன்.

---

ஸ்ரீ

## புதுவை கல்வே கல்லூரி ஆசிரியர்.
## பண்டித ஸ்ரீ. அ. நாராயணசாமிநாயுடு அவர்கள்
## இயற்றியது

நேரிசையாசிரியப்பா.

திருவளர் மருமத் துருவளர் பெருமான்
மருவளர் மருகன், மயிலமால் வரையான்,
முருகன் வள்ளி பெருகெழில் குஞ்சரி
மருவியும் விகார மருவா மைந்தன்
ஒருவா வைந்தொழில் பெருக வியற்றியும்
ஒருவிய வுள்ளத் துரவோ னொருவன்,
நிலம்நீர் வளிகால் நீள்விசும் பிருசுடர்
நலனுறு மான்மா நாலிரண் டுருவு
மேவுரு வத்து வாவுரு வாறுஞ்
சாரவைந் தொழிற்கு மூலகா ரணமா
மொன்பா னுருவு மன்பான் விரவியு
முருவொன் றில்லான், கருவொன் றில்லான்,
முத்தி விழையுநர் பத்திமை யென்னும்
பொருணயக் தமருங் கருணையெம் பெருமான்;
தன்பால் மன்னுறத் துன்னிய பரிவால்
அன்பை விளித்தே யண்ணறன் பாற்செல
இன்பின் மொழிந்தன னினியது தாகென

நாவலர் போற்று மாநில மடந்தையி
னெழின்முக மென்ன விலங்குதென் றமிழ்நாட்
டொண்பிறை நுதல்போன் றொளிர்திருத் தொண்டை
பாண்டிகழ் மண்டல மாண்புறு புண்டர
மாமென விளங்கி யலர்கதிர் பகலவற்
கென்செய்கோ வென்ன வெங்கணு மோடிக்
கரத்தற் கெண்ணியுங் கைகூ டாமையின்
உறப்பரி வாற்று துய்தற் குன்னிக்
கறைபெறு கச்சள மறைந்துறை தருதல்போல்
தழைத்துப் பருத்து மழைமுகி றடுத்து
நிழற்றும் பாதவ நீள்கிளைத் துணர்பொழி
தொடைநறு வேற்றுத் துவர்க்கா டிதெனப்
பம்புறும் பொழில்கள் பல்வளஞ் செறிந்துங்
கன்னலுங் கமுகுங் கதலியும் பலவுஞ்
செந்நெலும் பொலியுஞ் சீர்சால் புதுவை
நன்னகர் பிறங்க நன்கவ தரித்த
வேளாண் மரபின் வீங்குயர் வீர
சைவ சமயந் தழைத்திட வுஞற்று
முத்தமச் செம்மல், ஓங்கு நடேசப்
பிள்ளையுந் தாய்தன பாக்கியத் தம்மையுஞ்
செய்பெருந் தவமே திரண்டொரு வடிவாய்
வந்ததே யொப்ப மைவணன் கருணையுஞ்
சாந்தமு மன்பும் வாய்ந்தநற் சீலமும்
வாய்மை யடக்கம் வண்மையோ டெல்லாச்
சால்பும் பெற்றுச் சார்ந்தவர் தம்மொடு

கன்னலின் சாறே! கனிபிழி ரசமோ!
வென்னவே மொழியு மின்சொலும் வாய்ந்து
கனவிலுங் கடுஞ்சொல் கரைதலில் வாயான்
வெள்ளிய நீறு விளங்கிடு நுதலோன்
உருத்திர வக்கம் பொருந்துகந் தரத்தோன்
தொல்காப் பியந்தொகை நூலொடு பத்துப்
பாட்டும் பஞ்ச காவிய முதலவாம்
தெள்ளிய தமிழ்நூல் தெளிந்திடு திறலோன்
யாப்புணர் துவத்தலின் பகளறு சீர்த்தியான்
தமிழ்பயில் மாணவர் தமக்கெலா நிதியோன்
றுற்றிடத் துதவு முத்தமன் புலவர்
தம்மொடு சார்ந்துறை தகைமையிற் சிறந்தோன்
அன்பு மாணிக்க மாகு
மிராச மாணிக்க மெனும்புல வோனே.

உ

திருமயிலம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க்கல்லூரித் தமிழ் விரிவுரைத் தலைவர்
வித்வான் ஸ்ரீ. S. துரைசாமி ஐயர் அளித்தது

நேரிசையாசிரியம்.

பொன்வளர் புகழ்சால் மயிலமால் வரைமிசை
மின்னொளிர் வேலோடும் விளங்குஞ் செவ்வேள்
தன்மேல் தவப்பல சான்றோர் விரும்பத்
தோன்றுபடு சிறப்பின் வென்றியோர் குழுமிய
புதுவை நிலைஇய பொற்புடைப் புனிதன்
இராசமா ணிக்கனு ரேனுமுயர் தவத்தோன்
இன்புறுத் தின்சொற் கெழீஇய தொடரால்
அன்புவிடு தூதெனு மருநூல் யாற்று
மென்புனல் ஒழுக்கென விளம்பினன்
வழுத்துநன் னூலோடும் வாழியர் பெரிதே.

---

புதுவை, தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ. கோ. இராமாநுஜசெட்டியார் அவர்கள்
அளித்தது.

நேரிசைவெண்பா

பூவார் மயிலப் பொருப்பின்வேண் மேற்புதுவை
மாவார் மதிராஜ மாணிக்கப்—பாவாணன்
அன்புவிடு தூதா மருநூ லிழைத்திட்டான்
மன்பவநோய்க் கின்மருந்தா மற்று.

---

ஸ்ரீ

கடலூர், St. Joseph's High School

தமிழ்ப்பண்டிதர்

## திரு. சோ. இராமாநுஜன் அவர்கள்

## இயற்றியது.

நேரிசையாசிரியம்

சீர்மிகு பெருவளஞ் சிறந்த புதுவையில்
ஏர்மிகும் இராச மாணிக்க னென்னும்
நட்புடைச் சான்றோன் நயமிகு மின்சொலன்
பெட்புடை யாளன் பெருமை மிகுத்த
அன்புவிடு தூதுநூ லாக்கி யளித்தனன்
மன்புகழ் மஞ்சையின் மதிநலஞ் சான்ற
ஸ்ரீநிவா ஸப்பெயர்ச் செம்மல்செய் யுரையொடும்
எவரும் பயின்றிங் கின்புற
மாமயில் வரையமர் முருகடி மலர்க்கே.

———

**K. SAMBANDAM,** B.A., L.T., CUDDALORE N. T.
Dy. Inspector of schools. 28th September, 42.

The "MESSAGE OF LOVE" as composed by Vidwan Thiruvalar **P. N. Rajamanickam Pillai** of Pondicheri, is an esteemed Jewel in Modern Tamil Literature, devoted to the singing of the greatness of Love, of the glory of Lord Muruga, and of the thrilling Atmic experiences of His faithful devotees. Aptness of verse form, and of diction, together with richness of imagery and thought have made the rendering natural and effective.

The foot-notes along with references to allusions and the numerous elucidative quotations from standard literature so exhaustively and superbly compiled by Vidwan Thiruvalar **T. A. Sreenivasa Aiyangar**, St. Joseph's High school, Cuddalore, form a very good commentary, quite valuable to the reader to get a true and full insight into the sublime thoughts, the author has attempted to popularise.

The author and the commentator have thus so nobly combined their talents and made available to the Tamil world this beautiful work of art, which, I believe would be welcome, specially in these days of world confusion and turmoil. May this, by the Grace, of the Lord, beget peace through Love, and Love through peace, is my sincere wish and prayer.

—— (Sd.) *K. Sambandam.*

# நூலின் பொருட் சுருக்கம்

## 1-முதல் 5-ஆவது கண்ணிவரை

அன்பின் தோற்றமும் வளர்ச்சியும்

அன்பே, உலகில் தாய்மார்களிடத்துப் பிறந்து, தந்தை மாரிடத்துத் தவழ்ந்து, துணைவர்களுடன் விளையாடி, நேயர்களிடம் வளர்ந்து, காதலர்களிடம் வாலிபமடைந்து, சேய்களிடத்து முதுமையடைந்து, உறவினரிடத்தும் பல்வேறு உயிர்களிடத்தும் என்றும் உலாவிக்கொண்டிருக்கின்றாய்.

## 6—47 கண்ணிவரை

அன்பின் பெருமை

அன்பே, உலகில் காதல், நட்பு, பத்தி, அருள், ஈகை, இரக்கம் முதலியன உன்னையன்றி உள்ளனவோ? இல்லை. நற்குணங்களை யெல்லாம் மலர்களாகவும் உன்னை யொரு நாராகவுங் கொள்ளலாம். அங்ஙனம் கொண்டமையால்தான் உன்னை நார் (நார்—அன்பு) என்றழைத்தார்கள் பெரியோர்கள். பொறுமை என்பது ஒருவருக்குண்டாயின் அவர்களிடம் நீ இருப்பது நிச்சயம். நீயும் பொறுமையும் வேறு அல்ல என்பதை யறிந்தவர்கள், 'பரிவு' என்று நின்னை யழைப்பார்கள் (பரிவு—பொறுமை, அன்பு). உயிர்களுடைய

உள்ளங்களைக் குளிர்விக்கின்றமையால், 'ஈரம்' என்று ஒரு பெயர் உனக்கு வந்தது. (ஈரம்-குளிர்ச்சி, அன்பு). உலகில் ஒருவருக்கொருவர் யாதேனும் ஒன்று வழங்குகிறார்களல்லவா? அவ்வாறு வழங்குவது அன்பாகிய நீயல்லாமல் நடைபெறுமா? பெறாது. அதனால், நீ அளித்தல் செய்யுந்தன்மையை என்பதுதோன்ற உனக்கு'அளி' என்று ஓர் பெயர் வழங்குகின்றது. (அளி-கொடை, அன்பு). அன்றியும், உயிர்களை உலகப்பொருள்களில் பற்று வைக்குமாறு செய்கின்றனை; ஆதலினாற்றான் 'பற்று' என்று உன்னைப் பெரியோர்கள் பகர்கின்றார்கள். (பற்று-ஆசை, அன்பு). தொழில்கள் ஐவகைப் படும். ஐந்து மூர்த்திகளும் படைத்தல் முதலிய ஐந்தும் செய்கிறார்கள். அவர்கள் அங்ஙனம் தொழில் செய்வதற்குக் காரணம் அவர்கள் உள்ளத்தில் நீ புகுந்து கொண்டிருக்கின்றமையே யாகும். அன்பாகிய நீ பிரிந்தால் தொழில்கள் நடவா. நீ ஒன்று பட்டால் தொழில் நடக்கும். ஒன்றுபட்டிருப்பதை உன் பெயர்களில் ஒன்றாகிய 'புரிவு' என்பது விளக்குகிறது. (புரிவு—செய்கை, அன்பு). உலகில்ஆடவர்களிடமிருக்கும் ஆண்மைக்குணமும் உன்னுடையதே யாகும். (ஆணம்—ஆண்மை, அன்பு.)நேயமே, உணவுக்குச்சுவைகொடுப்பதும் நீதான்; உயிர்களுக்கு நற்கதி கொடுப்பதும் நீ தான். (நேயம்–நெய், அன்பு). அன்புடையனாயின் நற்கதியுடையனாவான்). 'ஆசை' யென்று வேறு பெயர் வைத்துக்

கொண்டு உயிர்களை இறப்பிலும், பிறப்பிலும் உழல்விக்கிருய். உழலும் உயிர்கட்கு வீட்டின்பமும் நீயே அளிக்கிருய். அன்பே, நீ இல்லையேல் இன்பம் எங்கே? ஆனந்தந்தான் எங்கே? அன்பே, நீயே சிவம்! நீயே பரம்பொருள். அகவுணர்ச்சிகளுள் உன்போற் பெரியதோர் விழுமிய உணர்ச்சி வேறென்றுண்டோ! அன்பே, நீ சிவமாகவும் உயிராகவும் பாசமாகவும் உள்ளனை. ஆக, மூன்று பொருளுமே நீயானுய். முப்பொருளுக்கு வேருகியதோர் பொருளிருப்பின் அன்ரே அப்பொருளோடு உன்னை ஒப்பிடலாம். உண்மைப்பொருளே, (அ–ன்–பு). உயிர் எழுத்தெல்லாம் நீ; அதனை அகரம் தெரிவிக்கிறது. மெய்யெழுத்தெல்லாம் நீ; அதனை னகரம் தெரிவிக்கிறது. சார்பெழுத்தெல்லாம் நீ; அதனைப் புகரம் தெரிவிக்கிறது. எனவே தமிழ் நீ; தொல்காப்பிய நூலில் 'அகரமுதல் னகர விறுவாய் முப்பஃதென்ப; சார்ந்து வரன்மரபின் மூன்றலங்கடையே' என்றமையாலும், இறையனுர்அகப்பொருளில் முதலில் அன்பெனவே தொடங்கி, இறுவாயின் கண்ணும் அன்பையே கூறி முடித்தலாலும் தமிழே நீ என்னத் தடையென்? அன்பே, நீ ஓங்கார மாகி உலகெலாம் நிறைந்திருக்கிருய்; அதனை அகரம்அறிவிக்கிறது.(அ-உ-ம்-ஓம்); உன்னைப் புகழாத கருத்துடைய பெரியோர் எந்நாட்டில் உள்ளார்கள்? அன்பாகிய உன்னைக் கொடுத்தே உன்னை வாங்கலாம். வேறு பொன் கொடுத்துப் பெறமுடியுமா?

மந்திரங்களெல்லாம் உன் பெயரில் உள்ள மூன்றெழுத்துக்களில் அடங்கிவிடும். உன் பெயரைச் சொன்னாலும் துன்பம் பறந்தோடும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் முதற்கண் உன்னையே யடைந்தனர். பின்னரே, நீயாகவே உள்ள சிவனையும் திருமாலையும் கண்டார்கள். முதற்கண் உன்னைத் துணைக்கொண்டார்கள் என்பதற்கு அவர்களை உலகினர் "அன்பர் அன்பர்" அதாவது அன்பர்துணைக்கொண்டவர்கள் என்பதனால் அறியலாம். நீ, அடைந்தவர்களை யாதரிக்கின்றமையால் யானும் உன்னை யடைந்தேன். அன்பே, உலகில் பறக்க முடியாத பச்சிளம்பார்ப்புக்கு உணவு தேடிக் கொண்டு போய் ஊட்டுகிற அத் தாய்ப்பறவையின் பண்பு நின்னுடையதன்றோ? பறவைக்குஞ்சுகளின்மேற் பாயுங் கருடன்முதலிய கொடிய பறவைகளுக்குத் தாய்ப்பறவைகள் உணவாகித் தம் குஞ்சுகளைக் காப்பாற்றுகின்றன. அச்செயல் நின்னுடையதன்றோ? பூனை தன்குட்டியை வாயில் கௌவிக்கொண்டு செல்லுஞ் செயலிலும், பெண்யானையைக் களிறு புணருகின்ற செயலிலும், குரங்குக் குட்டிகள் தாய்முலையைப்பற்றிக் கிடக்குந் திறத்திலும், மாலையில் கன்றுநினைந் தோடிவரும் பசுவின் உள்ள நெகிழ்ச்சியிலும் கடல்போன்ற—ஆழ்ந்த—அகன்ற—நீயன்றோ விளங்குகிறாய். மலையினின்று உருண்டு புரண்டு குறிஞ்சிநிலத்தில் பல கிளைகளாகப் பிரிந்து வயல்களிலுள்ள பயிர்களைச் செழிப்பித்து, செழித்த பயிர்கள்

தரும் நெல்முதலிய பயன்களை எவ்வுயிர்களுக்கும் ஊட்டி மகிழ்விக்கின்ற நதிகளாகிய அன்பே, கடலின்கண்ணுள்ள நீரை முகந்து, காற்றால் எழுந்து, கறுத்து, ஆகாயத்தே பந்தர் அமைத்ததுபோல விளங்கி இடித்து மின்னிப் பொழிகின்ற (அன்பாகிய) மேகமே, கண்ணப்ப நாயனார்திருவடிகள் இறைவன் திருமுகத்திற் படுவதற்கும், சொக்கேசப்பெருமான் பாண்டியன் கைப்பிரம்பின் அடியைப் பெறுதற்கும், இறைவன், நள்ளிரவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தூதுவராகப் பரவையில்லஞ் சேர்வதற்கும் காரணமாக இருந்தது நீயன்றோ? அங்ஙனமே சொக்கேசப் பெருமான் திருச்சிரத்தில் விறகுகட்டினைச் சுமக்கச் செய்ததும் நீயன்றோ? எல்லாத் திறனுமுடைய அன்பே!

### 48—78 முருகன் சிறப்பு

நித்தியனாய்ப் பரிபூரணனாய் நிமலனாய்ச்சத்தியனாய்த் தனியனாய்ச் சாத்துவிகம்முதலிய குணங்களுடையவனாய் விளங்குகின்றவன் கந்தப் பெருமான்.

### 79–84 தசாங்கம்

மயிலாசலம் என்னுந் திருமலையையுடையவன்; வராகநதியுடையவன் ; தொண்டைநாடுடையவன் ; மயிலம் என்னுந் திருப்பதியையுடையவன்; கடம்பமாலை யுடையவன்; வெள்ளை வாரணமுடையவன்; மயில்

வாகனத்தையுடையவன்; சேவற் கொடியுடையவன், மூன்று முரசங்களையுடையவன்; ஆணையை யுடையவன்.

### 85–111 வழிபடுவோர்.

மூவர்களும் முனிவர்களும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், பதினெண் கணங்களும், அகத்தியர், நக்கீரர், குமரகுருபரர், அருணகிரியார் முதலிய பெரியோர்களும்; ஆதி பாலையசுவாமிகளும், அவர் பின் வந்தவர்களும் பதினெட்டாம்பட்டத்தில் விளங்குகின்ற ஸ்ரீசிவஞான பாலையசுவாமிகளும் பிறரும் போற்றித் துதிப்பதனுல் சந்நிதியே களித்தலைச் செய்கின்ற உள்ளங்களிக்கின்ற முருகப்பெருமான் ஒருநாள், பங்குனி யுத்திரத்தன்று, ஆகம முறைப்படி அபிடேகம் முதலியன செய்து, வள்ளி தெய்வயானையாருடன் மயில்வாகனத்தில் வீற்றிருந்து பவனி வரலும், அன்பர் குழாம், இந்திரனுக்குப் பட்டம் அளித்தவன் வந்தான்; செந்தமிழ்ப் பரமாசாரியன் வந்தான்; என்று பலவாறு புகழ் விளங்கப் பராக்குக்கூறி ஆர்த்தனர். துந்துபியும் முரசம்முதலிய பல்வேறு வாச்சியங்களும், இயம்பின. அடியார்கள் இன்னிசைநரம்புளரப் பண் பாடினர். சாமரைகள் வழங்கப்பட்டன. பதுமினி சாதிப்பெண்கள் தாமரைமலர்களைத் தூவினர். வெவ்வேறு வகையான சுடர்கள் சுடர்ந்தன. சூரியன் கடலின்மேற் சென்ருலொப்பச் செவ்வேள் நீலமயிலின் மேல் தோன்றிக் காட்சியளித்தருளினுன்.

## 111—119

### திருக்காட்சி

அன்பே, அக் காட்சியைக் கண்டேன். ஆனந்தங் கொண்டேன். அவன் கேசாதி பாத தரிசனங் கண்டேன். மிகவுங் காதலானேன். அப்போது அவன் பவனி முடிந்து திருக்கோயிலுக்குள் புகுந்தான். என் மனமும் அவன்பால் சென்றுவிட்டது.

## 120—158

### தலைவியினிலை

அன்பே, பெயர்ச்சொற் போல யாதொரு விகாரமும் இல்லாமல் இருந்தேன். இப்போழ்து அவனைக் கண்ட காரணத்தினுல் எழுவாயாகி வேற்றுமைப்பட்டேன். அவனைக் காணுமுன்னே ணகர எழுத்தைப் போல இருந்தேன். அவன் ககரம் போல என்னைச் சந்தித்தான். யான் டகரமாக மாறினேன். ஆனுல் அவன் ககரம் போல் இயல்பாகவே இருக்கிறுன். அவனே மற்றையோருடன் விளங்கிக்கொண்டிருக்கிறுன். யானே பல எழுத்துக்கள் போலத் தோழியர்களிருந்தும், ஙகரத்தைப்போலத் தனித்தவளானேன். அவர்களுடன் பழக மனமில்லை. மாலைப்பாம்பும், தென்றலும், மதியரக்கனும் குயிலும் மதனும் தாயும் செவிலியும் தோழிமார்களும் பிறரும் அயர்ந்து கண் வளர்கின்றனர். ஆனுல்,

'நீயுமிப்பாவியுமாய் நிற்கின்றேம்'

உன்னிலுந்துணை, அன்பே, உலகில் எனக்கு யார் உளர்? எனக்கு விடமேற்றியவன் — நெருப்புப்போல் நிறத்தவன்—அவனும் வள்ளிக்காக முன்னே அனுப வித்தவனே. அவனை மோகித்தேன். அவ் வருத்தம் யானே அறிவேன்; அவன் வருவான் என்றுகருதி மாலை கட்டி வைத்திருப்பேன். சூடாமலே அது வாடிவிடும். புகழ்மாலை பாடுவேன்; பாட்டு முடியாமலே நின்று விடும். ஏனெனின் உணர்ச்சியிழந்து விடுவேன். குறத்தி குறிபார்ப்பதிலும், பல்லி சொல்லுக்குப் பல னறிவதிலும், இரேகையறிவதிலும், சோதிடம் பார்ப்ப திலும், காதலன் திருவருள் பெறற்குரிய விரதாதிகளி லும், காலங்கழிக்கிறேன். அவனுருவே எங்கும் தோன்றுகின்றது; கண்கள் நீர்பெருக்குகின்றன. இதயம் துடிக்கின்றது. இவற்றிற்கெல்லாம் அவனே மருந்தா வான். அவனையன்றி இன்புறுத்தும் பொருள் வேறு ஒன்று உலகில் இல்லை. கல்வியறிவினால் என்னைத் தேற் றிக்கொள்ள இயலவில்லை. கவலை தீர்வதற்கு அவன் கடைநோக்கந்தான் தேவை. ஆதலின் இரும்பு மனம் எனினும் இளக்கிக் கரும்பிரசமாகக் கரைக்குந் திரு வன்பே! "நீயே எனக்கா நெடுந்தூது செல்கிற்பாய்".

## 160—172

பிறபொருள் தூதிற்சிறவாதென்றல்

நெஞ்சு, தென்றல், கிளி, அன்னம், மயில், வண்டு, பூவை, குயில், மான், மேகம், மற்றெவை சென்றாலும்

உன்னைத் துணையாகக்கொண்டே செல்கின்றன. (அதாவது அன்பின்றி அவை செல்லமாட்டா என்பதாம்). ஆதலால் அவைகளைக்காட்டிலும் நீயே தகுதியுடையை; போகின்ற வழியில்,

## 173—183 தீயனவிலக்கல்

புலாலுண்பவர், சிவஞானிகளை நிந்தனை செய்பவர், தீயவியல்புள்ள பூசகர்கள், தாய்த்துரோகிகள், வஞ்சகப் பெண்டிர் வலைப்படுவோர்கள், கரவாதுவந்தளிக்குந்தன்மையற்ற பாவியர், தூதிற் பிழைபாடு புரிவோர்கள், கருமிகள், தமிழ் விரும்பாதவர்கள், கூலி குறைப்பவர்கள், கூலி அதிகம் கேட்பவர்கள் ஆகிய அன்பற்றவர்களிடம் சாராதே. (இவர்களிடம் அன்பில்லை என்பதாம்).

## 184—185 இடமும் காலமுமறிகவெனல்

மலைத்தேன் தெரியுமல்லவா? அத்தேனினது இருப்புக்கு அல்லது பெருமைக்கு உரியவையாக உள்ளவைகளில் இனிப்பு ஒன்று. அஃது ஓர் நலன். தன்னை உண்டார்க்கு நரை, திரை, மூப்பு, மரணமுதலியவைகளை நீக்கும் பண்புடையது அமுதம். அப்பண்பே அதற்குச் செங்கோல். தேனின் நலனை அழித்து அமிர்தின் செங்கோலையும் வீழ்த்தித் தன் பண்பினால் வென்ற தமிழானது வேறு சிலருக்குத் தூதாய் வந்திருக்கும்.

அவ்விடத்தில் கந்தப்பெருமான்கனிவுகொண்டெழுந்தருளியிருப்பன். அவ்விடத்தில் நீ செல்லற்க. அவன் நின்மயமாயிருப்பன். நின்மலமாயிருப்பன். அதுவே சமயமாகக் கண்டு, தரிசித்து முக்கரணங்களாலும் வணங்கி, உருகி, அவனிடம் என்குறையை எடுத்துக்கூறு. கூறின் இரங்கியவன் திருமாலையை யருள்வன். அக் கடப்பமாலையை வாங்கிக்கொண்டு வந்து எனக்குத் தந்து காத்தருள்க.

அன்பே! அன்பே!!

பொருட்சுருக்கம் முற்றுப்பெற்றது.

# பொருளடக்கம்

———(0)———

கண்ணிகள்.

1—5 அன்பின் தோற்றமும் வளர்ச்சியும்.

6—47 அன்பின் பெருமை.

48—78 முருகன்சிறப்பு.

79—84 தசாங்கம்.

85—119 வழிபடுவோர்.

120—159 தலைவியினிலை.

160—172 பிறபொருள் தூதிற்சிறவா தென்றல்

173—183 தீச்சார்பு விலக்கெனல்.

184—இடமும் காலமும் அறிக எனல்.

185—வேண்டுகோள்.

## நூல் மூலத்தின் பிழை திருத்தம்.

| நூற் பக்கம் | வரி எண் | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 3 | மாருலகிலற் | மாருலகிற் |
| 13 | 5 | கொன்ளாமே | கொள்ளாமே |
| 41 | 2 | நீண்மறைகன் | நீண்மறைகள் |
| 47 | 4 | கொன்ளற் | கொள்ளற் |
| 66 | 4 | அல்ல்ல் | அல்லல் |
| 72 | 6 | என்றுரை | ஏன்றுரை |

உ

செவ்வேள் துணை.

# அன்பு விடு தூது

## காப்பு வெண்பா

மன்பதைக்கோ ரீசன் மயில்முருகற் கின்புடைய
அன்புவிடு தூதிற் கருங்கருணை—நன்றுசெயும்
புத்தி மகிழ்மயிலப் பூதரத்தோங் தச்சியில்வாழ்
சித்தி விநாயகன்றாட் சேர்.

---

## குறிப்புரை

**அன்புவிடுதூது**—இது நூற்பெயர்; இந்நூற்கு இப்பெயர் அமைந்த தன்மையை இதன் முகவுரையான் அறிக. **அன்பு**—தான்வேட்ட பொருளின்கண் தோன்றும் உள்ளநெகிழ்ச்சி. இஃது உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப் படாதது. ‘ஒப்பும் உருவும்..........காட்டலாகாப்பொருள என்ப” தொல்: பொ: பொரு—53.

**தூது**—“பயிறருங் கலிவெண் பாவி னலே—உயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையும் — சந்தியின் விடுத்தல் முன்னுற தூதெனப்—பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே” என்ற இலக்கணவிளக்கச் சூத்திரத்தால் விளங்கும்.

### பாட்டு.

**மன்பதை**—உயிர்ப்பன்மை; மக்கட்டொகுதி. “மன்பதை காக்கும் நின்புரைமை நோக்காது” புறம்: 210; “மன்பதைக் கெல்லாந்தானாய்” புறம்: 356.

## நூல்

### கலிவெண்பா

அன்பின் தோற்றமும் வளர்ச்சியும்

**சீர்கொண்ட அன்பே செயங்கொண்ட அன்பேமெய்ப்
பேர்கொண்ட அன்பே பிரியமே—ஏர்கொண்ட** 1

---

மயில்—ஆதிமயில்; இந்திரமயில்; அசுரமயில் என்பன

முருகன்—இது இத்தேவுக்கு உகந்த பெயராம். "அரும் பெறல் மரபின் பெரும்பெயர் முருக" திருமுருகு—269.

இன்புடைய— இறவாத இன்பு; நன்று—பெரிது "நன்று பெரிதாகும்" தொல்: சொல்: உரி: 337. பூதரம்—மலை.

சித்திவிநாயகன்— இத்தல விநாயகர் திருப்பெயர் 'முத்தி விழைவிய முனிவர்க்கு அருள்புரிந்து மயிலமலை முகட்டில்வாழும் சித்திவிநாயகன்" மயூராசலபுராணம்: பாயிரம்-6

---

## நூல்

1 முதல் 5 கண்ணிகள் அன்பு தோன்றிவளர்தலை உணர்த்துவன.

1. சீர்— இது மங்கலமொழி; தெய்வத்தன்மைவாய்ந்த பெருமை; "சீர் பொன் பூமணி............செப்பு மங்கலமே' இலக்கண விளக்கம்—771. செயங்கொண்ட அன்பு— உடல்கொள் உயிர், பகையாகிய பாசத்தினை அன்பு கருவியாகக் கொண்டு வேறலின் இங்ஙனம் உபசரிக்கப்பட்டது. உடையானது, உடைமையின் மேலதாயிற்றென்க. மெய்ப்பேர்— அழியாப்புகழ்; உண்மைப்பொருளும் ஆம். "பெரும் பெயர் முருக" என்ற இடத்துப்போல. ஏர் — எழுச்சி.

தாயரிடை யேயுதித்தாய் தந்தையிடத் தேதவழ்ந்தாய்
ஓவா துடன்பிறந்தா ருடேநீ—தூய 2

விளையாட லேபுரிந்தாய் மெய்ந்நண்பர் தம்முட்
களையாம லேவளர்ந்தாய் கண்ணே—தொளையாத 3

முத்தேநற் காதலர்பால் முன்புதிகழ் வாலிபத்தை
யுற்றாய்நன் மக்க ளுழைமுதிர்வு—பெற்றாய்மற் 4

---

2. **உதித்து— தவழ்ந்து—விளையாடல்புரிந்து—வளர்ந்தாய்** எனமுடிக்க. **தாய்**—அன்புக்கு நிலைக்களமும் தோற்றிடமுமானவள். "தாயொக்கும் அன்பில்" — கம்பராமா. பால. அரசியற்படலம் 4. **ஓவாது**—இடையறாமல்; **தூய** — ஆடும் பருவத்திற் கள்ள உள்ளமின்மையான.

3. **மெய்ந்நண்பர்**— நம் ஆக்கத்தில் உண்மைக் கருத்துடைய நேசர். இவர்தம் இலக்கணங்களை நாலடி, குறள் முதலிய நூல்களால் அறியலாகும். **களையாமல்** — சோர்வுறாமல்; நீக்கமறும் உத்தம நண்பராகலின் இவர்தம் நட்புக்குக் களைப்பின்மை உளதாயிற்று. **கண்ணே**—மறம்—மருள்—வன்பு—நாகு முதலிய தீய நெறியிற்படாமல், அறம்—பொருள் — இன்பு—வீடு ஆகிய நன்னெறி காட்டலின் இந்திரியங்களுட் சிறந்த கண்ணாகக் கூறப்பட்டது.

4. **தொளையாத முத்தே**— துளைசெய்யப்படாத முத்தம் நிகர்க்கும் அன்பே. "உடுத்திரள் அனைய காட்சி.........வாழ்க்கை"—**திருவிளையாடற் புராணம்.** "தொளாத மாமணி" எனத் திருமாலைக் கூறுவர் ஸ்ரீ வேதாந்த தேசிகர். **காதலர்** — தலைவன் தலைவியர்; முன்பு—வலிமை; உழை—இடம்; "கண் கால்... இடப்பொருள் உருபே" **நன்னூல் 302. முதிர்வு** — முதிர்ச்சி "கடந்த யோகரும் கடப்பரோ மக்கள்மேற் காதல்" என்பதும் காண்க.

றுற்றா ரிடத்து முயிர்கள் பலவிடத்துஞ்
சற்றும் வழாது சரிக்கின்றாய்—பற்றுயிர்க்காம் 5

அன்பின்பெருமை

அன்பே உனையின்றி யாங்காத லுண்டுகொலோ ?
அன்பேநீ யல்லா தருநட்பு—மொன்றுண்டோ ? 6

பத்தி யருளீகை பல்லுயிர்கள் பாலிரக்கம்
ஒற்றுமையு முள்ளுறவு நீயன்றோ ?—முற்ற 7

---

5. மரத்தில் முதிர்ந்த கனி, தாழ்விலுள்ள பலவிடங்களிலும் உதிர்ந்து பயன் படுதல் போலவே காதலர் பால் வளர்ந்து மக்கள்மாட்டு முதிர்வுற்ற அன்பென்னும் கனியும் உற்றார் மற்றார் முதலிய பல உயிர்களிடமும் படிகின்றதென்க. இஃது, அன்பு அருளாகப் பரிணமித்தற்கண் நிகழும் இடைநிலை. பற்று—விடாநேயம்.

6. அன்பு முதன்மையாக, அதனிடமிருந்தே காதல் நட்பு முதலிய விளைவுகள் உண்டாகின்றன என்பது இக்கண்ணியின் கருத்து. “அன்பீனும் ஆர்வ முடைமை; அது வீனும்—நண்பென்னும் நாடாச்சிறப்பு” திருக்குறள்—74. “யாயும் யாயும் யாராகியரோ...........செம்புலப் பெய்ந்நீர்போல, அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே” என்ற பாட்டும் இதனை வலியுறுத்தும்.

7. முத்திவிருப்புடையோர், கடவுளிடத்து அன்பும் உயிர்களிடத்து அருளும் பாராட்டற் கடப்பாடுடையாராகலின் ‘பத்தியருள்’ என அடுக்கப்பட்டது. “வந்தித்து நின்னை மறவாக் கடனாகச் சிந்தித்து நிற்க அருள் செய்யாய் பராபரமே”; “எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவுநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே” என்ற தாயுமானார் வரங்களும் காண்க. ஈகை — வறியராய் எற்றார்க்கு மாற்றாது கொடுத்தல்; இது மறுமை நோக்கியது. உள்உறவு — அந்தரங்க விசுவாசமுடைய உறவு; ஒருவரை யொருவர் எஞ்ஞான்றும் எண்ணி யொழுகும் உறவுமாம்.

உணர்ந்தே மிவைகளைநீ யொன்றாகக் கட்டல்
உணர்ந்தாரே நார்என் றுரைத்தார்—வணங்கு 8

பொறுமைக்குந் நீயே புகலிடமாய் நின்றாய்
அருமையறிந் தேபரிவென் றுய்ந்தோ—ரறைகின்றார் 9

பாருயிர்க்குத் தண்மை பலவகையாற் செய்வதனால்
ஈரமென்றோர் பேர்புனைந்தாய் என்னமுதே—யாரும் 10

---

8. அன்பின் பல பெயர்களுள் 'நார்' என்ற பெயர்க்குக் காரணம் கூறுவது இது. பல்வகை மலர்களையும் பிணித்து நிற்கும் நார் போலப் பல்வகைப் பண்புகளையும் உயிர்களையும் பிணித்து நிற்பது அன்பேயாகும்.

9. வணங்கு பொறுமை:—பற்றலரையும் வியந்து வணங்கச் செய்யும் இயல்புடைய பொறுமை. "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் — தகுதியான் வென்றுவிடல்". — குறள் 158 நீயே — ஏகாரம் தேற்றம்; "தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே — ஈற்றசை இவ்வைந்து ஏகாரம்மே" தொல். சொல் — 252. புகல் இடம் — புகுதற்காமிடம்; சிறப்பாகச் சொல்லப்படும் இடம் எனினும் ஆம். பரிவு — தாங்குதல்.

10. பார்—உலகம்; தண்மை—குளிர்ச்சி; அன்பு காரணமாக இன்சொற் பிறந்து பிறர்நெஞ்சின்கண் உள்ள கோபத்தினையும், தாபத்தினையும் ஆறச்செய்தலால் ஈரம் என அன்பு விதக்கப்பட்டது. "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" குறள் -91. அமுது—உணவு; உயிர்க்கு ஆக்கம் தருதலின் அமுதென அன்பு கூறப்பட்டது.

கொடுக்கும் கொடையுள் குணமே யதறு
லடுக்கும் நினக்(கு)அளிஎன் ருர்பேர்—படைப்பிலுள 11

அண்டவுயி ரத்தனையு மாருலகிலற் பற்றுவிக்கக்
கண்டவர்கள் பற்(று) என்று கண்டிசைத்தார்—கொண்ட

---

11. யாரும்—எவ்வகையினரும்; கொடுக்கும் கொடை—உடற்கொடை; பொருட்கொடை; உயிர்க்கொடை என்பன. “அன்பு இல்லார் எல்லாம் தமக்குரியர்- அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு” என்ற குறள்-72 ன் உரையானறியலாம் அளி—அன்பு; தம் பாலுள்ளன யாவற்றையும் அளிக்கச் செய்தலின் அளி எனப்பட்டதூஉமாம். பிறர் துயரம் கண்டு அஞ்சி நெஞ்சு அளிதலாலும் இப்பெயர் பொருந்தும்.

12. அண்டம்—உலகு; ஆருலகிற்பற்றுவித்தல் — ஆன்மாக்கள் சென்ன மரணத்தையுறப் போக வாஞ்சையினைப் பண்ணுதல்; தன்னையும் தலைவனையும் அறியவொட்டாது மோகமாய் மறைத்தலுமாம். ஆணவம் ஒன்றே இங்ஙனம் அதோனியாமிகா சத்தியாயும், ஆவாரக சத்தியாயும் நின்று உயிர்களைத் தூய்மையுறுத்தும் என்பர் சித்தாந்தியர் “பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு”—குறள் 350. கண்டு—அனுபவித்து. கொண்ட—உயிர்களை நின்மலமாக்குதற் பொருட்டு மேற்கொண்ட.

புரிவென்ற செய்கைதனைப் போற்றுமைவர் செய்தல்
புரிவே யவனூட் புகுந்த—பரிசாற்றான் 13

ஆண்மை யுளக்கிருப்ப தாதலினா லாணமென
மாண்மை யுறுபேர் வழங்குவரே—மாண்புடைய 14

உண்டிக் குறுசுவையு மோங்குயிருக் கோர்கதியுங்
கண்டாரே நேயமெனக் கட்டுரைத்தார்—மண்டலத்தில்

---

13. புரிவு—தூய்மைசெய்தல்; அனாதிமல சகிதமானவும், சுதந்தர வீன சேதன மானவுமாகிய உயிர்களை அசேதன உலகத்திற் றோன்றச் செய்து அருள் புரிதல். செய்கை—படைப்பு முதலிய ஐந்தொழில்கள்; ஐவர்—ஐந்தொழிற்றலைவர்; ஐஞ்சத்தியரும் ஆம்; "மறைமுடிப் பொருளுட் பரைமுதற் கன்னியர் நிரைவினை". ஞாயிறுவாழ்த்து. "படைப்பது முலகமெல்லாம் பாதுகாத்தளித்தலும் பின்—துடைப்பது மறைத்தருளுனுந் தொல்லைய மலங்கள் யாப்பு—விடுப்பது மாகு மிவ்வைம் பயன்படு வினைக ளெல்லாம்—தடுப்பில னொருத்தன் தன்பெருந் தொழிலென் றோர்வாய்"—இது மிருகேந்திர சூத்திரப்போதன், சதமணிமாலை. புரிவே—அன்பே; ஈண்டு இரக்கமாம். பரிசு—தன்மை.

14. ஆண்மை—ஆளுந்தன்மை; ஆணம் — ஆண்மை; அன்பு. தெய்வ முதல் யாவரையும் உள்ளிருந்து ஆளுந்தன்மை அன்புக்கேயுள்ளது. மாண்மை—பெருமை;

15. உண்டிக்குச் சுவைதருவது நெய்; "நெய்யிலாஉண்டி பாழ்" என்பர்; நெய்யோடளாவிய உணவேயாயினும் விருந்தினர்க்கு அன்போடிடப் படாவிடில் பயனின்று. ஆகலின், அறுசுவையுண்டிக்கும் உறுசுவை தருவது அன்பேயாம். அதனால் வடநூலாரும் அறுசுவையொடு அன்பையுங்கூட்டிச் சுவை ஏழு என்றார். உயிர் நற்கதி எய்துதற்கும் கடவுள்நேயமே காரணமாதல் ஒருதலை. கட்டுரை—உறுதியுரை.

ஆசையெனும் பேர்கொண் டகிலவுயி ரத்தனையும்
பேசும் பிறப்பிறப்பாற் பேதுறுத்திப்—பாசமுடன் 16

நின்னைக் கொடுத்தே நிமிர்வீ டளிக்கின்றாய்
மன்னுலகி லுன்வினையார் ? மாண்புறுவோய்!—பன்
[னருஞ்சீர் 17

அன்பே நினைமறந்தா லானந்த முண்டாங்கொல்
இன்பே சிவமே யிரும்பொருளே—நின்போல 18

---

16. ஆசை—விடாப்பற்று;இஃது அன்பின் இழிபெயருள் ஒன்று. இதனை நோயெனவும், தளையெனவும் பற்பலவாறு பழித்துரைப்பர் பெரியோர். "ஆசா நிகளம் துகளாயினபின்—பேசா அநுபூதி பிறந்ததுவே—கந்தரநுபூதி. எத்தகைய துறவோரையும் இது மூவகைவாயிலால் மயக்கும் என்ப. அவை மண்,பெண், பொன் ஆசைகளாம். "ஆசைக்கோரளவில்லை" என்ற தாயுமானார் வாக்கானும் இதன் வலிமை உணரப்படும். இது பிறவிப் பெருங்கடலுள் செலுத்துவது. பேதுறுத்தல்—உள்ளம் கலங்கச் செய்தல். "வைத்தநிதி பெண்டிர்.. ..........பிறப்போடிறப்பென்னும் சித்தவிகாரக்கலக்கம்" என்றார் மாணிக்கவாசகர்.

17.பொன்னாலாகிய அச்சம்விளைக்கும் சிங்கவுரு உருகிச் சாந்தமுடைய பசுவுருவாகச்சமைதல்போல் ஆசையே பரிணாமப் பட்டுக் கடவுட் பக்தியாகமாறி மோட்சசாதன மாகின்றதென்க. "மங்கையர்தம் வதனமிசை" என்ற பாட்டும் இதனைக்காட்டும். நிமிர்வீடு—உயர்ந்தமுத்திநிலை.

18. கோல்—வினைப்பொருளிடைச்சொல். ஐயப்பொருளும் ஆம். 'கொல்லே ஐயம்'—தொல்: சொல்: 263. அன்பின் பயன் இன்பே யாகலான் இன்பே எனப்பட்டது. அன்புதரும் பெரும்பேறு சிவமேயாகும். "அன்பு வேறு சிவம் வேறு என்பர் அறிவிலார்" என்னும் திருமந்திர உரையும் காண்க. இரும்—பெருமை உடைய. " இருமை பெருமையும் கருமையும் செய்யும்" தொல்—உரி. பொருள்—செல்வமும் ஆம்.

ஓருணர்வு முள்ளத் துலகிலிடை யுள்ளதோ
பேருணர்வு நீயாற் பெருந்தகாய்—தேர்வுறினே 19
முப்பொருளு நீயா முளைத்தனையென் றுலகி
லெப்பொருளை நிற்குவமை யென்பனியான்—மெய்ப்
[பொருளே 20
ஆவியெழுத் தின்முதலு மாருமுடர் பின்நடுவு
மேவுசார் பொன்றுமுற மென்பெயராய்த்—தாவில்சீர்த்

---

19. அன்பென்னும் பண்பே ஒவ்வொரு பொருளின்கண்ணும் உள்ளத்தினைப் பற்றச்செய்து உணர்வினைப்பெருக்கி யுதவகின்றது. அகவுணர்ச்சியென்பது முடிந்தநோக்கின் அன்பேயா மன்றே! சடப்பொருளுணர்வு தலைக்கூடியபின்றை அதனைச் சித்துப்பொருள்மாட்டும் செலுத்தி முற்றறிவெய்தும் பெற்றியினை அன்பே விளைத்தலின் **பேருணர்வு** எனப்பட்டது.
தகை—தகுதி.

20. **முப்பொருள்**— பதி–பசு–பாசம் என்பன. உலகு, உயிர், இறை எனினும் ஒன்றே. பதியினிடம் அருள்வண்ணத்ததாயும், பசுவின்பால் பாசமாயும், உலகின் சடப்பொருட்களிடம் வண்ணம், வடிவு முதலியவாகியும் நின்று தொழிலாற்றி, முடிவில் சடத்தன்மைகெடுத்துச் சித்துத்தன்மையைப்பெருக்கிப் பதியினோடுறவைப்பது அன்பேயாம். பதிக்குமேற்பட்ட பொருளின்மையின் அன்புக்கு உவமை காண்டல் அரிதாயிற்று.
**மெய்ப்பொருள்**—சத்தியமான சுத்த சைதனியப்பொருள்.

21. "எழுத்தெனப்படுப—அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப—சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே" —**தொல்: நூன்மரபு: 1**. உயிருள் முதல் **அகரம்**. மெய்யுள் இறுதி **னகரம்**. இதனை வீடுபேற்றுக்குரிய ஆடூஉ விகுதியெழுத்தென்பர் உரையாசிரியர். சார்புள் சிறந்தது **குற்றுகரம்**. அதனுள் ஒன்று புகரம். இங்ஙனம் தமிழ்ப்பேரிலக்கண முதற் சூத்திர நினைவுக்குறியீடான் இப்பெயர் அமைந்த பெற்றிமை பாராட்டத்தக்கது. மற்றும், உயிர்–மெய்–உயிர்மெய் என்ற மூவ்வகையெழுத்தும் பயின்றுவந்துள்ளமையும் ஒருநயம்.
**மென் பெயர்**—மெல்லென்றபெயர்.

தொல்காப் பியமுதலுட் டோய்வுற் றார்தலினால்
அல்காப் பசுந்தமிழா யன்றிறைவன்—சொல்லுற்ற 22

மன்பே ரிலக்கணத்து மாமருங்கா மன்னியே
தன்பே ரிறையென்னத் தங்கிடுவை—உன்பேருள் 23

---

22. **தொல்காப்பியமுதல்**— தமிழ்மொழியின் பழைமையான இயற்றமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்தினது முதற் சூத்திரத்துள்ளே; அம்முதல்விதியாவது:-“எழுத்தெனப்படுப, அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப, சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே.”(-அ-ன்-பு)-தொல்: நூன்மரபு-1. **தோய்வுறுதல்**—பிரஸ்தாபிக்கப்படுதல்; **அல்கா**—எக்காலத்தும் சுருங்காத; **பசுந்தமிழ்**—முருகனைப்போலும் என்றும் இளமையுடையதமிழ்; இதனால், தமிழ்மொழியானது உயிர்ப்பண்புகள் பலவற்றுள்ளும் அன்பு சிறந்ததெனத் தேர்ந்து சிறந்த இலக்கணவாயால் அதனை நம்மனோர்க்குச் சொல்லாமற் சொல்லிச் சுட்டிற்றென்க. **இறைவன்**—ஆலவாய் அவிர்சடைப் பெம்மான்; **சொல்லுற்ற**—பாண்டியன் உள்ளக்கவலொழிய ஓதிவைத்த.

23. **மன்**—நிலைபேறு; மிகுதி. “மன்னா உலகத்து மன்னியது புரைமே”; “எந்தை எமக்கருளுமன்” என்புழிப்போல. **நன்**: சூத்திரம் 432 ன் உரைக்குறிப்பு. மூலத்தானும், உரைவரலாற்றானும் தெய்வத்தன்மை நிலைபெற்ற; **பேர்** — பெயர்; பெரிய; “மறைமுதற் கிளந்த வாயான்” என்ற செய்யுளுரை ஈண்டறியத்தக்கது. **இலக்கணம்** — இறையனார் அகப்பொருள். **மாமருங்காக** — இந்நூலின் சிறப்புடைய முதலுங்கடையுமாக; இவ்விலக்கணம், அன்பின் பண்பினையே விளக்க எழுந்தமைக்கு அறிகுறிபோன்று முதற் சூத்திரத்தினும், இறுதிச் சூத்திரத்தினும் இச்செழுஞ் சொல்லையே விளம்புகின்றதென்க. **முதற்சூத்திரம்**: “அன்பின் ஐந்திணை” என்று தொடங்குகின்றது. **இறுதிச்சூத்திரம்**: “அன்பின் உயர்ச்சிமேன” எனமுடிகின்றது. **இறை** — சிவம்;

எங்கும் நிறைந்தே யிருக்கின்ற உண்மையினைத்
துங்க அகரவுயிர் தோற்றுறுத்தும்—பொங்குமனைப் 24

பேசாத கொள்கைப் பெரியோ ருலகுளரோ
காசா லனைக்கொள்ளக் காணுவையோ—தேசுறுநின் 25

மூன்றெழுத்தி லேயடங்கா மூலமந்த்ர முண்டோசொல்
தோன்றிடுமுன் பேரியம்பிற் றுன்பம்போம்—ஆன்றபுகழ்

---

24. இறைவன் எங்கும் வியாபித்திருப்பது போன்று அன்பும் எல்லாப் பிராணிகளுள்ளும் பரவியுள்ளது. "அன்பின் வழியது உயிர்நிலை"; "அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்" என்ற குறட்பாக்கள் இக்கருத்தைத்தருவன. அங்ஙனம் அன்பு வியாபகமுற்றிருத்தலை எல்லா எழுத்துடனும் கலந்துள்ள அகர உயிரே இச்சொல்லின் முதலெழுத்தாய் நின்று உணர்த்துகின்றதென்க. துங்கம் — உயர்வு; நாதமாத்திரையின் இயல்பாய்த் தோன்றும் உயர்வு. தொல்: மொழி: சூ 13, ந. உரை காண்க.

25. பேசாத — புகழாத; உலகுஉளரோ — எழன் உருபு விரிக்க; ஒகாரம் எதிர்மறை. காசு—பொற்காசு; பொன் யாவற்றையும் கொள்ளும் சிறப்புடையதெனினும் அன்பினைக்கொள்ள வியலாக் குற்றம் உடைமையின் காசு எனப்பட்டது. பொருளால் அன்பு பெறற்கரிதென்பதைப் பரத்தை நேயத்தின் பான்மையாலறியலாம். "இன்பினைப் பொருளுயிர்க் கிற்றுழி விற்றிடும் வண்டினக் கொண்டியர்" என்னும் ஞாயிறுவாழ்த்து. தேசு-விளக்கம்.

26. வடமொழி மந்திரங்கள் யாவும் அகர, உகர, மகர மென்னும் மூன்று அக்கரங்க ளாணியன்ற பிரணவத்துள் ளடங்கல்போல, யாவும் அன்பு என்னும் இம்மூன்றெழுத்துப்பெயருள்ளடங்கும் என்ப. இதன் கண்ணும் அகர, உகர உயிர்களும் மெல்லினமும் இருத்தல் காண்க. பிரணவமனனம் சகல பாபங்களையும் பரிகரித்தல் போன்று அன்பின் மனனமும் ஜனன முதல் பரிகரிக்கும் என்னலாம். ஆன்ற— நிரம்பிய; 'சான்ற என்பதன்மரூஉ.

நாயன்மா ராழ்வார்க ளுட்டிற் பலபெரியோர்
ஆயுமுனை யென்று மடைந்தன்றே—தூயவனை 27

மாயவனைக் கண்டென்றும் மாயா வரங்கொண்டார்
நீயலதோர் நீடு துணையுண்டோ—நீயேசொல் 28

எல்லாரா லும்'அன்பர்' என்னப் படுவதனாற்
சொல்லாம லேதெரியுஞ் சுத்தவுண்மை—யல்லையோ 29

---

27. **நாயன்மார்**—சிவனடியார் அறுபான்மூவர்; **ஆழ்வார்**-திருமாலடியார் பன்னிருவர்; பிறவாறும் கூறுப. **பலபெரியோர்**—பலசமயத்துப் பத்தரும் சித்தரும் முனிவரும் **ஆயும்**—ஆராயப்படுகின்ற. **என்றும்**—தோன்றியக்கால்தொட்டு என்றும். சீவன் முத்தர் யாவரும் அன்பினை மூலாதாரமாகக் கொண்டே சகலாதாரங்களையும் அடையப் பெறுவர் என்க. **அன்றே**—தேற்றம்; **தூயவனை**—தூய்மைவாய்ந்த சிவனை; தீவண்ணனாகலின் யாண்டைக்கும் தூயன் என்ப. அடைந்தாரைத் தீப்போலும் தூய்மைப்படுத்துபவனை எனினுமாம்.

28. **மாயவனை—மாயா**-முரண்தொடை; சொல்முரண். "முரணத் தொடுப்பது முரண் தொடையாகும்"-முத்துவீரியம். **மாயவன்**—திருமால்; **மாயா** — சாவாத 'கூகா என என்கிளை கூடியழப் போகாவகை' என்பர் அருணகிரியார். **நீ அலது**—இதில அன்மை அணிவு காட்டிற்று.

29. மூத்தோர் இளையோர் என வேண்டாமலும், ஆடவர் மகளிர் எனப்பகுப்புக் கருதாமலும் யாவர்க்கும் ஒப்பக்கூறத் தகும் சொல் 'அன்பர்' என்பது. இறைவனடியார்களை யாவரும் 'அன்பர் அன்பர்' என்று கூறுதல் வழக்கு. **உண்மை** -- உள்பொருள். 'ஆ உண்டு' என்பது போல.

உன்னை யடைந்தாரை யுய்விக்குர் பெற்றிமையால்
என்னை யுனக்களித்தே னென்னன்பே—வன்னமிகு 30

பார்ப்பருந்தத் தானியங்கள் பக்குவமாய்த் தாய்ப்பறவை
சேர்த்துக் கொடுப்பிக்கும் சேயன்பே—நீர்த்தன்றிக் 31

குஞ்சைக் குலவைரி கொன்ளாமே தாய்ப்பறவை
துஞ்சித் துயர்விள்ளத் தூண்டுவை நீ—நெஞ்சாரப் 32

---

30. உய்விக்கும்—பிறப்பு நெறியினின்று தப்பும்படி செய்விக்கின்ற. பெற்றிமை--தன்மை. அடைந்தாரை ஆதரித்து நன்மை செய்யுந் தன்மையே அன்புக்கிருத்தலால் அவ்வன்பினிடம் சரண் புகுதல் செயத்தகுவதென்பது தோன்ற 'என்னை உனக்களித்தேன்' எனப்பட்டது. அன்பின்பால் அடைக்கலம் புகுதல் ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு உற்றவழியாம். இனி, 'என்னை உனக்கு அளித்தேன் என் அன்பே!' என்பதை அன்பை நோக்கி வேண்டிக் கொண்ட வாசகமாகக் கோடலும் பொருந்தும். வன்னம்—அழ்கு; நிறம்.

31. பார்ப்பு — பறவையின் இளமைக்குரியசொல். "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" தோல். மரபு. 4; தாய்ப்பறவைகள் தாம்பசித்திருப்பினும் பொருட்படுத்தாது தாம்ஈன்ற குஞ்சுகட்குப் பக்குவமாய் உட்கொள்ளத் தக்க தானிய மணிகளைத்தேடிவந்து அலகால் ஊட்டுவிக்கும் செய்கை அன்பினுலியையவதாகும். சேயன்பு—பிள்ளைப்பாசம்; செம்மையான அன்பு எனினும் ஆம். நீர்—அன்பின்தன்மை.

32. குலவைரி--தம் குலத்துக்கே பகைமைபூண்ட சத்துரு, தாய்ப்பறவைகள் தம்குஞ்சுகட்குத் தம்பகைவரால் ஏதும் ஏதம் நேராவண்ணம் தம் உயிரையும் விடுத்துப் பாதுகாக்கும் வண்ணம் தூண்டுவதும் அன்பே ஆம். துஞ்சி—இறந்து; மங்கலவழக்கு. நன்-267.

பூசை பெருங்குட்டி போகுமிட மெங்கெங்கும்
ஆசை யுடன்கவ்வ லாக்குவதும்—பேசில் 33

களிறு பிடியதனைக் கல்விடர்க்கண் வீழ்த்தி
அளியி னெடுத்தேற்ற மாக்கல்—எளிய 34

குரங்கினைக் குட்டி பரம்புரம் பற்றி
மரங்களிற் றங்கிடு மாண்புர்—உரங்கொளக் 35

---

33. பூசை—பூனை; (இல்லுறைவதன்பெயராம்) படப்பை வேலியும் புதலும்பற்றி விடக்கிற்கு வேற்றுயிர்கொள்ளும் வெருகுக்கும் இப்பெயர்உண்டு. "வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்"—தொல். மரபு. 68. "பூசை முற்றவு நக்குபுக்கென" கம்ப. பூனைக்குட்டிகள் தாம் முயற்சியற்றிருப்பவும் அவற்றின் மேலுள்ள அன்புகாரணமாகப் பூனை அவற்றைத் தானே வாயாற் கவ்விச் சேமம் செய்வது கண்கூடு. இதனை மார்ச்சாலநியாயம் என்பர்.

34. விடர்-பாறைப்பிளப்பு; அளி—அன்பு; மகிழ்புணர்ச்சிக்காக இபமணி நசிக்கும்" என்னும் சதகச்செய்யுள் வரியும், "ஆசையாம் பரிசத்தியானைபோலவும்" என்னும் கோயில் நான்மணிமாலை அடியும் இக்கண்ணியின் கருத்துக்கு ஓராங்கு துணைசெய்வன. உயிர்களின் விரிவு அன்பு ஏதுவாக நிகழ்வது என்பது கருத்து.

35. மரங்களில் திரியுங்கால் தன் தாயாகிய மந்தி தன்னைப்பற்றிக்கொள்ளாவிடினும், அதன்குட்டி, பால் பெருகுதலையுடைய அதன் மார்பினைத் தான் அன்பு காரணமாகப் பற்றிச் செல்லுதல் இதனில் கூறப்படுகிறது. இதனை மர்க்கடநியாயம் என்பர் வடநூலார். 'தன்னைத்தான் அறிய எண்ணும் தக்கசீடன் தன்குருவை மர்க்கடமாப்பற்றல் நீதி'— முருகன்புகழ் மாலை. பரம்புஉரம்—விசாலித்தமார்பம். உரம்கொள்ள—வலிமை எய்த.

கன்றுநினைந் தாவினங்கள் காளகம்விட் டேவிரைந்து
நின்றுமுலை யுண்பிக்கும் நேர்மையதும்—சென்று 36

பரந்து நிறைந்து பசந்து குமிழ்த்து
திரைந்து விரைந்து செறிந்து —நுரைந்து 37

முயர்ந்து விழுந்து முறைந்து கரைந்து
மயர்ந்த கடலன்பே யாவாய்;—நயந்தே 38

---

36. மேய்ச்சற்புலத்தில் புல்மேய்ந்து கொண்டிருக்கும் தாய்ப்பசு, தன்கன்றை நினைத்த மாத்திரையில் தன் உணவைக் கருதாது விரைந்து கன்றினிடம் வந்து நின்று பாலுண்பித்தல் அன்பின் செயலையே அறிவுறுத்தும் என்பதாம். **ஆனினங்கள்**—பசுவர்க்கம்; பசு, ஆடு எருமை என்பன. "கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோர நனைத்தில்லஞ் சேறாக்கும்" **திருப்பாவை**. பசவானும்அடியார்க்கு உதவ இங்ஙனே விரைகின்றான்என்ப. இவையாவும் **இயற்கை நவிற்சி**. நேர்மையதும் ஆவாய்(38)எனமுடிக்க.

37. அன்பு கடல்போன்ற தன்மையது. பலதுறைமுகங்களைப் பெற்றுள்ள சமுத்திரம் போலச் சேயன்பு, தாயன்பு, காதலன்பு, முதலவாகப்பலதுறைகளை அன்பு என்னும் பண்பும் பெற்றுள்ளது. மற்றும் கடலுச்குளவாகிய பரத்தலாதிய பண்புகளும் அன்பின்பாலுளஎன்பதை இதனிற் கூறக்காணலாம். **பரந்து**—பரவி; ஈசன்முதல் எல்லா உயிர்களிடத்தும் பரவி. **நிறைந்து**—நிரம்பி; அவரவர்தம் உள்ளநிலைக்கேற்ப நிறைதலடைந்து. இங்ஙனமே 'பசந்து' முதலியவற்றையும் பொருள்கொள்க.

38. கடல்நீர், தண்ணிய திங்களைத் தழுவ உயர்தலும், வெவ்விய பரிதி கண்டு படுதலும் உடைமைபோல, அன்பும் நல்லோரைக்காணப் பெறுங்கால் மிகுந்தும் அல்லோரைக்காணப் பெறுங்கால் குறைந்தும் காணப்படும். **உறைந்து கரைந்தும்**—தண்மையால் இறுகியும் வெம்மையால்உருகியும் கடல்நீர்தொழிற்படுமாபோல் அன்பும் தண்ணளியுடையாரை இறுகப்பிணித்தும் அஃதில்லாரை அகலவிட்டும் இயங்கும் பான்மையதென்க. **அயர்ந்த**--அகன்ற; கடல்போல் ஆவாய் எனமுடிக்க.

உருண்டு புரண்டு விழுந்து மருண்டு
திரண்டு கரைந்து திரும்பித்—திரும்பி 39
அலைந்து திரிந்து மகழ்ந்து வளைந்து
மலைந்து குறிஞ்சி மணந்து—நிலைந்து 40
மடங்கி நுடங்கி யடங்கி மணிதந்
தொடுங்கி யுறைந்து முவந்து—திடஞ்செய் 41

---

39. இதுமுதல் கடல்.பயிரோம்பற்கண் படும்பாடுணர்த்தத் தொடங்குவதாகும். அன்பும், உயிரோம்பற்கண் அத்துணையவத்தை பெறுகின்றதென்க. கடனீர், தான் கார் முகிலாகிக் குறிஞ்சியைப்புணர்தற்குப்படும்பாடு உருளுதல் முதலியபலவாம். **கரைந்து**—ஒலித்து; வெண்மேகத்தை அழைத்து எனினுமாம். "காக்கை கரவா கரைந்துண்ணும்" என்ற இடத்துப்போலக் கொள்க, புதுக்கலத்துப்பெய்தநீர் புறம்பொசிவதுபோலுவன இச்செயல்கள். தோல். களவு. 27. இதனுட் கரைதல் தோழிக்குக் கூறுதலுளது என்றூற்போன்றது.

40. அலைதல்-நாடிப் பலதிசை யோடுல்; **தீர்தல்**-குறித்த பொருள் குறித்த இடத்துக்காணப்படாமையின் நியதியின்றிப் பலபக்கமும் படர்தல்; **அகழ்தல்**—தோண்டுதல்; உள்வாங்குதல். **வளைதல்**—சூழ்ந்துகோடல். **மலைந்து** அவசமுற்றடைந்து. **குறிஞ்சிமணத்தல்**—கடல்நீர் ஆவியாகப் பரிணமித்துச்சென்று உயரியமலையிடங்களில் சேர்ந்து மழையாகப் பொழிதல் இயல்பு; தெய்வப்புணர்வுக்குரிய இடம் மலையாகலின் இங்ஙனம் கூறப்பட்டது "படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை நெடுவேள்" சான்றாகப் புணர்தலின் தெய்வப்புணர்வாயிற்றுஎன்க.

41. இக்கண்ணிமுல்லைக்குரிய இல்லுறைவு கூறிற்று. கடல்நீர் குறிஞ்சியென்னுந்தலைவனை மணந்து அவற்குரியயாவும் தனக்குரியவாகக்கொண்டு அவனடியிற் பணிந்து வாழ்தலைக் காட்டுதல் இதன் நயப்பாடு. **மடங்கி**—வரைவின்முன் மடங்கி; **நுடங்கி**—வரைவின்பின்ஒல்கி; **அடங்கி**-(காம) வேகம் தணியப் பெற்று; **மணி**-குறிஞ்சிப்பொருள்; அரவின் மணி, கரிக்கோட்டு முத்து முதலியனவும் ஆம். வண்டுகளாகிய விருந்துபேணிக் கற்பொடும் ஒழுகுதலாலே **உவந்து** எனப்பட்டது.

பயிரோர்பி யூடிப் பலகிளையா யோடி
யுயிரோர்பு மொண்ணதியா மன்பே!—வியனூர் 42
கடற்சேர்ந் திரங்கிப்பின் கால்கொண் டுடன்போய்
இடஞ்சேர் வெளிப்பந்த ரிட்டுத்—திடமா 43
பிடித்துக் குமுறி யெழிலொளி காட்டிப்
படிக்கண் பொழியும் பசுமால்!—கடுவேடன் 44

---

42. மருதத்து ஒழுக்கம் ஊடல்: மறுபக்கத்து மேகத்தையும் தன் ஆகத்துத் தாங்கல் கண்டு இவ்வூடல் நிகழ்ந்தது போலும்! ஊடி—உட்புகுந்து எனினுமாம். உயிர்—ஜீவராசிகளாகியமக்களை; நதிபோலும் இயல்புடைய அன்பு; நதியைத் தலைவியாக்கருதுக. வியன்ஆர்—விசாலம் பொருந்திய.

43. இரங்கி —சப்தித்து; இதுசெய்தற்குரிமை. கடல் இரங்கற்கு நிமித்தமாயிற்று. கால்—காற்று; போய் என்ற தொழிற்கேற்பக் கால் என உறுப்புத் தோனிக்கஇங்ஙனம் கூறப்பட்டது. மேகம் காற்றோடு கூடிப்படர்தல் இயற்கை. உடன் போக்குக் குரியது பாலை வெளியாகலின் இடஞ்சேர்வெளி எனப்பட்டது. வெளி-வானவெளி. பந்தர்-மொழிஇறுதிப்போலி.

44. உயிரினைப்பற்றியுடற்றும் பசிமுதலிய பகைவர் அஞ்சுமாறு உரப்பிக் கறுவிக்கூறி ஒள்வாள்காட்டி எனமுதல் வரியிற்பொருள்காண்க. படி-பூமி; பொழிதல்—ஊறுவிளையாவண்ணம் பெய்தல். பசுமால்—கரியமேகம்; அழியா அன்பு; கரிய திருமால். மேகமும் திருமாலும் ஒப்பிக்கூறப்படுவதுண்டு பெரியோர்களால். "அன்னவன் அங்கை ஆழிசங்கம்வில்—மேனியை நிகர்க்கும் மின்இடிவில் நிறம் தாமிவைகாட்டித் தலைப்பெயல் வருகை" —பாடாண்பாட்டு.

கடுவேடன்—கடுந்தொழிற்குரிய!வேடர் மரபிற்றோன்றிய இணையில்லா அன்புடையகண்ணப்பநாயனர். "வன்னாய்விட்டும் சிலைவிடுகணையிலும் திண்சுரி கையிலும் பலகிளையவையொடும் பதைப்பப்படுத்துத் தொல்லுயிர் கொல்லுந் தொழிலே "நக். கண். திருமறம்.

காற்செருப்பை ஈசன் கவின்முடிமேற் கொண்டதுவுங்
கோற்பிரம்பின் சூடதனைக் கொண்டதுவும்—நோற்கு
மொரு] 45

பாவையிடந் தூதுவனுப் பாதியிராப் போதினிலே
ஆவலுடன் சென்றதுநின் ஞணையன்றே—மேவும் 46

---

45. வேடனது காலையே யன்றி அக்காலில் அணியும் செருப்பினையும் ஈசனாகிய சிவபெருமான் தமது செவ்விய முடியிற் கொண்டது அககண்ணப்பரது அன்பு போற்றற்கேயாம் என்ப. **கவின்**—அழகு; பொன்னொளிகாட்டியும் பூப்பல புனைந்தும், மின்மிளிர் சுடிகை நீளராமிலைந்தும் தண்ணிலாக் கங்கைத் தடமேன நிலவியும் அழகு செய்வது சிவன்முடி.

**பிரம்பின்சூடுகோண்டது**-மாணிக்கவாசகர் அன்புகாரணமாக அரிமர்த்தன வழுதியின் பொற்பிரம்படியினை நற்புறம் ஏற்ற சிவன் செய்தியாம்.

46. இது பரவைநாச்சியாரிடம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டுச் சிவபரம்பொருள் தூதுசென்றமை அன்பு காரணமாகத்தான் நிகழ்ந்ததெனக்கூறுவது. பாவை—இங்குப் பரவை நாச்சியாரைக் குறிக்கும். ஆட்டுவோன் செயலின் வண்ணம் இயங்குவது பாவையின் தன்மை. அதுவேபோல் இந்நங்கையாரும் இறைவன் ஆட்டுவித்த வண்ணம் இயங்கிய பெற்றியர்ஆவர். இது உவமஆகுபெயர். “ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே.“**தேவாரம்**. நன்னரில் பூட்டிய சூத்திரப்பாவை—” என்னும் **பட்டினத்தார்**பாடல் பாவையிலக்கணம் பகர்வதாகும். ‘நின்’ என்றசொல் அன்பைக்குறிப்பது. யாவரையும், யாவற்றையும் ஆட்டுவிக்கும் இறைவனை ஆட்டுவிக்கும் சிறப்புடையது அன்பே (இச்சை) என்க. சிவன் ஆன்மாக்களை இரட்சிக்கத் திருவுள்ளம்பற்றியபோது அந்நினைவு எழுந்த அவசரமே ‘இச்சா’ எனப்படும்—**சித்தாந்தம்**.

விறகுதலை யிற்சுமந்து வீதிதொறுஞ் செல்ல
நறவுமல ரோனை நடாத்துந்—திறனுடையாய்! 47

முருகன் சிறப்பு.

நித்தியமாய்ப் பூரணமாய் நின்மலமா யெஞ்ஞான்றுஞ்
சத்தியமாய் ஏகமாய்ச் சாத்விகமாய்ச்—சித்தாய் 48

---

47. இது பாணபத்திரன் பத்திமை குறித்து ஆலவாயான் மேலைநாட் செய்தருளிய ஆடலாகும். மென்மையான இறகு சுமக்கும் தலை, முருட்டு விறகு சுமக்கலானதென்க. **நறவு**—தேன்; **மலரோன்**—மலர், ஈண்டுக்கொன்றை மலராம். சிவபெருமான் முடியில் பிற சில மலர்களும் உண்டெனினும் கொன்றையே சிறப்புடையதெனக்கொள்ப. கொன்றை பிரணவபுட்பமாகலின். "கண்ணி கார் நறுங்கொன்றை" **புறம்—1.** இது சிவனுக்குரிய அடையாள மலரும் ஆம். **தொறு**—பன்மைப் பொருட்டு.

இது முதல் 78 ஆவது கண்ணி முடிய, முருகப்பெருமான் பெருமைகளைப் பலவாறகப் பரவுவன

48. கடவுள், பதியெனப் படுவர். பசுக்களாகிய ஜீவர் கட்கு எக்காலத்தும் உதவும் பெருங்கருணைத் தடம் பொருள், தான் அழிவில்லாததாயிருந்தாலன்றிப் பயன்படாது. ஆதலின் **நித்தியத்துவம்** முதற்கூறப்பட்டது. ஆருகத நூலாரும் இறைக் குரிய எண்குணங்களுள் **அழியா இயல்பு** என்பதைக் கூட்டிக் கூறினர். உண்மை, அறிவு, மகிழ்வு என்ற மூன்றனுள்ளும் முதலது இதனை உணர்த்தும். "நித்தியமாய் நின்மலமாய்" என வரும் **தாயுமானவர்** பாடலும். "பதிபரமே, அதுதான் நிலவும் அருவுருவின்றிக் குணங்குறிகளின்றி, நின்மலமாய் ஏகமாய் **நித்தமாகி**" — **சிவப்பிரகாசம்** — பொது—1. "பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்—காரணமுமில்லாக்கதி" **கந்தர்கலி**—7. **பூரணம்**—அங்கிங்கு எனாதபடி எங்கும் நிறைதல். **திருமுருகு**—218 முதல் 226-ஆவது வரிகளின் கருத்தும் காண்க. **நின்மலம்**—மலமின்மை. இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருத்தல். கதிரோனுக்கு இருளின்மைபோல. **ஞான்று**—

அருவா யுருவா யநாதியா யாதிப்
பொருளா யருளாய்ப் புனிதத்—திருவாய்க் 49

பொழுது. ஏகம்ஆய்—ஒரேபொருளாகி. "ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு" திருவாசகம். சாத்விகம்—சாந்தநிலை. சகுணோபாசனைக்கண் சாந்தராயும், நிர்க்குணோபாசனைக்கண் குணங்கடந்தும் இலகுதல் சிவத்தியல்பு என்பர். சித்தாய் முற்றறிவுடையாராய். யாவற்றையும் அறிந்தும், அறிவித்தும் விளங்கும் ஞானமே ஈசன் திருமேனியுளோன்றென்பர்.

49. கடவுளின் நவவடிவங்கள், அருவம், அருவுருவம் உருவம் எனமுத்திறப்படும் உருவுடைப்பொருட்கள் காலதேச வரம்புடையன. இஃதின்மையே பதிக்கிலக்கணமாகும். ஆகலின் அருவாய் எனப்பட்டது. சிவம்—சத்தி—நாதம்—விந்து எனும் நான்கும் அருவம். சதாசிவம் அருவுருவம். மகேசன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் எனு நான்கும் உருவம் என்பது சித்தாந்தம். "உருவின்றி நின்ற உருவாய்"—கந்-கலி.9. "உருவாய் அருவாய் உளதாய் இலதாய்" —கந். அனுபூதி. உருவத்திருமேனி தாங்குதல் உயிர்கட்குத் திருவருள் பாலிக்கும் பொருட்டேயன்றித் தன்பொருட்டன்று. "இருண்மலத்துள்—மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்குப் பருவ வடிவம் பலவாய்" என்பர் குமரகுருபரர். அநாதி—தனக்கோர் ஆதியில்லாதது; எனவே தான் யாவர்க்கும் யாவற்றிற்கும் ஆதியாவது. "முளைத்தானை யாவர்க்கும் முன்னே தோன்றி" — தேவா. "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே"—திருவா. "ஆதிபகவன் முதற்றே உலகு"—திருக்குறள். இருள் ஆய்—உயிர்கட்கு நற்கதியளித்தலே கடமையாகக்கொண்ட திருவருளுடையராய். "அருளார்ந்த திருமேனி யழகன்" என்றும் உரைப்பர். கடவுளது அன்பின்சத்தியாகிய பரை எனவும் கூடும். இது அக்கினியிற் சூடும், பூவின் மணமும், பரிதியிற் கிரணமும்போற் பிரிவற்றுச் சமவாயமுடையதென்ப. புனிதத்திரு—பரிசுத்தம்வாய்ந்த முத்திச்செல்வம்; ஆன்மாக்கட்குப் பரிசுத்தம் விளைப்பதற்குத் துணையாகிய தனுகரண புவன போகங்களும் ஆம். இறையின்பமே அழியாத்திரு ஆதலின் புனிதத் திரு எனப்பட்டது.

**கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் ஒளியாய்க் குறியாய்ப்—பெரியோர்சொல் 50**

---

50. இக்கண்ணி "உருவாய் அருவாய்" எனத்தொடங்கும் **கந்தரநுபூதி** 51-வது செய்யுளின் அடிகளை ஒற்றியுள்ளது. கரு—உற்பத்தியிடம்; பிறப்பு; உடம்பு. "கருவினுலன்றியே கருவெலா மாயவன்" **தேவா.** "ஊனும், உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப" என்ற **கம்ப.** வரிகள் ஈண்டுக் கருதத்தக்கன. **உயிர் ஆய்** — உயிர்க்குயிராய், **கதி**—செந்நெறி; "செந்நெறிக்கே செல்விப்பானை"—**தேவா. விதி**—நியமம்; வினை. "ஆறத்துவாவும்........கூட்டுவித்து" என்ற **கந்தர்கலிவெண்பா** வரிகள் ஒப்புநோக்கத்தக்கன. மற்றும் **சிவஞான சித்தியார்.** சூ—8. 7—9 உரையும்காண்க. **குருவாய்**—பெருமானே குருபரனுகி எழுந்தருளுவர் என்பது ஆகமத்துணிவு. முருகனுக்குக் குருவெனும் பெயருண்மையும் கருதுக. "அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனுகி யருளிய பெருமையை"—**திருவாச.** ஒளி—பிரகாசம்; ஞானம். "மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப் பல் கதிர் விரிந்தன்று ஒருமுகம்" என்ற வரிகள் காண்க. **குறி**—லக்ஷியப்பொருள். "குறியைக் குறியாது குறித்து" என்ற இடம் கருதுக. பெயர் எனினும் ஆம்.

தேவாதி தேவனுயச் சீரடியார்க் கன்பனுமாய்
நாவா யிரத்தோன் நவிலரிய—காவலனுய் 51

ஆறு முகங்கொண் டமரர் துயர்களைந்த
வீறுடைய வேலோன் வியன்புயமீ—ராறுடைய 52

---

51. தேவாதி தேவன்—முழுமுதற்றெய்வம்." அறிஞரா யோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண் டான்" என்ற கந்த. வரிகள் ஒப்பு நோக்குக. சீர்—மிகுபுகழ். சீரடியார்— பழவடியாருமாம். "அடியார்க்கு அடியன்"—இது கடவுட் செய்கை. "வாதவூரன்ப, பாடும் பணிநீகூடும் பொருட்டு மதுரைமாநகரிற் குதிரை மாறியும், விண் புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியின் மாற்றடிபட்டும், நின்னைத் தொண்டனென்னக் கொண்டனன்......மலைமகடழுவ மனமகிழ்வோனே" என்ற நால்வர் நான்மணிமாலை வரிகள் அறியத்தகுவன. நாவாயிரத்தோன்—ஆதிசேடன். 'நாவா யிரமிலேன் ஏத்துவதெவன்"—மணிமேகலை. காவலன்— தலைவன்.

52. ஆறுமுகம் கொண்டு— இது தெய்வடிவின் இலக் கணம். "ஐந்துமுகத்தோடு அதோமுகமும் தந்து"; "ஆதவின் நமது சத்தியறுமுகனவனும், யாமும் பேதகமன்றால்"—கந்த. அமரர்துயர்களைந்த செய்தி வெளிப்படை. வீறு—வேறொரு வர்க்கில்லாத தனிப்பெருமை. வீறுடைய—என்னும் அடை யினை வேலுக்கேனும், வேலோனுக்கேனும் கூட்டிக்கொள்க. தெய்வமெனவே கூறத்தகும் பெருமை வேலுக்குண்டு. அது, ஏவவேண்டாது தானே அறிந்து செய்தலுடைமையின். "உடம் பிடித்தெய்வம்" என்றார் கந்தபுராணத்தும். வியன்—விசாலம். புயம் பன்னிரண்டின் இயல்புகளை ,'விண்செலல் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை............ஆங்கப் பன்னிருகையும் பாற்பட இயற்றி" என்ற முருகு நூல்வரிகளிற்காண்க. "சொந்தவிழ்ந்த வேரிக்கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த பாரப் புயசயிலம் பன்னிரண்டும்" என்பர் குமரகுருபரர். வியன்புயம்—"விய லென் கிளவி அகலப்பொருட்டே" தோல்: உரி. 67.

கந்தன் முருகன் கலாபப் பரியோன்மு
குந்தன் மருகன் குமரன்பூங்—கோந்தாரும் 53
வள்ளிக்கு மாரன் வளர்தெய்வ யானையெனுங்
கிள்ளைக்கு நாதன் கிளருமைக்குப்—பிள்ளை 54

---

53. கந்தன்—இது வடமொழிப் பெயர் என்ப. தான் எவைக்கும் பற்றுக்கோடானவன் எனினுமாம். இது கந்தழி என்னும் சொல்லை நினைவூட்டுகின்றது. "புலம் புரிந்துறையும் சேவடி எனக்கந்தழி கூறி" என்பர் நச்சினார்க்கினியர். "அந்த மில்லதோர் ஆறிரு வடிவு மொன்றாகிக் கந்தனென்று பேர் பெற்றனன் கவுரிதன் குமாரன்"; சேயவன்வடிவமாறும் திரட்டிநீ யொன்றாச் செய்தாய் ஆயதனாலே கந்தனெனு நாமம் பெற்றான்—கந்த. "ஆறுமோருருவதாக ஆக்கலிற் கந்தனானான்"—தணிகைப். கலாபம்—மயில்; மயிலைப் பரியென்பது வழக்கு. "ஆடும்பரி" என்பர் அருணகிரியாரும். முகுந்தன்—திருமால். குமரன்—இது வடமொழியில் இப்பெருமானுக்கு உகந்தபெயர் "ஆறெழுத்தடக்கிய அருமறை" என்னும் முருகு வரியுரை கருதத்தக்கது. கோந்து—கொத்து; மெலித்தல் விகாரம்.

54. வள்ளி—இப்பெருமானது நாயகிமார்கள் இருவருள் ஒருவர். போகநாயகியார். "ஒருமுகம் குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே." திருமுருகு. "நம் செந்தில் மேய வள்ளிமணாளன்"—தேவா. மாரன் — மன்மதன்மேலும் அழகன். "வள்ளிக்குகந்த மணவாளன்" என்பது கா. சிந்து. "யானையென்னுங்கிள்ளை"—மூரண். கிள்ளை—கிளி; வானுதவும் தெய்வயானையாகிய இவரும் ஒரு நாயகியார் ஆவர். "சேணுதித்திடு தெய்வதக்களிற்றினைச் செவ்வேள்; காணினிற்கட்டி"—கந்த. முருகற்குப் பேச்சாலின்பளிப்பவள் போலும்! முருகனையே கிளியெனக் கூறுதல் வழக்குடைமையின் அதற்கேற்ப இந்நாயகியார் (பெண்) கிள்ளை எனப்பட்டார். 'பஞ்சரங்கொஞ்சுகிளி" திருப்புகழ். இந்நாயகியாரைச் "சொர்க்கக்கிளி" "சொர்க்கத்தத்தை" எனவுங்கூறுவர். உமை—பார்வதிதேவி. "வளரிள வனமுலை மலைமகளுக்கோர் தவப்பேறே' என்பாராகலின் பிள்ளை என்றார்.

தகரேறும் வீரன் தணியாத வேலன்
நகமார் சிவனீன்ற நல்ல—மகனோடு 55

விட்டசம் பந்தனுர் விண்ணவர்க்கா யன்றெருவேல்
விட்டசிங் காரன் மிகுதண்மை—இட்ட 56

---

55. தகர்—யாட்டுக்கிடாய். "கடுநடையுள தகரேறச் சமர்த்தனை" முத்து-பிள்.தமிழ். நாரதன் தீச்செயலால்விளைந்தது தகர். தணியா—பகைவரையழிக்கும் வரையில் சினம் அடங்கப் பெருத; ஏனைவேல் போல உபயோகத்தால் மடங்கப்பெருத; நகம்—மலை; இங்குக் கயிலைமலையை உணர்த்தும். சிவனீன்ற நல்ல மகன்—"சிற்பரன் தான்கொண்டுள்ள திருமுக மாறு தம்மில், பொற்புறு நுதற்கண் தோறும் புலிங்கமொன் ருென்று தந்தான்" — கந்த. இங்ஙனம் சிவபரம் பொருளே தந்தமை கருதத்தக்கது. நன்மை செய்தற்கே பெற்றெடுத்தமையின் 'நல்லமகன்' எனப்பட்டது.

56. ஏடுவிட்ட சம்பந்தனுர் — முருகப்பெருமானின் ஓரமிசமுடையவர் திருஞானசம்பந்த நாயனுர் என்பது பெரியோர் கருத்தாகலின் இங்ஙனம் கூறினுர். ஏடு, சமணரை வெல்லற்கு வையைக்கண் விடப்பட்டது. புனல்வாதம். "மலை பெற்ற பைம்பிடிப்பாலுண்டு முத்தமிழ் மதம் பொழியும்" என்பர் சிதம்பரசுவாமிகள். அழுதுலகை வாழ்வித்த கவுணியர் குலாதித்தன்'என்பர் அருணகிரி யாரும். "தமிழிஞலுலகம் மறையென அறிவான் மலர்ந்தவர்" மயிலாசலமாலை. அன்று—சூர்மாத்தடிந்தகாலத்து. "கவிழிணர் மாமுதல் வேல்கொடு தடிந்த விறல்வேள்" ஆதல் யாவரும் அறிவர். தண்மை—குளிர்ச்சி.

பிறைமுடித்த மாமலைமேற் பெட்புறவே நின்று
குறைமுடிக்குந் தெய்வக் குழந்தை—துறைமுடித்த 57

நாவலர்கள் செந்தமிழ்க்கு நற்பரிசி லீவோனிப்
பூவலயம் போற்றும் புகழினான்—சேவற் 58

---

57. பிறை முடித்த மாமலை—சிவபெருமான்; சாமானிய மலையாகவும் கொள்ளலாம்; கந்தமாதனகிரி எனினும் பொருந்தும். முருகன் குறிஞ்சித்தெய்வமாகலின், "சேயோன் மேய மைவரையுலகம்" சிவபெருமானை மலையாக்கிக் கூறலுற்றது. முடித்த—முற்றும்படிச்செய்த எனவும் பொருள் கொள்ளலாம். பெட்பு—பிரியம். வைதாரையும் அங்கு வாழவைப்போன் ஆதலின் 'குறை முடிக்கும் தெய்வக்குழந்தை' என்னப்பட்டது. துறை—கல்வித்துறை. இலக்கண இலக்கியத்துறைகள் எனினும் ஆம்.

58. நாவலர்கள்—நாவின் வன்மையுடையவர்கள். இவ்வன்மையாவது, பரமனையே யன்றிப் பிறரைப் பாவா வன்மையாம்; இத்தகையோர், "சொல் நாவில் வாழ்புலவீர் சோறு கூறைக்காக மன்னாத மானிடரை வாழ்த்தில் என்னாம்?" என்ற ஸ்ரீ மணவாள மாமுனிகள் உபதேசத்துக் கிலக்கியமாகின்றவர் என்க. "மேனாளில் மானிடம் பாடிய நாச்சுத்தம் மேவுதற்கே" என்ற உரையும் கருதுக. அன்றியும் இப்புலவர்கள், நாவால் உலகை நடாத்தும் திறலுடையர். இத்தகையினர், கபிலர்—பரணர்—நக்கீரர் ஆதியோர் ஆவர். இவருள் நக்கீரர் செந்தமிழ்க்கு அவரையுள்ளிட்ட ஆயிரவர் உயிரளித்தான் சேயோன். 'சொற்றரு பெரும்புலவர் கலையமுதுகொள விருந்தோகை மேற்கொண்டருளினாய்"—குமரகுருபரர். செந்தமிழ்—சொற்பிழையற்ற தமிழ். 852—ஆவது திருப்புகழ் பார்க்க. புகழ்—முருகப்பிராற்கே உரியதென்ப.

கொடியாள் கழல்சே ரடியாள் குணமில்
கொடியார் முடிமே லிடியான்—கோடையான்சீர்க் 59

கட்டழகன் ஞானக் கரும்பு வரைசாந்தப்
பொட்டழகன் பட்டழகன் புன்மனத்தைக்—கட்டி 60

இழுத்தாள் இழுத்தால் இசையான் மனந்தான்
பழுத்தால் விழுத்தாட் பதிப்பான்—வழுத்தரிய 61

செந்தூர் பழனி திருப்பரங்குன் றேரகமுஞ்
சிந்துபழச் சோலைமலை தென்றணிகை—சந்தமிகு 62

---

59. கழல்—வீரர்காலணி; மதுரவாணியுற்ற கழல். திருப்புகழ்—421. அடியான்—திருப்பாதங்களுடைய முருகன. குணம்இல்—நல்லியல்பு சிறிதுமில்லாத; இடியான்—இடியேறு போன்றவன். பிரமனைக்குட்டியசெயல் ஈண்டுக்கருதத்தக்கது. கோடையான்—"விழுமியபெறலரும்பரிசில்" நல்குபவன்.

60 கட்டு—உடற்கட்டு; ஞானக் கரும்பு—ஞானமாகிய ரசத்தினையுடைய கரும்பு வரை—மலை; பொதியமலையாம். சாந்தப்பொட்டு—சந்தனப்பொட்டு; இதுபூரணத்துவத்திற்கு அறிகுறி. பட்டு—பட்டாடை, 'தருணதப சோதியாடை' என்ப. புன்மனம்—புல்லியவிடயங்களிலே தொடர்புண்டு கிடக்கும் மனம்.

61 விழுத்தாள்—உறுநர்த்தாங்கும் மதனுடைநோன்தாள்.

62 வழுத்தரியசெந்தூர்—மகாபுனிதம்தங்குவதுஆதலாலும், கயிலைமலையனையதாகலானும், மங்கலமகிமை மாநகராகலானும், புலவர்கள் சங்கத்தமிழ் தெரிபதியாதலாலும், உணர்ந்துணர்ந் துணர்வுறும்பதியாகலாலும் இங்ஙனம் கூறலுற்றது. பழனி-பரமமயச்சோதிச் சிவமயமாம் அதிசயமநேக முற்றதலம். ஆறுபடை வீடுகளும் கருதிக்கூறல் ஒரு நியமம். தென்தணிகை—இது பிரபலஸ்தலம். இது, தூரத்தொழுவார் வினைசிந்திடும்தன்மையது. திருக்குள விசேடமுடையது. நிருத்த விசேடம் பெற்றது. சிவசாரணர்கள், முநிக்கணத்தவர் இமையவர் பணிவது. சலமிடை பூவினடுவினில் வீறுவதென்பர். தேன்—அழகுமாம். இத்தலத்துச் சுவாமி அழகர் எனப்படுவர்.

செப்புந் திருப்பதியுஞ் சீர்கண்டி நல்லருணை
ஒப்பில் பிறகுன் றுடையான்காண்—மெய்ப்பார் 63

---

63 **செப்பும்திருப்பதி**—உயர்வாகக் கூறப்படும் தலங்களும்; தலங்கள் யாவற்றினும் சிறப்புடையவை யெனப்படும் ஆறுபடை வீடுகள் எனினுமாம்; திருப்பதிஎனவே தற்போது வழங்கப்படும் வடவேங்கடமென்னும் தலமெனினும் பொருந்தும். முருகன் தமிழ்த்தெய்வமாதலானும், தமிழகத்துக்கு வடக்கின்கண் எல்லையாகத் தொல்லாசிரியர் வேங்கடத்தைவகுத்தமையானும் இவ்வுரை கொள்ளல் கூடும். 'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" —**தோல். சிறப்புப் பாயிரம்.** "தமிழ் நாட்டிற்கு வடக்கின்கட் பிறவெல்லையுமுளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினன்; அகத்தியனர்க்குச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப்பரமாசாரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பென்னு மியைபு பற்றி" யென்பது—**தோல்: சூத்திரவிருத்தி.** "உலகீன்ற பச்சையுமை அணன்வடவேங்கடத்தி லுறைபவன்" என வடமலையில் முருகப்பிரானுறைதல் அருணகிரியாரால் பாடப்பட்டுள்ளது. **சீர்கண்டி**—"சந்ததம்" எனத் தொடங்கும் திருப்புகழ்ப்பாட்டில் 'செந்திலங்கண்டிக் கதிர்வேலா' என இத்தலம் கூறப்பட்டுள்ளது. இஃது இலங்கையில் ஒரூர். **நல்அருணை**-இத்தலம் முருகப்பிரான் அருணகிரியார்க்குக் கருணைபுரிந்த இடமாகும். தேயுத்தலம். நினைக்க முத்தி தருவது. "தன்னிகரின்றி நின்ற தழற்பெருஞ் சயிலம்-**கந்த. வழிநடை—10.** "பூம்பொழிற் புகலிக் கிறைவனுனிலஞ்சேர் புண்ணியத் தலங்களினடைந்து தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோணசைலன்" **சோணசைலமாலை—58. பிறகுன்று** -எல்லாமலைத் தலங்களும் ஆம். குன்றுதொறாடல். க்ஷேத்திரக் கோவைத்திருப்புகழில்" உலகெங்கு மேவிய தேவாலயந் தொறு பெருமாளே" எனவும் கூறுவர். "மென்றோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே"—**முருகாறு.** குறிஞ்சிக்கு முருகன் உரிமைத்தெய்வமாதல் நூலோருடம்பாடாகலின் இங்ஙனம் கூறியது. "சேயோன் மேயமைவரை உலகு" **தோல்.**

அமரர் துயர்களைய அம்பிகைக்கு நல்ல
குமர னெனவுதித்தான் கூறும்—திமிரமற 64
முக்கட் கடவுண் முகாரிக் கொருவைகல்
பக்குவமாய் 'ஓர்'பொருளைப் பாடினேன்—மிக்கெழிலாய்
எங்கும் நிறைந்த இறைவி திருக்கரத்திற்
றுங்கமுறு கந்தனெனத் தோன்றினேன்—பொங்கிவளர் 66

---

64. அமரர்-தேவர்; துயர்-சூரனுலுற்றதுயர்; அம்பிகைக்கு நல்லகுமரன் — உமாதேவியின் இளையகுமாரன்; 'மின் இடத்துப் பூத்த பவளப் பொருப்பு'—எனச்சிவபிரானையும் முருகனையும் அபேதமாய்க் கூறுவர் பெரியர். திமிரம்—இருள்; ஈண்டு அறியாமை. சிவபெருமான் பிரணவப் பொருள் அறியார் போன்று நடித்தனராகலால் திமிரம்அற எனப்பட்டது.

65. முக்கட்கடவுள்— சிவபெருமான்; அறுமூன்று கண்ணுடையான் ஒரு மூன்று கண்ணுடையார்க்கு உணர்த்தல் இயல்பே யாதலின் முக்கண்—என்ற அடைபுணர்த்தலானது. ஒருவைகல்—ஒருநாள்; பக்குவம்—தெளிவு; ஓம்பொருள்—பிரணவப் பொருள். பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமமொழிந்தோன்'—கந்தர்கலி. ஓமெனுமெழுத்திற் பிரமம் பேசிய நான்மறைவிதியை"—கல்லாடம். முருகனையே பிரணவப்பொருள் என்பதுண்டு. இப்பிரணவப் பொருளைச் சிவபெருமான் தன் தேவியாருக்குரைத்துக் கொண்டிருக்கையில் முருகக் கடவுள் இரகசியமாய்க் கேட்டறிந்தனரென்ப. பாடினேன்-இனிமையாக எடுத்துரைத்தோன். எழில்-அழகு; 'என்றும் இளையாய் அழகியாய்' என்பர்.

66. எங்கும் நிறைந்த இறைவி—சத்தி எங்கும் வியாபித்திருப்பவள் என்பதை, "உலகமொ ரேழு மண்டருலகமு மீசர் தங்குமுயர்கயி லாயமும்பொன் வரைதானும்—உயிரொடு பூதமைந்து மொருமுத லாகிநின்ற உமை"—என்னும் குருமலைத் திருப்புகழால் அறியலாம். துங்கம்—உயர்வு. தாய்க்கு இளைய பிள்ளையிடம் பாசம் மிகுதியாதல் பற்றித் 'துங்கமுறு' எனப்பட்டது. 'கந்தன்' என்ற நாமவரலாறு முற்கூறப்பட்டது.

எச்சகமும் போற்ற எழுகடலு மெண்மலையும்
அச்சமுற வேலெடுத்த அண்ணலான்—பச்சைநிற 67

மஞ்ஞை தனிலேறி மாவண்ட மோர்நொடியில்
விஞ்சை யுடன்வலஞ்செய் வீரன்காண்—விஞ்சுபுகழ் 68

எட்டுத் திசையதிர ஈரிரண்டு திண்முடிமேற்
குட்டுங் குருவாய்க் குலவுவோன்—கெட்டுருகும் 69

---

67. அச்சமுற வேலெடுத்த வீரத்தை "வேல்வாங்கு வகுப்பு" நூலுட்காண்க. எச்சகமும்போற்ற—"வீரவேல் தாரைவேல்" என்றவெண்பாவோடு "சீரன் தனது பாடல் பெற்றுலகுதன்னில் ஒப்பில் புகழ்பெற்ற வைவேல்" என்ற பெரியார் உரைகளும் "அண்டருலகுஞ்சுழல எண்திசைகளுஞ்சுழல" என்ற பாடற்பகுதியும் காண்க. அண்ணல்—ஆண்பால்சிறப்புப் பெயர்

68. மஞ்ஞை—மயில்; மாங்கனிக்காக மயிலேறி உலகு வலம்வந்த செய்தி இதனிலுள்ளது. ஜெகமுழுது முன்பு தம்பி முகனொடு தந்தைமுன்பு திகிரிவலம் வந்த செம்பொன் மயில் வீரா" என்பர் திருப்புகழில். விஞ்சை—வித்தை; வையாளிவித்தையாம். வீரன்—'வீராநமோ நம' என்பர்; வீரத்தன்மை இப் பெருமானுக்கே உரியதாதல் வெளிப்படை.

69. எட்டுத்திசை—நாற்பெருந்திசைகளும்மூலைகளுமாம். திசைமுகனுகலின் திசைகளும் அதிர்ந்தனபோலும்! அறிவின்மை மேற்கொண்டது சிரமாகலின் முடிகள் புடையுண்டன போலும்! குருவாய்—'சததள பார்த்திபற் கரிபுரு ஷோத்தமற் கெரிகன லேற்றவற் குணராதோர்—சகலச மார்த்தசத் தியவன சூக்ஷமுக் கியபர மார்த்தமுற்—புகல்வோனே"–திருப்புகழ்: 124.

அண்டர் முறைகேட் டரக்கர் வலிதொலைத்த
சண்டப்ர சண்டன் தருமதுரை—பண்டொருகால் 70

அத்தியிற் கொக்கா யமர்ந்தவனைச் சங்கரித்தோன்
பத்தியுறு தேவர்கோன் பாவைதனை—மெத்தவுயர் 71

குன்றமதி லேமணந்தோன் கோலக் குறமாதைப்
பின்தணிகை வேட்டருள்செய் பேரழகன்—கன்றலுறும் 72

---

70. அண்டர்--தேவர்; முறை—குறையின்முறையீடு; அரக்கர்—சூரன் முதலியோர். சண்டப்ரசண்டன்-மிகுவேகன்.

71. அத்தியிற் கொக்காய் அமர்ந்தவன்—சூரபன்மன்; அத்தி—கடல்; கொக்கு--மாமரம்; அத்திமரத்தில் கொக்கு என்பது தோனி;"வரைமருள் புணரிவான் பிசிருடைய—வளிபாய்ந் தட்ட துளங்கிருங்கமஞ்சூ--ளுளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி — அணங்குடை யவுணரேமம் புணர்க்கும்—சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக் கடுஞ்சின விறல்வேள்"-பதிற்றுப் பத்து. அத்தியின் — இதனை, யானைஎனக்கொண்டு, பிணிமுகம் என்னும் களிற்றினையூர்ந்து எனவும் பொருள் காணலாகும். தேவர்கோன்பாவை—இந்திரனுலளிக்கப்பட்ட தெய்வயானை என்னும் நாச்சியார் "மறுவில் கற்பின் வாணுதல்" என்பர் நக்கீரர். முருகனை எய்துதற்கு அன்புகொண்டு நோற்ற தவமகளாகலின் 'பத்தியுறு' எனப்பட்டது. "சட்டியிற் கொக்கைச் சுட்டு" என்று நயம்படவுங் கூறுவர் பிறர்

72. மெத்த உயர் குன்றம்—திருப்பரங்குன்றம். இது 'கூடற்குடவயின் குன்று.' கோலம்—அழகு; எழுதிட அரிய எழிலுடையயள், நகைமுக விநோத ஞான குறமின், மடலூடே எழுத அரியவள், ஆரினு மழகு மிகப்பெற்று யவளுளும் ஆகிய வேடுவர் சிறுமி' என்றெல்லாம் பாராட்டப்படுதலின் 'கோலக் குறமாது' எனப்பட்டது. பின் — தெய்வயானையம்மையை வேட்டபிறகு. தணிகை—ஒருதலம்; 'புலவருலாவும் தணிகை' திருப்புகழ்-251. கன்றல்—கவலைப்படுதல்.

இம்மா நிலத்தோரை யிந்தக் கலியுகத்தில்
அம்மை யெனவணைக்கு மாதரவான்—வெம்மை 73

மனக்கவலை தீர்க்கு மருங்கல்வி வள்ளல்
தினக்கவலை தீர்க்குந் திருமால்—மனக்கல் 74

---

73. அம்மைஎன—தாயொப்ப; 'என' ஈண்டு உவமஉருபு. மாந்தர்க்கும் அமரர்கள் வேந்தற்கும் அவரவர் வாஞ்சைப்படி இந்நாளிலும் எங்கே நினைப்பினும் அங்கே முன்வந்து அருளுந் தன்மையன் முருகன் என்க. 'நெடுமூதண்ட அண்டபகிரண்டங்கள் யாவும் கொடுஞ்சிறகினால் அணையுந்தனது பேடையண்டங்களெனவே அணைக்கும்' இயல்பு இப்பெருமான் ஊர்திக்கும்உள்ளதென்பர்அன்பர். தாயும் ஆகியதந்தையாரியல்பு மைந்தனார்க்கு முரிய தன்றே!

74. 'உறங்கவல் ஒன்றுற்றுழியும் கைகொடுக்குங்கல்வி யாகலின் 'கவலைதீர்க்கும்கல்வி' என்றுரைக்கப்பட்டது. அன்றி, மனக்கவலைதீர்க்கும் வள்ளல்' எனினும் ஆம். 'கேடில் விழுச்செல்வம்' ஆதலால் 'அருங்கல்வி' எனப்பட்டது. தன்னை உபாசிப்போர்க்கு எத்தகைய கல்வி வளனும் ஈவோனாகலால் கல்விவள்ளல், என்பது பொருந்தும். இச்சொற்றொடர் முருகனைப் பிரமனாக நினைந்து கூறியது. பிரமற்கும், சிவபெருமானுக்கும், அகத்தியற்கும் அறுமுகம் ஒளிவிட வந்து நான்மறை யுபநிட மதனையும், பைந்தமிழினையும் பகர்ந்தருளியவன் முருகன். தினக்கவலை—சோற்றுக்கவலை; 'உண்டிராக்கிடக்கும் போதும் உடலுக்கே கரைந்து நைந்து' என்பர் ஆழ்வாராதியரும் இவ்வரி திருமாலாகக்கருதிக்கூறியது.

உருக்குந்தீ வண்ணன் உருகுமவர்க் கின்பம்
பெருக்குங் குணங்கொள் பெருமாள்—முருக்கை 75
அவிழ்க்குமுன் வண்ட ரணிமலரைக் கொய்து
குவிக்குமவர்க் குப்பொருளைக் கொண்டு—குவிப்போன்

---

75. இதன் முதல்வரி முருகனை உருத்திரனுகக் கருதிக் கூறியது. **தீ வண்ணன்**—நெருப்புப் போலும் செய்ய மேனி படைத்த உருத்திரன். முருகனும் செந்நிறத்தன். ‘செய்யன்’ என்பர் நக்கீரர். ‘கனகாத சதகோடி சூரியர்கள் உதயமென’ என உவமைகாட்டுவர் பாட்டுவல்ல அருணகிரியார் நெஞ்சினை ‘இரும்போ பெரும் பாறையோ’ என்பர் இராமலிங்க அடிகள். ‘மனங்குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கருமையோ’ என்பர் **தாயுமானுர்**. ‘நெஞ்சே நின்னை அறப்பெறுகிற் பேனேல் பெற்றேன் மற்றீண்டு ‘துறக்கந்திறப்பதோர்தாள்’ என்பர் நீதிநூலாரும். மன ஒடுக்கமே முத்தி; மனவிரிவே உலகம் (மாயை) என்பர் வேதாந்தியர். **உருகுதல்** — உளம் குளபதம் அடைதல். **இன்பம்** — உவட்டா இன்பு. **பெருமாள்**—இதுவும் முருகனுக்கு ஒரு பெயர். திருப்புகழில் ‘பெருமாளே’ எனக்கூறுதல்காண்க.

76. **முருக்கை அவிழ்க்குமுன் வண்டர்**--வண்டு மலரின் கண்ணுள்ள தேன்காளத்தினைத் தன் தும்பியால் உழக்கியவிழ்க்கு முன்பே. எனவே வண்டெச்சில் படாவண்ணம் மலர் கொய்து பெருமானுக்குச் சாத்தியருச்சித்தல் வேண்டும் என்னும் **புட்பவிதி**. பெருமானுக்கு மலரைச்சாத்தி வழிபடுதல் பண்டையோர் வழக்கு. ‘குடந்தம் பட்டுக் **கொழு மலர்** சிதறி’ என்பர் **முருகாற்றுப் படை**யுள்ளும். **அணிமலர்**—அழகிய மலர் என்றேனும், அணியத்தக்க மலர் என்றேனும் கொள்க. முருகனுக்குகந்தமலர்கள் காந்தள், கடம்பு, கழுநீர், கரந்தை, அடம்பு, அறுகு, குரா, கூதளம், கோங்கு, வெண்டாமரை, தும்பை, பிச்சி, முல்லை, வெட்சி, வெள்ளில் முதலியன **கொய்து**: **தூவிக்கை துவிக்தும்**’ எனக்கொள்க. ‘**துவிக்துமவர்க்துக் துவிப் போன்**’ என்றதன் **நயம்** காண்க. **பொருள்** – வேண்டுவார் வேண்டும் பொருள். அறிவை அறியும் பொருளுமாம். முருகன் ‘கேட்ட பொருளீயும் தியாகாங்க சீலன்’ என்பர்.

இடுக்கண் பலவந் திடிபோற் படுத்திற்
றிடுக்கெனவே அத்தனையுந் தீயப்—பொடித்திடுவான் 77

ஆறுமுக வேயென் றருமையுட னேயழைத்தால்
நூறுபிறப் புப்பாவம் நூறிவிடும்—தேறிடினே 78

---

77. இடுக்கண்—துன்பம்; காண்போர் கண்கள் இடுங்குமாறு செய்யவல்ல துயரநிலை; ஆத்யான்மிகம் முதலிய மூவகைத் துன்பங்கள் எனினும் ஆம். இடிபோல்—இடி, நேர்ப்பட்டாரைக் கொன்று படாதாரையும் அச்சுறுத்துவது போன்று; "எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்து எதிர் நிற்பனே" என்ற வாசகமும் கருதத்தக்கது. தீய—தழல்விழியினின்றும் தழலுருவிற் றோன்றியவன் முருகன்; ஆதலின் துன்பங்களை எரித்து நீறாக்குவது எளிதென்க.

78. ஆறுமுகம் — இப்பெருமாற்குரிய பெயர்களுள் ஒன்று. "ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே" என்னும் திருப்புகழ் கருதத்தக்கது. "ஆதியொடும் அந்த மாகிய நலங்கள்" ஆறுமுகமாகும் என்பர். அடைந்தாரது துன்பங்கள் ஆறுதற்கு உரிய இடமாக நிற்பவன் என்றும் இச்சொற்றொடர் பொருள் படுதலுங் காண்க. அருமையுடனேஅழைத்தால்—உள்ளம் உருகிக் கண்ணீர்வார உண்மையன்பொடும் கூப்பிட்டால். பிறவி தோறும் ஈட்டப்பட்ட எப்பாவங்களும் பஞ்சிற் கனல்பட்டாங்கு எரிந்துபடுமென்பதுபற்றி 'நூறு.........நூறிவிடும்' எனப்பட்டது; தேறிடின்—தெளிவாகக் கூறில்.

### தசாங்கம்.

**சூரபன்மன் செய்த தொலையாப் பெரும்பாவம்**
**தீரவவ னேமலையாய்ச் சில்வருடம்—ஈரமுடன்** 79

**நற்றவத்தைச் செய்தமையால் நாயகனுங் கேயவற்குப்**
**பொற்றிருப்பா தங்கொடுத்த புண்ணியமார்—நற்றிருப்**
**[பேர்** 80

---

இதுமுதல் தசாங்கம் சொல்லப்படுவது. தசாங்கமாவது அரசர்க்குரிய பத்துறுப்புக்களாம். அவை—ஊர், கரி, கொடி, செங்கோல், நாடு, பரி, மலை, மாலை, முரசு, யாறு என்பன. இந்த இப்பாட்டுடைத் தலைவனான முருகப்பிரானுக்குரிய மலை முதலிய பத்தும் கூறப்படும்.

79. சூரபன்மன் அசுரனாயிருந்த காலத் தான் செய்த பாதகங்கள் யாவும் தீர, மயிலொத்த மலையுருக்கொண்டு முருகனை வரங்கிடந்து என்ஞான்றும் இப்பெருமான் தன்மீதமர்ந்தருள் செய்யும் வண்ணம் அருளப்பெற்ற வரலாறு இக்கண்ணியிற் கூறப்பட்டுள்ளது. இதன் விரிவினை இத்தல நூலானறிக. "அமரர்ப்பிணித்த அருவினை ஒருவப் பெருவா முற்றுத்திருவரை யுருக்கொடொருவன் திகழ்வது" என்ற பாடாண்பாட்டு வரிகள் இச்செய்தி கூறுவன. ஈரம்—அன்பு.

80. **நற்றவம்**—தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு பிற உயிர்களை ஓம்புதலால் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டது. "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை—அற்றே தவத்திற் குரு" — **குறள். செய்தல்**— 'நீடிய சடையோடு ஆடாமேனிக் குன்றுறைந்து' செய்வது— **நற்றிணை** 141. **நாயகன்**—தலைவன்; ஈண்டு முருகப்பிரானை உணர்த்தும். இச்சொல் 'நடத்துபவன்' என்னும் பொருளுடைய தென்பர். **ஆங்கு**—பக்குவம் முற்றுப்பெற்ற பருவத்தே. **அவற்கு** — அச்சூரபன்பனுக்கு; **திருப்பாதம் கொடுத்த** — அநுக்கிரகித்த.

உற்ற மயிலை உயர்வரையான் ஒண்கமல
முற்ற வராக உயர்நதியான்—முற்றெழிலார் 81

தொண்டைவள நாட்டான் சுடர்மயிலை மாம்பதியான்
வண்கடம்பு மாலையான் வார்துதிக்கை—கொண்டநல் 82

---

81. இப்பெருமான் எழுந்தருளியுள்ள மலையின் பெயர் **மயிலாசலம்** எனப்படும். உயர்—சிறந்த; இச்சிறப்புக்குக் காரணம் இம்மலையினிடத்துப் **பாலய சித்தர்** தவம் புரிந்தமை யாகும். "சித்தன் மயிலை வெற்பினிடைச் சிவன்மாமகனை யுள்ளத்தின் — உய்த்துப்புரிந்த தவம்" உடையது இம்மலை. **மயூராசல புராணம்.** "கன்னன் முன்னேன் கடுமொழி கழல் வழி—இன்னதே என்னத் துன்னருந் தவங்கொடு — பாலசித் தாகிப் பன்னாட் பயின்றதும்"—**பாடாண்பாட்டு. வராகநதி**— இம்மலையைச்சார்ந்த ஒரு தீர்த்தம்; இது நதி. இத்தீர்த்தமும் மிக்க மகிமைவாய்ந்தது. **எழில்**—அழகு; எழுச்சி; **ஆர்**— நிரம்பிய.

82. தொண்டை நாட்டுக்கு வளமை சான்றோரை உடைமையெனப் புகல்வர். இத்தலம் தொண்டை நாட்டது என்க. தலத்தின் பெயர் **மயிலம்** என்பது. **சுடர்**—ஒளி; அதாவது புகழ். இத்தலம் தன் புகழ் எத்திசையும் பரவ இருப்பதென்பது கருத்து. கடம்பு மாலை முருகற் குரியது. இந்நூல் இறுதியிலும் வண் கடம்பு மாலையை வாங்கிவந்து தந்துதவுமாறு அன் பொடு வேண்டுதல் காண்க. இம்மரம் கார்ப்பருவத்தே தளிர்ப் பது. இதனை, 'கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்—சூர் நவை முருகன்' என்ற **புறநானூற்** றடிகளாலறியலாம். **வார்**— நீண்ட; உரிச்சொல். "வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள" **தொல்: சொல்: 311. துதிக்கை**—இது,யானைக்குள்ள விசேட உறுப்புஎன யாவராலும் துதிக்கப்படுவது; தும்பிக்கை. இந்திரனூர்தியாகிய வெள்ளை யானை, நம் முருகப்பிரானுக்குரியவளாகத் தெய்வயானை நங்கையினை ஓம்பி அவற்களித்த சிறப்புடைமையின் '**நல்**' எனப் பட்டது. இதனால் இவ்யானையின் துதிக்கை வாளா பயனற் றிராது தானமும் தருமமும் செய்து சிறப்புற்றமை காண்க.

வெண்களிற்று வாகனத்தான் வீர மயிற்பரியான்
திண்ணிருளோ டக்கூவுஞ் சேவலெனும்—வன்கொடி
[யான் 83

---

83. வேண்களிறு—ஐராவதமென்னும் வெள்ளையானை; தனக்குச் செய்த பெருநன்றிகாரணமாகத் தேவேந்திரன் ஒண் கடம்பின் முருகனை அமராவதியில் வெண்களிற்றமர்த்தி உலாச் செய்வித்து மகிழ்ந்தானுகலால் வெண்களிற்று வாகனத்தான் என்னப்பட்டது. "வைந்நுதி பொருத வடு ஆழ் வரிநுதல்—வாடா மாலை ஓடையொடு துயல் வரப்—படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்—கூற்றத்தன்ன மாற்றரும் மொய்ம்பின்—கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு — ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்-காதலின் உவந்து வரங்கொடுக்கும்" காட்சியை நினைந்துரைத்தமையும் ஆம். "தன்னை வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல் வந்து அருள் செய்தல் முருகற்கு இயல்பு" என்ற நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புக் கருதி யானையேறி நடாத்துதல் மயிற்பரியூர்தலுக்கு முன் கூறப்பட்டுள்ளது. வீரமயில்பரி—வீரத்தன்மை வாய்ந்த மயிலென்னும் வாகனம். "சக்ரப்ரசண்டகிரி முட்டக்கிழிந்துவெளி பட்டுக்ரவுஞ்ச சயிலந்—தகரப்பெருங்கனக சிகரச்சிலம்புமெழு தனிவெற்பு மம்புவியு மெண்—திக்குத் தடங்குவடு மொக்கக் குலுங்கவரு சித்ரப் பதம் பெயரவே—சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர் திடுக்கிட நடிக்குமயில்" எனப் பெரியோரும் புகழ்வதால் வீரமயில் எனலாயிற்று. 'ஆடும்பரி—வேல்-அணிசேவல்' என்ற மூன்றனுள் முதற்கண்ணது மயில் ஆகலின் சேவலின் முன் இக்கண்ணியுள் மயில் கூறப்பட்டது. இனி, 'வீரமயில்' என்ற சொற்றொடர்க்கு மாயையின் விளைவினைப் போக்கும் மயில் எனவும் பொருளமைதல் கூடும். வீ—மாயைவிளைவு; ரம்—போக்கியுதவல்; எனவே தேவமயிலென்க. மயிலை விந்துதத்துவம் என்பதும் உண்டு.

முர்முரசால் மூவுலகு முச்சுடரு மூவுயிருந்
தார்மடிக்கீழ் வைத்தளிக்குந் தங்காணைப்—பெம்
[மான்காண் 84

---

**திண் இருள்**—திணிந்த இருள்; சாமானியச் சேவல் இராப்போதின் இருள் நீங்கற்குக் கூவும் இயல்புடையது. முருகன்கைச்சேவல், அஞ்ஞான அந்தகாரம் நீங்கக்கூவுவது. சூரியோதயத்திற்கு அறிகுறியாகும் சேவல் கூவல்; ஞானோதயத்துக்கு அறிகுறியாகும் இச்சேவல் கூவுதல். "ஆணவத் திருள் சீய்த் தருளொளி யுதித்தற்கு ஆவலாக் கூவுசெஞ் சேவல்"—மயிலாசலமாலை. மாயை தொலைத்து, ஞான உதயம்பெற்று அருட்டன்மை முற்றப்பெற்றால் முருகன் திருவடிப்பேறு சித்திக்கும் என்பதனை மயிலும், சேவலும், வேலும் முறையே உணர்த்துவன ஆம். சேவலை அறத்தின் அறிகுறி எனவும் பெரியோர் கூறுவர். **திருப்புகழ் 518.** இனிசேவலை நாத தத்துவத்துக் கறிகுறியெனவுங் கூறுப. மயிற்கொடியும் உரித்தாகலின் அதனின் சிறப்பித்தற்கு **வண்கோடி** எனலாயிற்று. "வாளகிரியைத்தனது தாளிலிடியப் பொருது வாகைபுனை குக்குட பதாகைக்கானும்" என்பது வேளைக்காரன்வகுப்பு.

84. **மும்முரசு**—வீரமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்பன; பிறவாறும் கூறுவர். **மூவுலகு**—மேல், கீழ், நடு உலகங்கள். **முச்சுடர்**-தீ, திங்கள், ஞாயிறுஎன்பன. **மூவுயிர்**-விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படும் உயிர்கள். அன்றி, மக்கள், தேவர், நாகர் என்ற மூவுலகத்துயிர்கள் எனினுமாம். **அளித்தல்**—அருளோடுபாதுகாத்தல். **ஆணை**—செங்கோல்; செம்மையே செய்யுங்கோல் போன்று முருகன் ஆணையும் எவர்க்கும் செம்மையே விளைப்பதென்க. **காண்**—முன்னிலையசை.

வழிபடுவோர்

மூவர் முனிவர்கள் முப்பத்து முக்கோடி
தேவர் பதினென் திருக்கணங்கள்—ஆவல் 85

---

இதுமுதல் முருகப்பிரானை வழிபடுவோர் இன்னின்னவரெனக் கூறுவது தொடங்கும்.

85. மூவர்—பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மும் மூர்த்திகளாவர். இனி, இம் மூவரும் வழிபடுதற்குரிய காரணம், "பலர் புகழ் மூவரும் தலைவராக" என்றதன் உரையாகிய "பிள்ளையார் அயனைச் சபித்தலின், அயன் படைத்தற்றொழிலைத்தவிரவே ஏனை இருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிதலும் இன்றாமாகலின் மூவரும் தத்தமக்குரிய தொழில்களைப்பெற்றுத் தலைவராகவேண்டி" என்ற இடத்துக் காண்க. முனிவர்கள்—இருடியர்கள். இவர்கள் முருகனையே மனனம் செய்பவராவர். இத்தகைய முனிவர் இயல்பினைச் "சீரை தைஇய உடுக்கையர் சீரொடு—வலம்புரி புரையும் வால் நரை முடியினர்—மாசற இமைக்கும் உருவினர் மானின்—உரிவை தைஇய ஊன்கெடுமார்பின் — என்பெழுந்தியங்கும் யாக்கையர் நன்பகல்—பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு—செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்—கற்றோரறியா அறிவினர் கற்றோர்க்குத்—தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு—கடுஞ் சினம் கடிந்த காட்சியர் இடும்பை—யாவது மறியா இயல்பினர் மேவாத்—துனிஇல் காட்சி முனிவர் — எனத்திருமுருகாற்றுப் படை கூறும்.

முப்பத்து முக்கோடிதேவர்—நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்து மூவரும் வகைக்கொருகோடியாகக் கூடிய முப்பத்து முக்கோடிதேவர்கள் ஆவர். 'நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு' என்பர் திருமுருகினும் அவராவார் ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாகிய பிரிவினர்.

**அதிகரித்த மண்மகளிர் அன்புடைவிண் பெண்டிர்**
**துதிபுரியும் பக்தருடன் தொண்டர்—கதிபுகுந்த** 86

---

**பதினெண்திருக்கணங்கள்**—உயர்ந்த நிலையைப்பெற்றவ ராகிய பதினெண் கணத்துத் தேவர். இக்கணத்தவர் பெயர் வகையினை, 'ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்' என் பதன் உரையாலும், "பதினெண் கணனும் ஏத்தவும்படுமே" என்ற **புறநானூற்றுக்** கடவுள் வாழ்த்துவரியுரையாலும், **சிலப் பதிகாரம் 5: 176** ஆம் அடியுரையாலும், நிகண்டுகளாலும் அறியலாம். மற்றும், நூறுபல்வேள்வி முற்றிய திருக்கிளர் செல்வன், நாற்பெருந்தெய்வம் முதலிய கூறப்படாதோரையும் உடன் கொள்க.

86. **ஆவல்அதிகரித்த**—தரிசிக்குந்தோறும் எழுந்தஅவா முற்றுப்பெறாது மென்மேலெழுதரப்பெற்ற. இவ்வவா, பெருமா னின் வடிவினை முடியக் காண்டற் கெழுந்ததாகும். **மண் மகளிர்**—மண்ணுலகத்துப் பெண்டிர். **மண்**—கழுவுதலும் ஆம்; உள்ளம் நெக்குருகிக் கண்ணீர்வார மெய்ம்மறந்து ஈடுபடுங்கால் அக்கண்ணீரால் மெய்ம்முழுதும் மண்ணப்படும் மேனியுடைய ராயினர் எனக்கொள்க; **விண்பெண்டிர்** — விண்ணுலகத்து அரம்பை முதலிய ஆடல் மகளிர்; கந்தருவமகளிரும் ஆவர்; "நோயின்றியன்ற யாக்கையர் மாவின்—அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும் — பொன் உரைகடுக்கும் திதலையர் இன் நகைப்—பருமம் தாங்கிய பணிந்தேந்தல்குல் — மாசில் மகளிர்" என்பர் **கீரநும்**. இனிச் 'சூரரமகளிர்' எனினும் பொருந்தும். **துதி**—தோத்திரம்; புகழ். **பக்தர்** — அன்பர்; **தொண்டர்** — இப் பிராற்கருகிருந்து எப்போதும் தொண்டு செய்பவர்; "தலைவன் வரவினைக் காந்தந்தோய்ந்த ஊசியிற் கருதியும்—தாம்தம் கருமம் தருவழி உஞற்றியும்— வேர்தும் வியவரும் வேறற விரும்பியும்—சாந்தம் பூண்டும்

**கும்பமுனி நக்கீரர் கோதில் குமரகுரு**
**நம்பு மருணகிரி நாதருடன்—உம்பர்மேல்** 87

தொண்டிற் சார்ந்து"—ஞாயிறுவாழ்த்து. பெருமானுக்கே யன்றிப் பெருமானடியார்க்கும் வேண்டுவசெய்தல் தொண்டரின் முழுஇலக்கணமென்க. **கதி**—நன்னெறி; தமிழினை யறிந்து தென்றிசைப் போந்தமையும் ஆம். சரியை, கிரியை, யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளுள்ளும் மேலதாகிய மெய்ஞ்ஞான நெறியிற்பட்டு எனினும் ஆம். ஞான நன்னெறியினை முருகப்பிரானிடம் கேட்டுத் தெளிந்தமையால் இங்ஙனம் கூறுதலும் ஒல்லும். அன்றியும், இரேணுகரால் உபதேசிக்கப் பட்டு வீரசைவ சித்தாந்த நெறியுட்புகுந்து எனினும் ஆம். "இரேணுகன் கடிதெழுந்தங் குயர் விசும்பிடைக் காந்தான்—அப்பெரு முனிவன் நோக்கி அற்புத முடனிருந்தான்—செப்பரும் வீரசைவ சித்தாந்த நூலுணர்ந்து"—**சித்தாந்தசிகாமணி.**

87. **கும்பமுனி**—குடத்திற்றோன்றிய மகத்துவமுடைய அகத்திய முனிவன். "தென்னவன் பெயரிய துன்னருந் துப்பின் தொல் முதுகடவுள்"—**மதுரைக்காஞ்சி.** "அகத்தியனைத் தென்றிசை யுயர்ந்த நொய்ம்மைபோக இறைவனுக்குச் சீரொப்ப இருந்தான் என்பது பற்றிக் கடவுள் என்றார்"—**நச்: உரை.** **நக்கீரர்**—கடைச்சங்கத்துப் புலவரேறு. சிவபெருமானொடு முரண்கொண்டு வாது செய்த இவர் அப்பெருமான் திருமகனாகிய முருகனை வியந்து ஆற்றுப்படையாற் போற்றி யுரைத்தல் காண்க. **கோது**—குற்றம். கலவி, ஒழுக்கம், கடவுட்பணிதல் என்ற மூன்றிடத்தும் ஒரு சிறிதும் வழுவில்லாக் கெழுதகையாளர் என்க. குமரனருளா லுதித்துப் பெயர் கொண்டு பீடும் படைத்த மாசில் தமிழ்த்துறவியாவர். **நம்பும்**—யாவராலும் நம்பத்தகுந்த; முருகனையே முழுமுதலாகக்கொண்டு நம்பியொழுகிய; தாயுமானுர் முதலிய தூயோரும் பாராட்டும் பெருந்தகையர் இவர். "**வாக்கிற் கருணகிரி**" என்பது பாராட்டுரை. **உம்பர்**—தேவர்;

நாயன்மார் சித்தர் நலமுடைய வேல்மன்னர்
நேயமிகு யோகிகளுர் நீண்மறைகள்—போயறியாக் 88

காலை வணங்குங் கடமையினி லேவழுவாப்
பாலையா ரெந்தரெனும் பண்ணவனுர்—நூலை 89

---

88. மேல்நாயன்மார் --மேன்மை படைத்த நாயன்மார்கள். சித்தர்--தவச்சித்திபெற்றவர்கள். முருகனே ஒருபெருஞ் சித்தன் எனப்படுவனுகலால் சித்தர் தம்சித்தத்தே கொண்டனர் என்க. 'சித்தன்வாழ்வு' என ஆவினன் குடி கூறப்படுதல் காண்க. மன்னர்—அரையர்; ஏனைப்படைக் கலங்கள் பலவாயிருப்பினும் அரசர்கொற்றங் குறிக்குங்காலத்தெல்லாம் வேல் என்ற அடைகொடுத்தே பெரும் பான்மை கூறுதல் அரசரெல்லாரும் முருகன் அமிசமுடையரென்றற்குப் போலும்! நேயம்—நெய்ம்மை. யோகிகள் — ஆதார நிராதார யோகிகள். நீண்மறை — என்ஞான்றும் பொய்த்தொழியாது நீடியவேதம். வேதங்கள் கடவுளின் பாதங்களையே தேடுவனவாம். "மறை ஆயிரங்களும் குமரகுரு என ஒலிட" திருப்புகழ் — 211.

89. அறியாக்காலை — வேதங்களாலும் தேடி அறியவொண்ணுத் திருவடிகளை. இங்ஙனம் கூறியது வள்ளியை நாடித்தேடியடைந்த எளிமைப்பாடு புலப்படுத்தற்கென்க. "உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்" எனவும், "புலம் பிரிந்து உறையுஞ் சேவடி" எனவும் பலவாறு புகழப்படுதல் தேற்றம். திருவடியே வீடாயிருக்கும். "தென்னன் பெருந்துறையான், காட்டாதன எல்லாங்காட்டிச் சிவங்காட்டித், தாட்டாமரைகாட்டித் தன் கருணைத்தேன் காட்டி" —திருவாசகம். முகனமர்ந் தேத்துதலும். கைதொழூஉப் பரவுதலும், காலுற வணங்குதலும் யாவரும் செய்யற் பாலன என்னும் முருகாற்றுப் படை. ஆதி பாலயசித்தற்குத் திருமயில வரையினிடத்து முருகவேள் காட்சியளித்தமை அத்தல வரலாற்றுணறிக. மறந்தும் புறந்தொழாத மாண்புடைய இவரும் முருகனை எப்போதும் முன்னி வழிபாடுசெய் வரலாறுகாண்க; பண்ணவன் — குருமூர்த்தி.

உணர்ந்துருகு முள்ளத்தான் ஒண்டுறவி நன்மெய்
யுணர்ந்தான் புலவர்க் கொளியான்—இணங்கி 90

---

இது முதல் ஐந்து கண்ணிகள் திருமயில ஆதீனத்துத் தற்போது எழுந்தருளியிருக்கும் பதினெட்டாம் பட்டத்துச் சிவஞானபாலய தேசிகர் சிறப்பை உரைப்பனவாகும்.

90. நூலை—மனக்கோட்டந் தீர்க்கவல்ல ஞான நூல்களை; ஒண் துறவி—வீடுபயக்கும் ஞான உணர்வினை உடைய துறவற நெறியில் நிற்பவர்; துறத்தலாவது — புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாய பற்றினை அவற்றது நிலையாமை நோக்கி விடுதல். நன்மெய் உணர்ந் தான்—எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்மெய்ப் பொருள் காண்பதாகிய அறிவு உடையவர். திருக்குறளில் ஞானம் கூறவந்தவர் நிலையாமை — துறவு—மெய்யுணர்தல்— அவாவறுத்தல் என்று கூறிய முறைமையின் வண்ணம் இக்கண் ணியில் அடுக்கியுள்ள இயைபு கருதுக. புலவர்க்கு ஒளியான் என்பது அவாவற்ற செயலைக்காட்டும். மற்றும் புலவர்களின் வறுமைத் துன்பமாகிய இருளுக்கு அதனைப்போக்கவல்ல ஒளி போன்றவன் எனவும் தகும். புலவரைக்காண நேரின் சில புல் லரைப் போன்று ஒளிந்து கொள்ளாதவன் எனினும் ஆம். எனவே புலவர்க்கு எளிதிலே காட்சியும் திருவும் தருபவன் என்க. மற்றும் புவர்கள் பாடுதற்கேற்ற புகழ் உடையான் என் றும் உரைக்கலாம்; ஒளி — புகழ்; இல்லது புனைந்து இடர்ப்படவேண்டாமல் உள்ளது கூறி உவக்கும் தகைமைக்கு உரியோன் என்க.

**இருக்கப் பலபெரியோர் என்றுமகிழ் பூப்போன்
சுருக்கமில் கேள்வியுடைத் தூயோன்—பெருக்கமுறத் 91**

**தண்டமிழ்க்குத் தொண்டால் தமிழிளைஞர் முன்னேறக்
கண்டோ ரதிசயிக்கக் கல்லூரி—கண்டோன் 92**

---

91. 'பலபெரியோர் இணங்கியிருக்க மகிழ் பூப்போன்'—என முடிக்க. கற்பக நீழலில் துய்க்கும் இன்பத்தினும் கற்றாரிடையே துய்க்கும் இன்பம் சீரிதாகலின், 'நல்லார் இணக்கமும் நின்பூசை நேயமும்' என்ற உரைப்படி பலபெரியோரொடும் அளவளாவி என்றும் குன்றாமகிழ்ச்சி தோன்றப் பெறுபவன் என்க. **சுருக்கம் இல்** — உறுதிப்பொருளாகிய பயன் விளைத்தலில் குறைபாடில்லாத. **கேள்வி** — நற்கேள்வியால் விளையும் ஞானம். தான் சிவத்தினையறிந்த ஞானியெனப் பெயர் பூண்டிருப்பினும் தன்முனைப்பு ஒரு சிறிதுமின்றித் தக்கார்கூறுகின்ற கேள்வியாகிய செல்வத்தினை நிறையப்பெறும் திருவுளப்பாங்குடையவன் என்க. **தூயோன்**—மனமாசற்றவன்; **பெருக்கம்உற**—மென்மேலும் அபிவிருத்தி அடையுமாறு.

92. இக்கண்ணி, இந்தச்சுவாமிகள் தமிழ்மொழி வளர்ச்சியுறவும், தமிழ்நாடு தமிழறிவு பெறவும் விரும்பிப்பெருத்த செலவில் தமிழிளைஞர்பலர் இலவசமாகச் செவிக்குணவும்வாய்க்குணவும் பெற்றுத்தழைக்குமாறு பலரும் புகழத்தக்க '**தமிழ்க் கல்லூரி**' ஒன்றை நிறுவிப் பேணிவரும் பெருவண்மையைக் கூறுவதாகும். இக்கல்லூரி நிலவுமிடமும் மயிலவரை ஆகும், இப் பின்விளைவுங் கருதிப்போலும் மும்மைக்கும் மாறுபடாச் செம்மை மொழி வழங்கிய **சிவப்பிரகாச அடிகளார்**, 'அருந்தமிழ் நாடு ஒரு கோடி தவஞ்செயவந்து' எனச்சிறப்பித்துள்ளார்; **தண்தமிழ்** — குளிர்ச்சிப்பண்புகொண்ட தமிழ்மொழி. **தொண்டால்**—தொண்டு செய்யும் நோக்கத்தால்; தமிழ்க்குத் தொண்டுபுரியும் வகைகளைக் கூறவந்த தேசீய கவியாகிய **பாரதியாரும்** 'வீதிதோறும் இரண்டொரு பள்ளி' எனக் கூறியதை உள்ளுக. **தமிழிளைஞர்**- இங்குத் 'தமிழ்' பலபொருள் ஒரு சொல். **முன்னேற**—கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் முற்போக்கடையும்படி.

சுதிபரவுஞ் பாடாண் சுவணவொளி வாழ்த்தே
மதிசேர் மயிலமலை மாலைத்—துதிகொண்டோன் 93
பட்டம் பதினெட்டிற் பண்பாய்ப் பொலிகின்ற
சிட்டன் சிவஞான பாலையன்—இட்டமுடன் 94

93. **சுதி பரவும்**-இனிய இசைபரவியுள்ள; **பாடாண்**-பாடாண்பாட்டு என்னும் நூல்; **சுவணஒளி வாழ்த்து** — சுவர்ணம் போலும் ஒளிபடைத்துள்ள 'ஞாயிறுவாழ்த்து' என்னும் நூல்; **மதி**—சந்திரன்; **மயிலமலை மாலை**—மயிலாசலமாலை என்னும் ஒரு நூல்; இந்நூல்களையெல்லாம் இவ்வடிகளார் வெளியிட்டுதவி, இந்நூலாசிரியனால் துதிக்கப்படும் பாக்களைக் கொண்டவன் என்க.

94. **தற்போது, திருமயிலம், திருப்பிரமபுரம் ஆதீனத்தே** எழுந்தருளியுள்ள அடிகளாவார் பதினெட்டாம் பட்டத்தவர் ஆவர். பதினெட்டென்னும் எண் வித்தைகுறிக்கும் ஓர் எண்ணாகலின் இவ்வடிகளார் காலத்தே தமிழ்வித்தை பல்கலுற்றது போலும்! **பண்பு**—சற்குணம்; இப்பண்பாவது யாதெனில், 'பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு மேவிக் கருணை புரி மேன்மை' யாகிய பண்பாகும். அதாவது, தம்மைத்தரிசித்தலாற் பாவிகட்குப் பாவ ஒழிவும், தம் புனிதச் செயல்களைக் காண்டலால் உதாசனர்க்குப் புண்ணிய விருப்பமும், தம்மை வழிபடுதலால் பத்தர்க்கு நல்வினைப்பேறும், தம்மை நம்புதலால் சீடர்க்கு முத்தியும் உண்டாக்கும் பண்பாம்.-**நெஞ்சுவிடு தூது.** **சிட்டன்** — மேலானவன். இம்மேன்மையினைச் சிவஞானி பிள்ளைத்தமிழ்—வாரானைப் பருவத்து எட்டாஞ் செய்யுளானறிக. முருகனுடைய அமிசம்பெற்று அவனெடுநிறையும் சிரேஷ்டமும் ஆம். **சிவஞான பாலையன்**—இது வழங்கும் திருப்பெயர் ஆகும். சிவத்தைக் கலத்தற்குரிய மெய்ஞ்ஞானமாகிய பாலை மக்கட்குப்புகட்டும் குரவன் எனப்பொருள்படுவது போலுள்ளது இப்பெயர்.

மற்றும் பல்சான்றோர் மாணடியை வாழ்த்துதலால்
முற்றங் களிசெய் முருகற்கே—உற்றதொரு 95

பங்குனி உத்திரத்திற் பண்டை முறைப்படியே
தங்கு மபிடேகந் தான்செய்து—துங்கமுறு 96

தூபம் திசைகமழத் தொல்லையுருக் காட்டுகின்ற
தீபத் திரள்சுழலச் சீர்பாடி—நீபத் 97

தொடையல் பல்சாத்தித் தூய்மையுறு மேலாம்
படையல் ஒழுங்காய்ப் படைத்திட்—டடைவோடு 98

---

95. சான்றோர்—பெரியோர்; மாண் அடி—மாட்சிமைப் பட்ட திருப்பாதம். முற்றம்—கோயில் முன்னிடம். களி—தன்னுணர்வை விஞ்சிய மகிழ்ச்சி. இங்குக் குழுமும் அடியார்கள் யாவரும் தம்மை மறந்து தலைவனைத் தலைப்படு நெறியினராவர் என்க.

96. பங்குனி உத்திரம் — இத்தலத்துப் பிராற்குப்பெரு விழா நிகழ்தரும் பருவம் இது. உத்திர நாளன்று, தரிசிப்பார் வினைமாசுகழுவும் செயல் நிகழ்வுறும். பண்டை முறை-வேதாகமங்களிற் கூறியுள்ள பழமையான முறை. இவ்வித முறையை அபிஷேகமாலே யானறிக. அபிஷேகம்—நனைத்தல். தான்—இதுகட்டுரைச் சுவைபட நின்ற சொல்.

97. தூபம் — நறும்புகை. "நறும்புகை யெடுத்துக் குறிஞ்சிபாடி" என்பர் பெரியோர். தொல்லை உருக்காட்டுகின்ற தீபத்திரள்—முருகப்பிரானுடைய பழமையாகிய தீப் பொறியுருவத்தைக் கண்ணெதிரே காட்டுகின்ற தீபவொளித் திரட்சி. நீபம்—கடம்பு.

98. தொடையல் — மாலை; படையல் — நிவேதனப் பொருள்கள். அடைவு—வரிசையுடன்.

நீலமயில் வாகனத்தில் நேரிழையர் தற்சூழக்
கோலமுடனே பவனி கொண்டுறலும் — சீலமுளோர் 99

இந்திரற்குப் பட்ட மிசைந்தபிரான் முன்வந்தான்
செந்தமிழைத் தந்தருளுந் தேவனே — வந்தான் 100

மயிற்பரி மேலழகன் மாண்பழநிக் கம்பன்
மயிலவரை வாழிளங்கோ வந்தான் — புயல்போல் 101

---

99. **நீலமயில்** — பன்னிறங்களும் கலந்திருப்பினும் நீல நிறம் மிகுதியாயிருத்தல்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது. **நேரிழையர்** — நேர்மையான ஆபரண மணிந்த மகளிர். **கோலம்** — அழகு. **பவனி** — உலா. **சீலம்** — நல்லொழுக்கம்.

100. **இந்திரற்குப் பட்டம் இசைந்த பிரான்** — சூரனை வதைத்து அவனாலபகரிக்கப்பட்ட தேவ நாட்டினை மீளவும் தேவராசனுக்கு அளித்த பெருமான். இவ்வுரைகளெல்லாம் பெருமைகூறுதல் எனப்படும். **முன்** — கண்முன். முருகப்பிரான் தமிழ்த் தெய்வமெனப்படுதலின் 'செந்தமிழைத் தந்தருளும் தேவன்' எனப்பட்டது.

101. இக்கண்ணியில் **பரிமேலழகன், கம்பன், இளங்கோ** முதலிய புலவர் பெருமக்கள் பெயர் வருதல் ஒரு நயம். **மயிற்பரி** — மயிலாகிய வாகனம்; இத்தலத்துமயில் நோக்கும் திசை வேறாகலின் மீட்டுங் கூறப்பட்டது. மூலத்தானத்திற் கண்டறிக; **அழகன்** — முருகன்; வேள் என்னும் பெயரே முருகப்பிரான் கண்டார் விரும்பும் அழகுடையவன் என்பதைத் தெரிவிக்கும். **மாண் பழநி** — அகத்தியர், திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றதும், காசியின் மீறியதுமாகிய மாட்சிமை உடையதாகிய பழநிப்பதி. **பழநிக் கம்பன்** — பழநித்தலத்தே அசையாநிலையின் எழுந்தருளியிருப்பவன். "படிக்கின்றிலை பழநித்திருநாமம் படிப்பவர்தாள்-முடிக்கின்றிலை" என்ற கந்தரலங்காரம் 75 ஆம் பாடல் பழநித்தரிசன மகிமைபுலப்படுத்தும். **இளம்கோ** — இளமை வாய்ந்த தலைவன்; **புயல்** — மேகம்.

மலைமேலா மன்னி வரந்தருவேள் வந்தான்
தலைவன்வந் தாரென்று சாற்றிப்—பலர்புகழ்ந்தார் 102

பிள்ளைத் தமிழ்க்காரன் பேசும் பரணியான்
தெள்ளு முலாக்காரன் செல்வனவன்—கொள்ளற் 103

---

102 மேகம் மலைமேல்தங்கி மழைபொழிந்து பயன்படுவதுபோலவே முருகப்பிரானும் மலைமேலெல்லாம் தங்கியிருந்து உயிர்கட்குவேண்டும் வரமெல்லாம் வழங்கி யுதவுகின்றான் என்க. உவமை தலைவன்—முழுமுதற் பிரமம். "லோகத்துக் காதியானது"—**திருப்புகழ்-343.** "பெரியோர் எத்தும் பெரும்பெயர் இயவுள்"—**திருமுருகு.** சாற்றி—சொல்லி. **சீலமுள்ளோர் (99)** பலர் புகழ்ந்தார் எனமுடிக்க.

103. **பிள்ளைத்தமிழ்க்காரன்**—இத்தல ஆதீனத்து மூன்றும் பட்டத்துச் குண்ணம் பாளையம் **சிவஞானபாலையசுவாமிகள்** காலத்தில் அதாவது கி-—பி. 1645 முதல் 1695 க்குள் இலக்கண விளக்க ஆசிரியரும், திருவார்த் தமிழ்ப்பெரும் புலவருமாகிய ஸ்ரீ வைத்தியநாத தேசிகாவர்கள் மயிலம் முருகப் பெருமானைச் சேவித்துப் '**பிள்ளைத்தமிழ்**' என்னும் நூலினைப் பாடியருளினாதலால் அப்பிள்ளைத்தமிழ் நூலின் தலைவன் எனப்பட்டது. பொதுப்படக் கொண்டால் பற்பல புலவர்கள் முருகப்பிரான் மீது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பல பாடிப் பரவியுள்ளமையும் கொள்ளலாம். ஏனைக் கடவுளரைப் பிள்ளையாகப் பாவித்துப் பாடவேண்டியிருப்பது போல இப்பெருமானைப் பாவிக்கவேண்டாமலே என்றும் பாலன் ஆதலால் பிள்ளையாகவே கொண்டுபாடல் ஏற்புடைமை காண்க. "கடுங்கோலை நீக்கிக் கடவுட் காப்புச்—செங்கீரை தால்சப் பாணி முத்தம்—வாரானை முதல் வருத்திடு மம்புலி—சிறுபறை சிற்றில் சிறுதேரென்னப் பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே" என்பது ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ச்குரிய இலக்கணங்கூறுகின்ற **இலக்கண விளக்கச் சூத்திரம். பேசும்** — அவ்வாசிரியரே

**கரியான் திருப்புகழான் ஆறுமுகங் கொண்டான்**
**பெரியான்வந் தானென்று பேசிப்—பிரியார்கள்** 104

---

பாடியருளிய தெனப் புகழப்படுகிறது; **பரணியான்** — பாச வதைப் பரணி என்னும் நூலையும் எற்றருள் செய்தவன். மேற் கூறிய பிள்ளைத்தமிழின் சிறு தேர்ப்பருவத்து முதற்செய் யுளிலே இப்பரணியின் வரலாறு தரப்பட்டுள்ளது. இப்பிள்ளைத் தமிழை ஷெ ஆதீனத்து 18 ஆவது பட்டத்து ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகளும், பரணியைக் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ஐயரவர்களும் வெளியிட்டுள்ளனர். **தெள்ளும்**—தெளிவுடைய; **உலாக்காரன்**—வேலையசுவாமிகளால் பாடியருளப்பட்ட 'மயி லத்துலா' என்னும் நூலையும் புனைந்தருளியவன். இந்நூல் இன்னம் அச்சுக்கு வரவில்லை என்பர். பரணி—உலா முதலிய நூல்கட்குரிய இலக்கணங்களை இலக்கணவாயிலான் அறிக. **செல்வனவன்**—அரிய செல்வம் போன்றவன். செல்வன் + நவன் எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். செல் + வன வன் என்றுங் கொண்டு பொருள் உரைக்கலாம். **செல்வனவன்** குபேரன் என்று பொருள் கண்டு 'கொள்ளற்கரியான்' என்ற சொற்றொடரோடும் கூட்டிப் பொருள்கொள்ளலும் அமையும். தான் திரண்ட செல்வமுடைமையால், தந்தையாகிய சிவபிரா னால் தோழனெனத் தழுவப்பட்ட சிறப்புடைய குபேரனுலும் மைந்தனாகிய முருகப்பிரான் கொள்ளற் கரியவன் எனக்கருதுக. **செல்வனவன்**—சிலேடை.

104. **திருப்புகழான்** — திருப்புகழ்ப்பாப்பல புனைந்தரு ளிய முருகன். திருப்புகழாசிரியரான அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப்பாடல் ஒன்றே உளதெனினும் செய்தவரின்னா ரென்றறியவாராத "மயிலம் நூறு திருப்புகழ்' என்பதொரு நூலுள்ளது. இஃது அச்சிடப்படவில்லை. மற்றும், முந்நூறு திருப்புகழ்ப்பாக்கள் அடியாரொருவராலும் பாடப்பட்டுள்ளன என்பர். **ஆறுமுகம் கொண்டான்** — நாற்பெருந்திசையும் மேலுங் கீழுமாகிய எப்பக்கத்திருப்பவரையும் கடாக்ஷித்தற்கேற்ற வண்ணம் ஆறு திருமுகங்களுங் கொண்டவன். **பிரியார்கள்**— திரிகரணங்களாலும் முறையே தியானம், தோத்திரம், நமஸ் காரம் புரிதலைப் பிரியார்.

துந்துபிகள் வான்பிளக்கத் தோரணங்கள் தாமசைய
எந்தத் திசையும் இயல்முரசம்—வந்ததிரத் 105

தஞ்சைவலர் வாத்தியமும் தக்கபெரு மேளமுடன்
நெஞ்சுருகித் தொண்டர்சொல் நேரிசையும்—விஞ்சி
[யெழச் 106

சாமரைகள் தாமிரட்டச் சார்கவிகை மேனிழற்றத்
தாமரைகள் பத்மினிகள் தார்தூவச்—சோமனென 107

மின்னல் விளக்கும் மிளிர்தருதீ வத்திகளும்
மன்னு மழகுசெய வன்பார்மேல்—மன்னவன் 108

---

105. வான்பிளக்க—வானைக்கிழித் தொலிக்க. அதிர—முழங்க.

106. தஞ்சைவலர்—தஞ்சை நகரில் வல்லவர்கள் (ஊதுகின்ற); நேர்இசையும்—நேரேநின்று கூறும் இசைப்பாட்டும்.

107. பத்மினிகள்—உயர்வுடையமாதர். சோமன்—சந்திரன்.

108. மின்னல் விளக்கும்-மின்சாரவிளக்குக்களும்(இது நவீனம்) தீவத்திகள்-தீப்பந்தங்கள் (இதுபிராசீனம்); மன்னும் அழகுசெய—நிலைத்த அழகைச் செய்ய; இது பொற்குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கும் நியாயம். மன்அவன்-நிலைபெற்ற அம்முருகன்.

காலைக் கதிரவனைக் கார்கோள் சூழ்ந்தெழல்போற்
கோலத் திருக்காட்சி கொண்டுதவச்—சீலமுடன் 109

இத்தருணம் யானு மிதமுடனே சென்றிருந்தேன்
சித்தங் களிகூரச் சிந்தித்தேன்—முத்தம் 110

திருக்காட்சி

தரவோடி யென்னுள்ளந் தற்பரன்பாற் செல்லக்
கரவோ டிருந்தங்குக் காதல்—பெருகித் 111

---

109. **காலைக்கதிரவன்**—கீழ்த்திசைக்கண் காலைவேளையில் உதயஞ்செய்யுஞ் செஞ்ஞாயிறு. **கார்கோள்**—கடல். இவ்வரி 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு' என்பதுபோன்ற கருத்தும் உவமையும் கொண்டது. "மாக்கடல் நிவந்தெழு செஞ்ஞாயிற்றுக்கவினை" புறம். 4. "உததியிடை......சதகோடிசூரியர்கள் உதயமென" திருவகுப்பு. என்ற வரிகளும் ஒப்புநோக்கத்தக்கன. 'நீலமயில் செவ்வேளைச் சுமந்தெழ' என்ற சொற்றொடரைக் கூட்டிக் காண்க. **காட்சி**—ஐந்துபோறிவும் கண்களே கொள்ளும் வண்ணந் தோன்றும் தரிசனம். மன்னவன் (108.) உதவ, என முடிபு கொள்க. **சீலமுடன்**—ஆசாரத்துடன்.

110. **இத்தருணம்** — பங்குனியுத்தரப் பெருவிழாவில் சொன்னமயிலில் சோதிவடிவனை ஆதிமுருகன் அமர்ந்து உலா வரும் இத்தருணத்தில். **இருந்தேன்**-பேச்சற்றிருந்தேன். **கூர**-மிகுதிப்பட.

111. **முத்தம்தரஓடி**—முத்தம் கொடுக்க விரைந்து; **கரவோடு**—மறைவாக; பிறரறியாவண்ணமாக; **காதல்**—இது அன்பின் ஒருநிலை; **பெருகி**-பெருகிய காரணத்தால்; இவ் வினையெச்சம் காரணப்பொருட்டு; பெருகிக்கண்டேன் என முடியும். **தற்பரன்**—தலைவன்; மிக்கோன் என்பதை உணர்த்திற்று இச்சொல்.

திருமுடியைக் கண்டேனன் செய்ய கமலத்
திருநயன மாறிரண்டும் சீர்த்த—அருள்கொழித்துக் 112

காந்தர்போல் வந்தென் கனவிரும்பு நெஞ்சத்தைச்
சேந்தி யிழுந்துத் திகைப்பிக்க—வேந்தன்பின் 113

அழகில் ஈடுபடுதல்.

அஞ்சேல் எனச்சொன்ன அங்கமல வாயழகும்
நெஞ்சில் அருள்முறுவ னேரழகும்—எஞ்சாத 114

---

112. **திருமுடியைக் கண்டேன் நான்**—தலைவன் காணுமே தலைவனைத் தான் காணுதல்; இதற்குக் காரணம் உட்கும் நாணும் தலைவி உடைமை. இது அகத்திணையில் களவிற்குச் சிறந்து வரும் மெய்ப்பாட்டுப் பிரிவினுள் **புகுமுகம் புரிதல்** ஆகும். தொல்; மெய்ப்பாடு—13 "யானோக்குங்காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்—தான்நோக்கி மெல்ல நகும்"—என்ற குறட்பாவினுள்ளும் தலைவி தலைவனைத்தான் நோக்குதல் கூறப்பட்டுள்ளமை காண்க. **செய்ய**—சிவப்புடையதான; குறிப்புப் பெயரெச்சம். **நயனம்**—கண்;

113. **சேந்தி**—என்னிடமிருந்து எடுத்து. **ஏந்து அன்பின்**—தாங்கும் அன்புகாரணமாக. தாங்கும் அன்பு, தடுக்கும் அன்பு என அன்பு இருதிறத்தது. அறத்தைப்புரிவது முன்னது; மறத்தைப் புரிவது பின்னது. "அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்—மறத்திற்கும் அஃதே துணை"-குறள்-76. மறத்திற்குத் துணையாவதைப்பித்தத்துக்குஇஞ்சிபோலக் கொள்க. ஈண்டு, 'அஞ்சேல்' என்றமையின் தாங்கும் அன்பாயிற்றெனக.

114. **அஞ்சேல்**—பயப்படாதே; **அம்கமலம்**—அழகிய தாமரை; என்றும் வாடுதலின்மையின் 'அம்' என்ற அடைபுணர்த்தப்பட்டது. **கமலவாய்**-உவமத்தொகை. **முறுவல்**-புன்சிரிப்பு. **எஞ்சாத**--குறைவில்லாத.

வேலழகும் வீரம் விளங்கு கொடியழகும்
நூலிடையார் பேரழகும் நோக்கினேன்—கோலமிகு 115

தோளழகும் மார்பழகும் தொங்குமுழந் தாளழகும்
தாளழகும் கண்கள் தனிபருகி—மீளலின்றிச் 116

சொக்கிக் கிடந்த சுகங்காண வன்மையின்றி
வெட்கிக் கிடந்ததென் வென்னிறையும்—கோட்கி
[யான் 117

---

115. நூல்இடையார்—நூல்போன்ற நுண்ணிய இடுப்பினையுடைய தேவயானை, வள்ளி என்னும் இருமருங்கு நாச்சிமார்கள். இவர்களைப்போலவே அடியேனும் பெருமானை இடையறாது மருவியிருக்கப் பெறுவேனோ என்பது கருத்தாகக் கொண்ட நோக்கம் எனக்கொள்க. கோலம்—அழகு.

116. தோங்கு—கைகள் தம்மளவும் தொங்கப்பெற்றுள்ள. தனிபருகி-மேற்கூறிய ஒவ்வோருறுப்பின் காட்சியையும் தனித் தனியாகக்கண்டு ஈடுபட்டு; அன்றி, ஏனைப் புலன் பொறிகளனுபவிக்கப்பெறுமே தாமென்றியே அநுபவித்து என்றும் கூறலாகும். இவ்விடத்துத் "தோள்கண்டார் தோளேகண்டார்" என்ற கம்பராமாயணச் செய்யுள் நினைக்கத்தக்கது. மீளல் இன்றி — அவ்வவ்வுறுப்பின் அழகிலேயே ஈடுபட்டு வைத்த கண் வாங்கமாட்டாமலிருந்து. "அதனையிங் கனுப்புவாயே" எனமுடியுந் திரு. வேதநாயகம்பிள்ளைபாடல் ஈண்டு நினைவு கொள்ளத்தகும். அவயவங்கள் கூறப்பட்டுள்ள முறைமை கேசாதி பாதமாகும்.

117. கிடந்த—இதனை முற்றாகவேனும் எச்சமாகவேனும் கொள்க. சுகம் — மருவும் இன்பு. வெல்நிறை — யாவற்றையும் யாவரையும் வெல்லும் தன்மைவாய்ந்த 'நிறை' என்னும் பண்பு. நிறை—உள்ளத்தை நிறுத்துந் தன்மை. "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த — நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" தோல்—களவு—8. தலைவிக்கு வேட்கை மீதூரும்வழி

இம்மால் வலைக்கு விருக்கின்ற போதவனும்
அம்மால் வரைவிளங்கு மாலயத்துள்—அம்மான் 118

புகுந்தமர்ந்தா வன்றியுமென் பொங்குமுளத் துள்ளும்
புகுந்தமர்ந்தான்; மாரன் பொருதான்—உகந்த 119

---

நிறை வன்மையிற் குறைபடும் என்ப. "அளிதோ தானே நாணே" என்னும் குறுந்தொகை 149. காண்க. "ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்" என்ற தொல்: பொருள் 53 இன் குறிப்பாலும் நிறையின் இலக்கணம் அறியப்படும். கோட்கி—உள்சுழன்று.

118. இம்மால்வலை—இத்தகைய காதல்வலை, வலைக்குள் அகப்பட்டுத்தவிப்பவர்களைப் பரிந்து விடுவிக்க முயலவேண்டுவது இறைவன் கடமையாகவும், அங்ஙனம் செய்யாமல் தன திடம் புகுந்தான் என்று குறை கூறுமுகத்தால், ஆலயத்துள் புகுந்தான் எனப்பட்டது. மால்வரை—பெரியமலை; திருமால் போலும் நெடியமலை எனினும் பொருந்தும். அம்மான்—முருகன்

119. புகுந்தபின்பும் துன்பந்துடைக்கும் முயற்சி சிறிது மின்றிக் கிடந்தான் என்பார் புகுந்தான் என்னுமல் புகுந்து அமர்ந்தான் என்றார். காண்போரது கண்ணின் வழியே சென்று உள்ளத்துட்டங்குதல் காதலர் இயல்பாகலின் என்பொங்கும் உள்ளத்துள்ளும்புகுந்தமர்ந்தான்எனப்பட்டது. ஈண்டு அமர்ந்தான் என்ற சொல்லைக் காதற்போர் செய்யலாயினன் எனப் பொருள்செய்துகொள்ளலும் ஏற்புடைத்து. "மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்—கண்வழி நுழையுமோர் கள்வனேகொலாம்" —என்ற கம்பராமாயண வடிகளை ஈண்டு ஒப்பு நோக்குக. "கள்வன்கொல்யானறியேன்"—என்றார் திருமங்கையாழ்வாரும்; மாரன்—மன்மதன். "நாவலர் காவலர் நின்றார் நடுநின்றார் படைமதனார்" என்ற பெரியபுராணவடிகளின் கருத்தோடு பொருத்திக்காண்க.

### தலைவியின்நிலை.

தனித்த பெயர்போலத் தானிருந்தேன் காதல்
தொனித்தெழுவா யாகச் சுழன்றேன்—இனித்த 120

ககரத்தைக் கண்ட ணகரம்போன் மாறி
ஙகரம்போ லேதனித்தேன் ஞாய—மிகந்ததொரு 121

---

120. தனித்த பெயர்-பயனிலையை அவாவாது தனியே நின்ற பெயர்ச்சொல்; மரம் என்னுஞ் சொல் பெயர்ச்சொல்லாகும்; இச்சொல் தானே ஒரு கருத்தை முற்றுறத் தெரிவிக்கும் வன்மை யுடையதன்று. ஆனால், வினை அல்லது பெயர்ப் பயனிலையோடு கூடினால் அப்பயனிலைக்கு ஏற்றவாறு தான் வேறுபாடடைந்து பயன்படும். "அவிகாரியாய் நின்ற பெயர் இப்பயனிலைகளை அவாவிய காலத்தன்றி அவிகாரியினின்றும் விகாரியாகத் தன்னைத்தானே வேற்றுமை செய்தல் தோன்றாமையின்" நன்:சங்கர. "புன் தரும்பு போன்றலைந்தார் போற்றுமவிகாரி முனம், சென்றுவருசொல் திரிதல்போல்-மென்தளிராம்-மேனி திரிந்தார்"-திருவேங்கைபுலா. 393-4. தலைவிக்குத் தலைவனை எய்தப்பெற்று அன்புற்று அறம் நிகழ்த்துதலே சீரிய கடப்பாடாகலின், அங்ஙனம் தான் விரும்புந் தலைவனை அடையப் பெறாத நிலைக்கு இவ்வுவமை கூறப்பட்டது. **தொனித்து**—தோன்றப்பெற்று என்பது இவ்விடத்துப் பொருள். இது பருவ விளைவு. **எழுவாய்**—தோன்றுமிடம். பெயர்ச்சொல்லும் விகார வெளிப்பாடின்றியே எழுவாயாதல் இலக்கணம். **சுழலல்**—செய்வகையறியாது அமைரல்.

121. ககரத்தைக் கண்ட ணகரம் தன்னுருத்திரிந்து டகரமாதல் புணர்ச்சியிலக்கணம். மண் + குடம் = மட்குடம். சிறந்த தலைவனைக் காணப்பெற்ற தலைவியின் வேறுபாட்டுக்கு உவமையாக இங்ஙனம் கூறப்பட்டது. ஙகரமெய் உயிரொடுங் கூடியவர்க்கத்தைப்பெற்றிருந்தும் அவற்றால் பயன் ஒரு சிறிது மின்மையால் தான் தனித்தே நிற்பதுபோலத் தோழிமாரை விரும்பாது தலைவனையே நினைந்தேங்கித் தனித்து நிற்கின்றனள் தலைவி என்க. "ஙப்போல்வளை" என்ற செய்யுளும்

**மாலையரா வும்பொதிகை மாமலைத்தென் றற்காலும்**
**வேலைமதி யென்னார்பேர் வெள்ளரக்கன்—போல்பவனுங்**

---

ஈண்டுக் கருதத்தக்கது. அன்றியும், யாண்டும் என் நெஞ்சத்தினை இகவாவண்ணம் நிறுத்தியுதவும் நிறையென்னும் பண்பும் நீங்கி விட யான் தனியள் ஆயினேன் என்று தலைவி கூறிக்கொள்வதாகவும் பொருள்படும். **இகந்த**—நீங்கிய.

122. **மாலைஅராவும்**—மாலைக்காலமாகிய பாம்பும்; இது உருவகம். தலைவனைப் பிரியப்பெற்ற தலைவியைத் துன்புறுத்துவன இவை எனச் சிலவற்றை இது முதல் எடுத்துக் கூறலுறுகின்றார். பிரிந்தார்க்கு மாலைக்காலம் துன்பத்தை மிகுதியாக்கும் தன்மையது. "தாழ்துணை துறந்தோர் தனித்துயரெய்த... ...மல்லல் மூதூர் மாலை வந்திறுத்தென" **சிலப்பதிகாரம்**—காமவேகத்தை மிகச்செய்து சோகப் படுத்தலின் விடவேகத்தை அதிகப்படுத்தி மயக்கும் அராவாக மாலையை உருவகித்தார் என்க. "தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு எம்—ஆற்றாமை சொல்லி அழுவோமை நீ நடுவே—வேற்றோர் வகையில் கொடிதாய் எனை ஊழி — மாற்றாண்மை நிற்றியோ வாழிகனையிருளே!" என்ற **திருவாய்மொழிப்** பாசுரம் ஈண்டுக் கருதத்தக்கது. "அழல் போலும் மாலை" என்றார் **வள்ளுவனாரும்**. 'கயங்களென்னும் கனல்தோய்ந்து.........இதுவோ கூற்றின் வடிவென்றாள்" என்ற **கம்பராமாயணம்—மிதிலைக் காட்சிப் படலப்பாடலும்** ஈங்கு நினைவு கூரத்தக்கது. மற்றும், "சிறுபுன் மாலை சிறுபுன்மாலைதீப்பனிப்பன்ன தண்வளி யசைஇச் செக்கர் கொண்ட சிறுபுன் மாலை வைகலும் வருதியால் எமக்கே ஒன்றும் சொல்லாய் அவர் குன்று கெழுநாட்டே' எனவரும் ஆன்றோர் பாடலும் காண்க. வாசம் பொருந்திய மந்தமாருதமும் தீங்கிழைப்பதாகவே கருதப்படுமாகலின் **தென்றற்கால்** கூறப்பட்டது. "சந்தனமும் செந்தமிழும்" என்ற பாடல் பொதிகைத் தென்றற் சிறப்புரைக்கும். **வேலை**—கடல்; **மதி**—சந்திரன்; அரக்கன் கருநிறமுடையவன்; மதி வெண்ணிறத்ததாய் எழுந்து துயர் செய்தலின் வெள்ளரக்கன் என இல்பொருளுவமை தந்து கூறினார். "கூடினார் பால்நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க் காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே"—**சிலப்பதிகாரம்**.

காதா லுயிர்வாங்குங் கானக் கருங்குயிலும்
போதால் உயிருரிமை போக்குமைர்—போதானுந் 123

தாயுஞ் செவிலியுந் தாதியருங் கண்வளர
நீயுமிப் பாவியுமாய் நிற்கின்றேம்—ஆயும்போ 124

துன்னைவிட அன்பே உறுதுணையெற் குண்டோசொல்
என்னைவிட மேற்றியவ னெங்குள்ளான்—துன்னுந் 125

---

123. குயிலின்குரலும் பிரிந்தார்க்குத் துன்பம் விளைப்பது. காதால் இவ்வொலி நுகரப்படுதலின் "காதால் உயிர்வாங்கும்" என்றூர். கானம்—காடு; பாட்டு. போதால்—அசோகுமுதலிய பூம்போதுகளால்; உயிர் உரிமை—உயிருக்கு உரிமைப்பட்டுள்ள சிறந்த பண்புகள். ஐம்போதான்—மன்மதன். "விரை மலர் வாளியொடு கரும்புவில் எந்தி, மகரவெல் கொடிமைந்தன் திரிதர"—சிலப். "இச்சையும் குறிப்பும் நோக்கி எய்வதே கருமமாகக் கைச்சிலைக் கணையோடேந்திக் காமனிக் கடையைக் காப்பான்"—சீவகசிந்தாமணி.

124. செவிலி—வளர்க்குந்தாய். தாதியர்—தோழியர்; கண்வளர—தூங்க. நீ-ஈண்டு அன்பை முன்னிலைப்படுத்திக் கூறியதாகும். பாவி என்றது தன்னை; இடவழுவமைதி; ஆயும்—ஆராயும்.

125. யாவருந் தாங்கித் துணைசெய்யா தொழிகையிலும் அன்பு ஒன்றே உள்ளத்துள் நின்று ஊக்குதலின் "உன்னைவிட உறுதுணை உண்டோ?" எனப்பட்டது. ஓகாரம் எதிர்மறை. உறுதுணை—உற்றதுணை; நீங்காத்துணையும் தோன்றூத்துணையுமாவது. விடம் ஏற்றியவன்—காம விஷம் எறும்படி செய்தவன். தன்னை மறந்த தலைவியின் நிலைமையாக "எங்குள்ளான்" எனப்பட்டது. "முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்...... தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே". அப்பர் தேவாரம். மயிலவரையைப்பற்றிப் பிறர் பேசப்பேசத் தன்ஆவிகுளிருமாதலின் அறிந்தும் அறியாதுபோல் கேட்கப்பட்டது.

தழல்போன்ற மேனியன் தன்னைநிக ரில்லோன்
நிழல்போல் விடாத நெடிய—பழநோய் 126

கழற்கால் நிழலிற் கழியக் கருணை
பொழிவன் மயிலப் பொருப்பன்—ஒழியா 127

தருள்கொழிக்குங் கட்கமலன் ஆளுடையான் வீரன்
இருள்துடைக்கு மென்றுழென் றெண்ணி—யுருகுகின்
[றேன் 128

---

126. முருகன் செந்நிறத்தன். மேலும், தன்னைத் தழல் போல்எரித்தலின் **தழல்போன்றமேனியன்** என்றுள் வேறொரு தலைவனைத் தன்னுள்ளம் நயவாதென்ற துணிவு கூறற்பொருட்டே "தன்னைநிகரில்லோன்" என்றார். **பழநோய்**—மூலமலம்; செம்பிற்களிம்புபோல் உள்ள ஆணவமலம். "நாசோற்பத்தி பண்ணிவரு மாதலா லநாதி"—சிவப்பிரகாசம் 28.

127. கழல்—வீரர்காலணி; வினைகடிந்து மோனவழி காட்டுவது பதத்தின் **வீரமாம்**. முருகப்பிரான் திருவடி யியல்புகளைச்**'சீர்பாதவகுப்பு'**நூலுரைகளான றிக. "வெங்காடும்புனமும் கமழுங் கழல்" எனக் கழலின் எளிமைப்பாடும் உயர்வும் **கந்தரநுபூதி**யுள்ளுங் கூறப்பட்டுள்ளன. இறைவன் திருவடிநீழலில் அணுகியமாத்திரையானே ஒருவாது நீங்காத மூலவினையும் தானே நீங்கிவிடும் என்பார் **'நிழலிற்கழிய'** என்றார். "மென்னிழற் றருவை யடைபவர் தம்மை விடா நிழல் விட்டிடுமா போல்—நின்னடிக்கமலம் அடைந்திடிற் றொடர்ந்து நீங்கலா வினையுநீங் குறுமே" என்பது துறைமங்கலம் **சிவப்பிரகாச அடிகளின்** வாக்கு. **பொருப்பன்**—மலையில் உள்ளவன்.

128. **அருள்கொழிக்கும்**—திருவருளைக் கொழித்துத்தருகின்ற "பாமேவு பத்தர்க்கு மடைதிறந்தன்பொழுகு பன்னிரு விழிக்கருணையும்" என்பர் பிறரும். **கட்கமலன்**—கமலம்போன்ற கண்களையுடையவன். **இருள்**—இருட்டு; ஆணவமலமாகிய

வேலெடுத்த கொள்கை வெதுப்புமொரு மாரனார்
காலெடுத்தே யோடுதற்குக் காரணமோ—சேலடுத்த 129

வாச மரைமுகத்தி மாதரசி யென்னுடனே
பேசமுகந் தாராரோ பேசமிக—ஆசையினேன் 130

பள்ளம் புகும்புனல்போற் பாய்ந்தென் னுளம்புக்கார்
உள்ளங் கருங்கல்லோ உண்மையுரை—கள்ளத் 131

---

இருள். "ஆணவமானது உயிருடன் கலந்து உயிரினறிவை மறைத்தலால் உயிரின் குணம்போல்வதொன்று; அது இருள் போல்வது."—சிவஞானசித்தியார் உரை நடை; என்றூழ்—சூரியன்; உருகுதல்—தலைவனையே நினைந்து நினைந்து மனம் நெக்குவிடுதல்; சூட்டின்மேலிட்ட வெண்ணெய்ப்பிண்டம் பக்கு விட்டு உருகுவதுபோல மனமும் நெகிழப்பெறுவது.

129. வெதுப்பும்—காமாக்கினியால் வேகச்செய்கின்ற; வேலெடுத்தகொள்கை—முருகப்பிரான் கையில்வேலாயுதத் தைப்பிடித்திருப்பதன் தாற்பரியம் (கருத்து). காலெடுத்தே ஓடுதல்—கால்வாங்கிப்பின்னடைந்தோடுதல். ஓகாரம், ஐயம்.

130. மரை—தாமரை; முதற்குறை. முகத்தி, மாதரசி, என்ற விளிகள் தோழிமாரைக்குறிப்பன. முகந்தாராரோ—முகந் தந்து பார்க்கமாட்டாரோ.

மரைமுகத்தி மாதரசி என்பன வள்ளி, தெய்வயானையாரையும் குறிக்கும், அன்பை நோக்கிக் கூறுகின்ற இடமாதலின்.

131. என்உள்ளம் புகுந்தும் எனக்குஅருளினனில்லை யாதலால்'உள்ளம்கருங்கல்லோ'எனக்கூறப்பட்டது. உண்மைஉரை—'காமஞ் செப்பாது கண்டதுமொழிமோ' என்ற இடத்துப்போல்வது இதன் உரை.

தனாக நெஞ்சகத்திற் குன்புகுந்த பின்பே
தனர்பார மானதுமன் தங்கும்—வனமார் 132

மயிலேற அண்ணல் மயலேறி வீழ்ந்தேன்
துயிலேது மின்றித் துயர்ந்தேன்—அயில்கில்லேன் 133

வாகனத்தான் போற்றுமயில் வாகனத்தான் காத்தனிரு
வாகனத்தான் போற்றுமயில் மாகரத்தான்—மோக
[மதை 134

மோகித்தோ ரேயறிவார் முன்னொருத்தி யின்னழகில்
மோகித்தோ னேயறிவேன் மோகமது—தாகமுடன் 135

---

132. தனம் பாரமானதற்கு ஓர் ஏதுக்காட்டி யுரைக்கப்பட்டமை தற்குறிப்பேற்றம். மன்—இடைச்சொல்; மிகுதிப்பொருட்டு.

133. மயல்—காமமயக்கம்; துயில்இன்மையும், உணவு கொள்ளாமையும் பிறவும், ஆராய்ந்துணரின் புணர்ச்சிநிமித்தங்களாம். தொல்-மெய்ப். 270. அயில்கில்லேன்-உணவுங்கொண்டேனில்லை. தலைவனது எழில்நலமே உணவாகக்கொண்டமையின் பிறவுண் வேண்டாதாயிற்றெனக.

134. இக்கண்ணியின் இருவரிகளில் யமகம் அமைந்துளது. வாதுஅன்னத்தான் — கையின்கண் அன்னக்கொடியுடைய பிரமன். காத்தல்நிருவாகன்நத்தான்-காத்தற்றொழிலை நடாத்துகின்றவனும் சங்கினையுடையவனுமாகிய திருமால்; அயில்மாகரத்தான் — வேற்படை தாங்கிய பெரியகைகளையுடைய முருகனிடத்து.

135. இதற்குமுன்பு அம் முருகனைக்கண்டு மோகித்தவர்க்குத்தான் எனது விரகதாபத்தின் விளைவு இன்னதென்று தெரியும்; இம்முருகப்பிரானும் முன்பு வள்ளிநாய்ச்சியாரின் எழிலில் ஈடுபட்டு மோகத்துயரை யனுபவித்தவனே என்பதை யானறிவேன். மோகம்மது: மோகம், கள்ளை நிகர்க்கும்.

உண்டார் மயக்கு முயர்நறு காமம்போற்
கண்டார்க் களிசெய்த லின்றென்று—கண்டேன்
[யான் 136

பூமாலை கட்டிப் புனையாமல் வைத்திடுவேன்
பாமாலை காலரையாப் பன்னிடுவேன்—பேமார் 137

குறத்திக் குறிகேட்பேன் கோகிலச்சொற் றேர்வேன்
அறத்தை விமரிசையா யாய்வேன்—மறத்தியர்பால் 138

---

136. கள்ளானது வாயாற் பருகினவரையே களிப்பூட்டி மயக்கும். ஆனால், காமமோ, கண்ணாலும் மனத்தாலும் கண்டாரையும் கருதினாரையுங் கூட மயக்குந்தகையது என்பதை யான் இப்போதே அறியலானேன். வேற்றுமையணி.

137. புனையாமல்—அணியாமல்; உத்தமத்தலைவியர் தலைவனைக் கண்டன்றித் தம்மை மாலைமுதலியவற்றால் அலங்கரியார். பாமாலை—பாடல்மாலை; இது வாடாமாலை; காமமிகுதியால் எடுத்த அடியை முடிக்காமல் விடுதலும், பிறர்காணவும் கேட்கவும் நேரின் நாணம் மீதுறுமாகலின் தொடங்கிய பாடலை முடியாமல் விடுதலும் நிகழும் என்க. பேமார்—அச்சம்உடையவர் ஆகிய. “பேநா முருமெனவரூஉம் கிளவி—யாமுறை மூன்றும் அச்சப்பொருள.”—தொல்:உரி.

138. கோகிலம்—குயில்; அறம்—நினைத்ததை அடைவிக்கும் புண்ணியச்செயல்கள். மறத்தியர்—ஈண்டுக்கட்டுவிச்சியர்.

அங்கை யிரேகை யருஞ்சாத் திரங்கேட்பேன்
தங்குமொரு சோதிடத்தைத் தான்பார்ப்பேன்—
[எங்கும் 139

அவனுருவே காண்பே னவனுருவை எண்ணிப்
புவனமெல்லாம் சுற்றிநெஞ்சம் போகிக்—கவலும் 140

நிறைமீட்ட லொண்ணுமோ நெட்டுயிர்ப்பு நீங்க
முறையிட்டை நல்லன்பே முன்போ—யறையவன்றன் 141

---

139. அகம்(+)கை=அங்கை-உள்ளங்கை; அருஞ்சாத்திரம்—தெய்வத்தை வேண்டிச் சொல்லப்படுவதாகலின் அருமை வாய்ந்ததெனப்பட்டது. தங்கும்—வேதங்களின் அங்க மாறனுள் ஒன்றாகத் தங்குகின்ற; சோதிடம்,—வேதத்திற்சொல்லப்படுங் கருமங்கள் செய்வதற்குரிய காலவிசேடங்களை உணர்த்துவது என்பர் சிவஞானமுனிவர்.

140. ஒருபொருளைப் பன்முறையும் எண்ண எண்ண அவ்வெண்ணமே பார்த்ததிசையெல்லாம் அப்பொருளே போல் தோற்றுவிக்கும். இதனை உருவெளித்தோற்றம் என்பர். 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என் றிலக்கண முறைக்கும். மனம் விரையுந்தன்மை யுடையதாகலின் இவ்வுலகிட மெங்கும் திரிந்து காணாமல் மீண்டு கவலுறும் என்றார். கவலும்—கவலைகொள்ளும்.

141. நிறை—மறைபுலப்படாமல் மனத்தை நிறுத்தும் உரன்; காதல் கைம்மிக்கவிடத்து இந்நிறையும் நீங்கிவிடும்; அங்ஙனம் தன்னின் நீங்கிய நிறையுடைமையை மீட்க நினைந்தும் இயலாமையால் தலைவி இங்ஙனம் கூறலுறும் என்க. "அளிதோ தானே நாணே நம்மொடு—நனிநீ டுழந்தன்று மன்னே யினியே வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறைத்—தீம்புனனெரிதா

பேரை நினைத்தாலும் பேச்சற்றுப் போகுமால்
சீரை நினைந்தேன் செயலற்றேன்—நீரை 142

---

வீந்துக் காஅங்குத்—தாங்குமளவைத் தாங்கிக்—காம நெரிதரக் கைந்நில் லாதே" என்ற குறுந்தொகைச் செய்யுள் காண்க. தலைவனொடு உடன்செல்லத் துணியுங்கால் இங்ஙனம் தலைவி நாண் துறந்து கூறுதல் பொருந்தும்; தனது நிறை சென்ற இடத்துக்கே தானும் ஏகுதலல்லது அதனைமீட்டல் இயலாதென்பது குறிப்பு; நெட்டுயிர்ப்பு—பெருமூச்செறிதல்; முறையிடு—குறையை முறையிடுஞ் சொற்கள். விட்டுப் பிரியாத அன்பினைத் 'தாமே தூதுவராதலும் உரித்தே' என்பது போன்று செலவைக்கின்றனளாதலின் நல் அன்பே என்றுரைக்கப்பட்டது. முன்—தலைவன் எதிரில்.

142. தலைவனால் தோன்றிய நோயும் பசலையும் முருகனால் தீர்தல் உண்டெனினும், ஈண்டு அம் முருகனே தலைவனாயினமையின்பிறரால் தீர்த்தற்குவழியின்றாகலின் 'பேச்சற்றுப்போகுமால்' என்றார். தனக்கு ஏற்றவனாக ஒரு தலைவனைக் கருதிக் கொண்ட தலைமகள் அத் தலைவனையன்றிப் பிறரைத் தன்நெஞ்சு கருதுதல் கற்பிற்குப் பழியாமாகலின் அங்ஙனம் தன் நெஞ்சு செல்லா விதமாகத் தான் கொண்ட தலைவன்சீரையே நினைந்து நினைந்து வேறு செயலறுதல் வழக்கு. ஸ்ரீகோதைநாய்ச்சியாரும் "மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்ற உறுதிகொண்டு அவ்வுறுதி அசையாவிதமாக எம்பெருமான்வீரச் செயலுரைக்கும் சீர்த்திமைகளையே கருதிக்கருதி இறுதியில் 'நின்சேவகமே ஏத்தி' எனக் கூறுகின்றமையும் காண்க. நீரை—கண்ணீரை.

உதறுகிருள் கண்ணு ளுறைகின்ற பாவை
இதழளிக்குங் காட்சிக் கிதயம்—பதைசெயுமால் 143

மாரிக் குயிலெனவே மங்கினேன் என்னுயிரை
வாரிக் குடித்தோன் வருவானே—தீரவிந்நோய் 144

அம்மா மலைமருந்தா லன்றிமற் றென்ருலும்
எம்மா லிடரானு மேகாதே—சும்மா 145

---

143. எதிரிலுள்ள தோழியின் கண்ணுள் தெரியும் தன்னுருவாகிய பாவையும் தன்போலவேகண்ணீரை வடித்து உதறுகின்றமை கண்டு, 'உதறுகிருள் கண்ணுள் உறைகின்ற பாவை' எனப்பட்டது. அப்பாவையின் துன்பப்புலம்பினைக் கண்ணிமைகளாகிய இதழ்கள் அடிக்கடி காணச்செய்யுங் காட்சியைக் காணுந்தோறும் இதயம் துடிக்கின்றது எனப்பொருள்படுவது 'இதழளிக்கும்........பதைசெயுமால்' என்ற அடி. இதழ்–உதடு எனினும் ஆம். ஈண்டு அம்முருகன் பேச்செனப் பொருள்படும்.

144. 'மாரிக்காலத்துக் குயில் தன்குரலால் தன்னிலையை வெளிப்படுத்தித்துன்பப்படுவதுபோல யானும் என் நெஞ்சகத்து விழைவை வெளிப்படுத்தி வாடுகின்றேன்'என்ற தலைவி கூற்றுகப் பொருள் கொள்க. உயிரை வாரிக் குடித்தோன்–உயிர் குடிக்கப்படும் பொருளன்றெனினும் இங்ஙனம் கூறுதல் வழக்கு. "உண்டற்குரிய அல்லாப்பொருளை உண்டனபோலக்கூறலும் மரபே" தொல்—பொருள் 19. உரையிற் காண்க.

145 தீர—முற்றிலும்; நோய்—காமநோய்; அம் மாமலைமருந்தால்—அழகிய பெரிய மயிலவரையின்கண்ணுள்ள முருகனுகிய மருந்தினல்; கடவுளை மருந்தென்றல் கவிகள் வழக்கு;தில்லையம்பலத்துள் ஆடும்மருந்து'என்றபாட்டுள் காண்க. "உயிரினைத் துயர்த்து மாணவப்பிணியும் உடலுறுங் கன்மவெம் பிணியும்.............. மானிடர் மருந்தினுக் கொழிமோ" என்பது மயிலாசலமாலை—90.

கருத்துக் கிசைந்த கவினெதுகை காண
வருத்த மிருமவர்போல் வாடி—வெறுத்தேன் 146

உலகந் தரும்பாயிற் றெண்பொரு ளன்றுய்ப்
பலனு மறிவும் பலனே—இலைஇலையால்; 147

எண்ணுற்ற போதெல்லா மென்பிதய மெங்குமின்பப்
பண்ணுற்ற சத்தனையான் பற்றுற்றேன்—என்
[ணிடிலென் 148

---

146. கவின்--அழகு; புன்புலவர்கள் தாமும் கவிபாடிப் புகழும் பொருளும் அடையவெண்ணிப் பாடத்தொடங்கி, வரிக்குவரி கருத்துக்கிசையப் பொருள்தர வல்ல எதுகைச்சொற்களை நினைந்து நினைந்து பார்த்தும் கிடைக்கப்பெறாமையால் வருத்தமடைந்து தாம்பாடத் தொடங்கியபாடலையும், தம்மையும் வெறுத்துக்கொள்ளுதல் இயல்பு. இதனை, 'இழித்தபுன்சொற்புன் புலவ ரிசைத்துத் தாமே அழித்தலுறும் யாப்பே போல' என்னும் **சிவஞா:பிள்ளைத்தமிழ்:** சிற்றில்: செய் 3 இல் அறியலாம்.

147. விரும்பியபொருள் கிடைக்கப்பெறாமையால் மனம் வெறுப்படைந்தவர்க்குப் பிற எவையும் அற்பமானவையாகவே தோன்றும். இனிய இல்வாழ்க்கைக்குப் பயன்படாமையின் உலகமும், பொருளும், அறிவும் சற்றும் பயன் தருவனவல்லவெனக் கூறப்பட்டன. இலைஇலைஎன்னும் அடுக்கு முனிவுபற்றியது. 'கற்றதனாலாயபயனென்கொல்' என்னுங் குறட்பா ஈண்டுக் கருதத்தக்கது.

148. எண்ணுற்றபோது — பிறர்எவரின்மேலும், பிற எவற்றின்மீதும் உள்ள பற்றினைப்பற்றற விடுத்துத் தலைவனையே நினைகின்றபோது. "விட்டார்க்கெளியன் விடாதார்க்கற அரியன் மட்டார் துழாயலங்கல்மால்" என்றார் பெரியோரும். இங்ஙனம் தலைவனையே நினைந்து நெஞ்சழியுமேல் கட்டுக்குலைந்து கரணங் கரைந்தொழிவது கண்கூடு. இவ்விதம் பத்திபரவசாயினோர்க்கு

ஊன்கரைந்து போனுலு முள்ள மினிக்குமன்பே
தேன்வந்துள் பாய்வதனைத் தேர்கின்றேன்—நான்முன் 149

நினையா திருப்பதினும் நெஞ்சிறக்க வேதான்
நினைந்தோறும் எண்ணுவதாத் தேர்ந்தேன்—வன
[வேடர் 150

---

என்பும் கரைந்து இன்பம் தலைப்படும். "நினைத்தொறும் காண தொறும் பேசுந்தோறும் எப்போதும்—அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்—குனிப்புடையான்" என்பது திருவாசகம்; சத்தன்—மெய்ப்பொருளாயவன்.

149. உள்ளம்—மனம்; சித்தம். "சித்தத்தே தித்திக்கும் தேன்" என்பர் இறைவனை. தான்கருதிய தலைவன் வந்து மனம் புகுந்து மன்னி நிற்கப்பெறின் ஊன் கரைந்து உள்ள மினித்தல் ஒருதலை. "என் கொள்வன் உன்னைவிட்டென்னும் வாசகங்கள் சொல்லியும்—வன்கள்வனேன் மனத்தை வலித்துக் கண்ணநீர் கரந்து—நின்கண்ணெ ருங்க வைத்தே எனதாவியை நீக்க கில்லேன்—என்கண் மலின மறுத்தென்னைக் கூவி அருளாய் கண்ணனே" என்னுமாப் போன்று ஸாதநாநுஷ்டான வாசகமாகத் 'தேர்கின்றேன்' எனப்பட்டது.

150. 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்பது போன்று, தலைவனை நினையாதிருத்தல் உத்தமத் தலைவிக்கு இயலாமை கூறப்பட்டது. அங்ஙனம் நினைக்க நினைக்க உன்மத்த நிலையே எய்துவதாகும். அவ்வுன்மத்தநிலையென்பது நெஞ்சு இறந்த நிலையாம். 'உளம் இறந்த நிலைபெற்று உன்மத்தராகி' என்றார் பிறரும். இதனை 'நினையாமல் நினைக்கும் நிலை' என்றும் கூறுப. அன்றியும், காதல் கைம்மிக்கவழி, உள்ளின் உள்ளம் வேதலாலும், உள்ளாதிருப்பின் தம் அளவைத்தன்றாகி வருத்துதலாலும் 'நெஞ்சிறக்க எண்ணுவதாத் தேர்ந்தேன்' எனப்பட்டது. இங்ஙனம் உள்ளமழிதலுண்டென்பதை 'அல்லமனும், தனி

அல்வென்ற சீர்குழலா ளங்கணவன் வாய்நின்ற
சொல்லொன்றைக் கேட்டாற் சுகமாகும்—சொல்
[லொன்றும் 151

இல்லை யெனினு மினையந்து தலையசைத்தால்
அல்லல் அனைத்தும்போ மன்றெனினும்—மெல்லக் 152

---

நாயகன் பேரழகென்னும் நறவையுண்டு தரியாமற், கனிவாய் மடந்தை யுளமழிந்தாள்' என்னும் பிரபுலிங்கலீலை யடிகளால் அறிக. தன்மாட் டிருப்புக்கொண்டும், தலைவனையே எண்ணி அவற்சார்ந்து தனக்கவலம் செய்யும் நெஞ்சு இருத்தலினும் இறத்தல் நன்றென முனிந்து கூறினள்போலும்! இங்ஙனம் வெறுத்துரைப்பினும் புணர்ச்சிக்கே பயன்பட வருதலின் தீயதன்றாம் என்க.

151. தலைவன் வாய்ச்சொற்கேட்டல், இறக்குந்தறுவாயிற் சஞ்சீவி கிடைத்தாங்கு இன்பஞ் செய்யுமாகலின் 'சொல்லொன்றைக் கேட்டாற் சுகமாகும்' எனப்பட்டது. குறமகளொடும் மொழியாடுபவன் பிறமகளொடும் மொழியாடாதிரான் என்பது தோன்ற வள்ளி கணவன் என்றாள். முகம் பார்த்து மொழிபவன் என்பது தோன்றக் 'குழல்' கூறப்பட்டது.

152. **இல்லை எனினும்**— எம்மை முகம் நோக்கிச்சொல்லொன்று தர இயலவில்லை என்றாலும்; அல்லல்—காதல் மிகுதலால் விளையுந் துன்பங்கள்; இஃது உடன்பாடு பெற நயத்தல்.

கடைநோக் களித்தாற் கவலையெலாந் தீரும்
படைவேலன் என்றுளும் பாவங்—கெடுங்கெடுமால்; 153

எட்டாக் கனியா யிருந்தாலும் உன்னையன்பே
விட்டாற்கைக் கெட்டா விடுமோசொல்—எட்டு
[ணையும் 154

---

153. கடைநோக்கு—கடாக்ஷம். இது, காதலர், தம் உடம்பாடு பிறரறியாவண்ணம் புலப்படுத்தற்கருதித் தம்விழிகளை ஒருபுடை கூட்டிக் காண்டலாம். படைவேலன்—படையாக வேலாயுதத்தை உடையவன்; இவ்வாறு வாயாற் கூறக் கூறக் கருதிய தலைவனைத் தான் அடைய வொட்டாமல் தடுக்கும் பாவம் சிறிது சிறிதாகக் கெட்டொழியும் என்பது கருதிக் கூறியது. உக்கிரமூர்த்தங்களை இடரொழிவிற்குக் கருதுதல் நியமமாகலின் 'படைவேலன்' என்றுரைக்கப்பட்டது. "சிம்புளாய் மடங்கல் எறுழ்வலி கவர்ந்த.........எத்தினர்க்கு இடருளதோ?" என்ற சோணசைலமாலை யடிகளின் குறிப்புக் காண்க. சிறிது சிறிதாகக் கெடுதலின் 'கெடுங்கெடும்' என அடுக்கப்பட்டது.

154. எட்டாக்கனி — "சிந்தைக்கும் கோசரமல்லன்" என்பர் ஆழ்வார். இறைவனை எய்துதற்கு அன்புநெறியன்றி வேறுநெறி யின்றென்பது இக்கண்ணி. 'அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்—அவர்க்கே நாம் அன்பாவதல்லால்" என்பது அற்புதத்திருவந்தாதி. 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம்'. என்பர் தொல்காப்பியர். விட்டால்—தூதாக அனுப்பினால். அன்பினால் நினைந்தபோதே எண்ணியது கிட்டுதல் எளிதாயிருப்பவும், அன்பையே நெஞ்சுபரியாக்கிச் செல்லவைத்தால் அடைதல் ஒரு சிறிதும் அரிதன்றாம். 'அன்பிலானை அம்மானை அள்ளூறிய அன்பினால் நினைந்தா ரறிந்தார்களே"—என்பது திருநா. தேவாரம். "மொய்கழற் கன்புசெய்யும் அடியவரை உகத்திபோலும்" என்பர் பிறுண்டும்.

எட்டாப் பரம்பொருளே என்றுமு மேழைக்கும்
எட்டவைக்கு நற்படிகோ ளேணியே—மட்டின்றிக் 155

கட்டுக் கடங்காக் கனத்தபொரு ளானாலுங்
கட்டிவிடும் வன்மைக் கயிருவாய்—எட்டு 156

வரைக்கடங்கா வின்பத்து வார்கடலை யங்கை
வரைக்கடங்கச் செய்யணையே வாழ்க—தரைக்கே 157

---

155. எட்டாப் பரம்பொருள்—அப்பிராகிருத திவ்விய தேஜோமயன். "சேயோன் எல்லா அறிவுக்கும்"; "எப்பால் யவர்க்கும் உயர்ந்துயர்ந் தப்பாலவன்" — என்றார் நம்மாழ்வாரும். ஏழை—எளிமைப்பாடுடையவள். புகல்வேறின்மையைக்குறிக்கும் ஈண்டு ஏழைமை; அன்றியும், பகவதநுபவத்துக்கு மறுதலையான 'பொய்ந் நின்ற ஞானம், பொல்லாவொழுக்கு, அழுக்குடம்பாதியவற்றைக் கருதிக் கூறியமை எனினும் பொருந்தும். எட்டவைக்கும் நற்படிகோள் ஏணி — பரம்பொருளை அடையும்படி செய்விக்கின்ற நல்லதொருசோபானம். அன்புநெறியே பகவதநுபவ கைங்கர்ய ரூப பரம விலக்ஷண மோக்ஷத்துக்குப்பிரதானசாதனம் என்பர்பெரியோரும். "பொழி கின்ற துன்பப் புயல் வெள்ளத்தினின்கழற் புணைகொண்டிழி கின்ற அன்பர்கள் ஏறினர் வான்"—திருவாசகம்.

156. அன்புக்கு நார் என்னும் பெயரிருத்தல் வெளிப்படையாதலால் எத்தகைய உயர்ந்த பொருளையும் இதனுல் பிணித்தல் எளிது. "சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க (ஆயினும்) பத்திவலையிற் படுவோன் காண்க" என்ற திருவாசக அடிகள் கருதத்தக்கன.

157. எட்டுவரை — அட்டகுலாசலம்; இன்பத்து வார் கடல்—பேரின்பமாகிய கடல். வார் —உரிச்சொல்; அங்கை வரை—உள்ளங்கையெல்லை; 'அன்படைத்து எம்பெருமானை அறிகிலார்' என்பது திருமந்திரம். அணை —அணைக்கட்டு; "உணர்ச்சியில்லாது குலாவி உலாவி, அணைத்தலும் இன்பம் அதுஇது ஆமே"—திருமூலர்.

இரும்பு மனமா யிருந்து மிளக்கிக்
கரும்பி ரசமாக் கரைக்கும்—திருவன்பே 158

நீயே யெனக்கா நெடுந்தூது செல்கிற்பாய்
தாயே பிறவெவையுந் தான்றேரேன்—மாயவினை 159

பிறபொருள் தூதிற் சிறவாதென்றல்

நெஞ்சைவிடுத் தாலதுதான் நீடுதத்து வக்காளிற்
பஞ்சாப் பறந்தலையும் பான்மைத்தாம்—மஞ்சுமலைத்160

---

158. *அன்பானது உருகாத நெஞ்சையும் உருக்கி என்புத் துளையுள்ளெல்லாம் பேரின்பத் தேன் பாயும்படி ஊனைக் கரைக்கும் என்பர் அநுபூதிமான்கள். "அயனும் மாலும் மற்று அழலுறு மெழுகாம் என்பராய் நினைவர்".*—**திருவாசகம்.** **கரும்பிரசம்**—*கரும்பு—இரசம் என்றேனும், கரும் பிரசம் — என்றேனும் பிரித்துக்கொள்க. எல்லா மேன்மையும் அன்புக்கு இருத்தலின்* **திருஅன்பே** *எனப்பட்டது.*

159. *இவ்வடிகள், அன்பு ஒன்றையே செல்லற்குரிய உறுப்பும் உணர்வும் உடையதாக உருவகப்படுத்தித் தலைவனிடம் தூது செல்லும்படி சொல்லுவன.* **தாயே** *என விளித்த நயம் கருதற்பாலது.* **தான்**—*நான்.*

இதுமுதற் பதின்மூன்று கண்ணிகள் அன்பை நோக்கித் தூதுவிடுத்தற்குப் பிறபொருள்கள் சிறவாமையைக்காட்டி உரைப்பன.

160. **நெஞ்சு** — *மனம்; இது வாதனைபற்றி நிகழும் சங்கற்ப விகற்பமாகிய தொழிற்பாடுடையது; விஷய இச்சையே தனக்கு வடிவா யுடையது; ஆமோ அல்லவோ என்ற ஐயப் பாடுடையது. இருதயத்தை இருப்பிடமாகக்கொண்டது. ஒரு விஷயத்தைப் புறவிந்திரியம் பொதுவகையான் முன்னுணர,*

தென்றல்தான் மாரன் தெரியிரத மாதலினா
லொன்றி யுரையாதென் றோர்ந்திடுவாய்—சென்று
[சுகம் 161

சொன்னதையே சொல்லுஞ் சுரிகுழலார் சொற்கேட்டுப்
பின்னவர்தங் கொவ்வைகொளும் பெட்பதனால்—மன்னி
[விடும் 162

---

அதன்பின் அவ்விடயத்தை அகவிந்திரியமாகிய மனம் பற்றும். **தத்துவங்கள்**—அகக்கருவி முப்பத்தாறும், புறக்கருவி அறுபதும் ஆகத் தொண்ணூற்றாறு. இவை தாத்துவிகமாகிய சரீராதிகள் போல உடனே அழிவதின்றிப் பிரளயகாலபரியந்தம் நிலையுறுதலால் **தத்துவம்** எனப்பட்டன. இது தேவர்க்கு அமரர் என்னும் பெயருண்மை போன்றது. மனம் ஒன்றைப் பற்றிநின்றலையும் பான்மைத்தாகலின் தூதுக்குப் பயன்படாதெனப்பட்டது. **மஞ்சு**—மேகம்.

161. தென்றற்காற்று, மன்மதனுக்குரிய இரதமாகலால் அது தனக்குரிய தூதாகச் செல்லப் பயன்படாதெனப்பட்டது. மன்மதன் இதுபோழ்து தன்னை வருத்துபவனாகலாலும் அவன் கருத்தின் வழிச்செல்வது தென்றல் ஆகலாலும் ஒன்றியுரையாதெனப்பட்டது. **சுகம்**—கிளி.

162. கிளி, சொன்னவார்த்தையைக் கூறுமேயன்றிச் சமயோசிதமாகக்கூறும் தன்மையுடையதன்று. மற்றும் அம்முருகன்பக்கலுள்ள மாதரார் சொல்லுஞ் சொல்லைக் கேட்டு அதனைப் பயிலுவதில் முனையும்; அன்றியும் அவர்தம் அதரங்களைக் கொவ்வையங்கனியோவென மயங்கிக்கருதி உண்ண எண்ணித் தங்கிவிடும். கிளிகட்கு இவ்வித மயக்கம் உண்டென்பதனை "பொறித்த வாழையின் கனியினை............கறித்திடாதமர் செம்முகப் பைங்கிளி"—என்னும் பிரபுலிங்கலீலைச் செய்யுளிற் காணலாகும். 'அங்கைத்தலமீதே மன்னிவிடும்' என முடிக்க.

அன்னவர்த மங்கைத் தலமீதே யன்னமெனில்
நன்னயனைச் சார்ந்திட்ட நங்கைமார்—நன்னடை
[போற் 163

றன்னடையாக் கற்கருதித் தங்கிவிடுஞ் சொன்னமயில்
மன்னவனார் நன்மயிலின் மாட்சிக்குங்—கன்னியர்தஞ் 164

சாயற்கு மாங்கே சமஞ்செய்யும் சார்வண்டோ
நாயகியார் பங்கயத்து நாப்பணமர்—தூயவிழி 165

வண்டினமென் றூதிமிகு வாதுசெயும் வாழ்பூவை
கண்டுமொழி கேட்டுக் கரையாதே—தண்டலைவாழ் 166

---

163. அன்னப்பறவையைத் தூதுவிடின், அதுபோய் முருகன்மாட்டமர்ந்துள்ள நங்கையரின் நடையினைத் தானுங் கற்க விரும்பித் தங்கிவிடும். நல்நயனை—பெரு நயப்பாடுடைய தலைவனை.

164. சொன்ன—தூதுக்குரிய தெனச் சொல்லப்பட்ட; முருகனது இயல்பான வாகனமாகிய சொன்ன மயில் மாட்சி கண்டு மயங்கி நிற்பதேயன்றி, அவன்பக்கத்து நாய்ச்சிமாரின் சாயலைக்கண்டு அதுபெற வாது செய்யக்கூடும்.

165. சார்—செலவுக்குரிய; அம்முருகப்பிரானருகுள்ள பிராட்டிமார்களின் கண்களைத் தாமரையெனக் கருதியும் அதனுள் தெரியும் கருவிழிகளைத் தம்மினமாகிய வண்டென எண்ணியும் ஊதி ஊடும்.

166. பூவை—நாகணவாய்ப்பறவை; கண்டு—பார்த்து; கற்கண்டு போன்ற: கரையாது—மனங்கரையும்படி பேசாது. தண்டலை—சோலை. “நீயலையே சிறு பூவாய் நெடுமாலார்க்கு என்தூதாய் — நோயெனது நுவலென்ன நுவலாதே இருந்தொழிந்தாய்..............இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே!” என்ற திருவாய்மொழிப் பாட்டுங் கருதுக.

பைங்குயிலோ காளர்; படர்ந்தாலு மங்கையர்தம்
அங்கையின் மாந்தளிரை யங்கலகால்—எங்குமுதிர்த் 167

தின்புறுமே மானங் கியர்புமோ புல்வாயால்
துன்புறுமென் பாங்கி துயர்நடையாள்—முன்கு
[முறாள் 168

கார்மேகம் வார்குழலைக் கண்டதனே டொன்றுபடும்
யார்தாம்போ யென்றுயரை என்றுரைப்பார்—நீயல்
[லால் 169

---

167. பைங்குயில்—கரியகுயில்; காளம்—(மன்மதனுக் குரிய) எக்காளம். குயிலானது முருகப்பிரானிருமருங்கு முள்ள மங்கைமாரின் செங்கைவிரல்களை மாந்தளிரென மயங்கி யெண்ணிக் கோதிக் குலாவி விளையாடி மகிழ நினைக்குமே! புல் வாய்,—மானின் வகை. தூதுரைக்கேற்ற நல்வாயுடையதன்று என்பது குறிப்பு. எனவே, கிளிமுதல் குயில்இறுதியாகக் கூறப்பட்டனயாவும் தனித்த தலைவன்பாற் றூது செலற்குரியன வாமேயன்றி யான் காதலிக்கும் தலைவன்பாற் தூதுசெல்லற் குரியனவாகா எனப் புலப்படுத்தப்படுகிறது. மேற்கூறிய கண்ணி களில் மயக்கமும் தற்குறிப்புமாகிய அணிகள் விரவி வருவன காண்க.

168. பாங்கி--தோழி; தலைவிபோன்ற தோழியும் துயரம் அநுபவித்தலின் அவள் விரைந்து நடந்து தன் கருத்தை முற்றுவிக்கப் பெறாள் என்பது குறிப்பு.

169. மேகம்--இது கூந்தலைத் தனக் கொப்புமை கூறு தலைக் கருதி அம் முருகனுடைய தேவிமாரின் கூந்தலோ டொன்றுபடும். என்று—எற்றுக் கொண்டு.

மற்றுமெவர் சென்றாலும் மன்னியநீ தான்றுணையா
உற்றிடுவர் தூதன்றி ஓங்கருட்கும்—பெற்றதாய் 170

நீயாவா யென்றே நிகழ்த்தினரால் யானுமவன்
வியா வருளன்றே வேண்டுவது—தாயாகும் 171

நீசென் றழைத்திட்டால் நேருமருள் மற்றுங்கேள்
ஈசன் திருமலைக்கே யேகுங்கால்—நேசமற 172

---

170. தூது செல்லற்குச் சம்மதித்துச் செல்பவர் யாரே யாயினும் அவர்கள் அன்பு காரணமாகச் செல்வரே யன்றிப் பிற ஏதுக்களாற் செல்லார். பிற ஏதுக்களாற் செல்லின் அத் தூது உண்மையுடைத்தாகாது. இதுபற்றியே 'நீதான் துணையா உற்றிடுவர்' என்றுரைக்கப்பட்டது.

171. தலைவி, தலைவன்பால் நயப்பது உண்மையில் அவன் அருளேயாகும். அருள் என்னுங் குணம் அன்பென்னும் பண்பினின்றும் வெளிப்படுவதேயாகலின், அன்பை அருளின் தாய் என்பர். 'அருளென்னும் அன்பீன் குழவி' — **குறள்.** தலைவியினிடமிருந்து செலுத்தப்படும் அன்பு தாயாகவும், தலைவனிடமிருந்து பெறப்படும் அருள் சேயாகவும் பாவிக்கப்பட்டு 'உற்றதாய் நீயாவாய்' எனப்பட்டது.

172. தாய் சென்றழைத்தால் சேய் உடனே விரும்பித் தலைப்படுதல் உலக நெறியாதலால், அன்பாகிய தாய் செல்லின், அப்பெருமானிடத்துள்ள அருளாகியசேய் தானே போதரும் என்றற்கு, 'நீசென்றழைத்திட்டால் நேரும் அருள்' என்று கூறப்பட்டுள்ளது. **திருமலை**—இவ்விடத்து, **மயிலாசலம்.** தலைவன் பெயரைத் தன் வாயாற்கூறல் குறைவெனக் கருதி **ஈசன்** எனவும், திருமலை எனவும்பொதுப்படக் கூறியதாக வைக்கப்பட்டுளது; இஃது ஓர் உலகவழக்கு.

### தீச்சார்பு விலக்கேனல்.

ஊனச் சுவைக்கா உயிர்க்கொலைகள் செய்கிறவஞ்
ஞானச் சனங்களிடை நாடாதே—ஞானியெனக் 173

கண்கூடாக் கண்டிருந்துங் கண்டபடி பேசிடுமம்
மண்மூடு மக்களையும் நீமதியேல்—வண்மையுறு 174

---

இது முதற் பத்துக் கண்ணிகளால் தூது செல்லும் அன்பிற்கு வழியில் மாயங்களிழைக்கும் தீயவஞ்சகர் பாற் கூடாதபடி முன்னறிவிப்புச் செய்யப்படுகின்றது.

173. ஊனச்சுவை—அற்பச்சுவை; இறைச்சிச்சுவை. தலைவி நயப்பது அருளே யாதலால் அதற்கு மறுதலையாகும் இச் செயல் பூண்டார்மாட் டணுகாவண்ணம் துணிவுறுத்தப்படுகின்றது. 'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன் உண்பான், எங்ஙனம் ஆளும் அருள்?" என்பது திருக்குறள். "கிற்பன் கில்லே னென்றிலன் முன நாளால், அற்பசாரங்களவை சுவைத்தகன் ஞெழிந்தேன், பற்பல்லாயிரம் உயிர்செய்த பரமாநின், நற்பொற் சோதித்தாள் நணுகுவது எஞ்ஞான்றே!" என்றூர் ஆழ்வாரும். ஞானத்துக்கழகு உயிர்க்கு இதம் புரிதலும், அஞ்ஞானத்துக் கறிகுறி உயிரை வதம் புரிதலுமாதலால் 'அஞ்ஞானச் சனங்கள்' எனப்பட்டது.

174 கண்கூடு ஆ-பிரத்தியட்சமாக. அறியாது செய்யப்படும் பாவங்கட்குக் கழுவாயுளது. ஆனல் அறிந்தே செய்யப்படும். தீவினைகட்கு அநுபவமே கழுவாயாமாகலின் கண்டிருந்தும் எனப்பட்டது. கண்டபடி பேசிடுதலாவது உதாசீனமாகப் பேசுதல். மண்மூடு மக்கள்—அழிந்து போகும் மானிடர். உயிர்க்குறுதிகள் தரவல்ல பெரியாரை யறிந்திருந்தும் அவரிடம் அவைபெருமல் வாளா காலம் போக்கி மீளா நரகுக்கு ஆளாகுபவர். "மண்ணுண்டு போகுது ஐயோ இந்த மானிடமே!" எனப்பட்டினத்தாரும் இரங்கிப் பகருதல் காண்க. வண்மை—கொடைத்தன்மை. தெய்வத்திருவருளைத் தருந் தன்மையாம். இது கோயிற்கு அடைமொழி.

கோயிற் கடியரெனக் கொண்டுபல தீமைகள்செய்
மாயரிடஞ் சிக்கி மயங்காதே—தாயைப் 175

பழித்தலைத்து வஞ்சஞ்சேர் பாவை வலைக்குள்
விழித்தலையும் வெய்யோர்பால் மேவேல்—தெளித்த 176

அறத்தாற் பொருள்கொண் டறிந்தீந்து வாழார்
புறத்தாறு போவார்பால் போகேல்—நிறத்தோடு 177

தூதென்று சென்று துணைபகைவர்க் கேபுரியும்
பாதகர்தந் தீமுகத்தைப் பாராதே—மாதவத்தர் 178

---

175. கோயிற்கு அடியர்—கோயிலில் தெய்வத்துக்குப் பணிவிடைசெய்யும் பரிசனர். 'கோயிற் பூனை தேவருக்கஞ்சாது' என்பது ஒரு முதுமொழி. தாம் செய்யும் பொருட்கவர்ச்சி முதலியன பிறரறியாவண்ணம் மறைத்தொழுகுதலின் மாயர் என்றுரைக்கப்பட்டது.

176. பழித்து — பழிச்சொற்களைப்பேசி; அலைத்து— தெருக்கடையில் அலையவிட்டு; இங்ஙனம் வேசையர், பொருளற்றவரை வஞ்சித்து நிந்திப்பர் என்பர் பெரியோர். "அமுதமூறு சொலாகிய தோகையர், பொருளுளாரை யெனாணை யுனாணையெ, னருகு வீடிது தானதில் வாருமெ னுரைகூறும்— அசடு மாதர் குவாது சொல் கேடிகள், தெருவின்மீது குலாவி யுலாவிகள்" — திருப்புகழ், 526.

177. அறத்தால்—அறநெறியில்; அறிந்து — பாத்திரமறிந்து. புறத்தாறு—மறநெறி, பாவமார்க்கம்.

178. உண்மையான தூதுபோன்று நடித்துப் பகைவர்க்கே உதவிபுரியும் வஞ்சநெஞ்சுடையர் நம்பத்தக்கவரல்லராகலின் இங்ஙனம் கூறப்பட்டது. வெளிப்படையான பகைவரைக்காட்டிலும் இன்னார் அஞ்சத்தக்கவர். "அகத்தின்னா வஞ்சரை அஞ்சப்படும்" என்றார் வள்ளுவனாரும்.

கொண்ட குறிப்பாற் கொடுத்துதவாச் செல்வரேனுங்
கண்டகரை எக்காலுங் காணுதே—வண்டமிழைப் 179

பாடுபுல வோர்க்குப் பரிசில் வழங்காதார்
விடுகளைச் சேர்வதுமுன் வீறன்று—வாடுமட்டுந் 180

வேலைசெய்தார் கூலி விரும்புகின்ற செல்வரைநீ
வேலையுள்ள மட்டும் வியவாதே—கூலி 181

---

179. குறிப்பறிந்து ஈதலே உத்தமக் கொடையாகும்; குறிப்பறியாமலும், கேட்டும் கொடுக்காமலு முள்ள செல்வர் பயனற்றவர் ஆவர். இத்தகையினர் தம் செல்வத்தாற் சிறிதும் நன்று புரியாது பிறர்க்குத் தீங்கே விளைப்பராகலால் கண்டகர் எனப்பட்டார். "தீயாரைக் காண்பதுவும் தீதே" யாகலின் காணுதே என்றுரைக்கப்பட்டது. வண்தமிழ் — வளப்பம் பொருந்திய தமிழ்மொழி; தன்னைப் பயின்ருர்க்கு அறமுதல் நான்கு பொருளும் வழங்குதலின் வண்டமிழ் எனப் பட்டதெனினும் ஆம்.

180. வீறு—மேன்பாடு.

181. கடுமையாக ஏழைகளை வேலைவாங்கிப் பின் கூலியிற் குறைவும் மாருட்டமும் செய்யும் குணக்கேடராகிய பணப் பேயரைக் கடலுள்ளளவும் கருதற்க என்பது இதன் பொருள்; முற்கூறிய மூன்று கண்ணிகளாலும் பலதிறச் செல்வர்தம் இயல்புகள் பகரப்பட்டன.

நிறையப்பெற் றுங்கொடுமை நேர்மையின்றிக் கூறும்
முறையற்ற பேயர்களின் முன்போ—யுறையாதே 182

தேனி னலனழித்துத் தெள்ளமுதின் கோல்வீழ்த்தி
ஞானத் தமிழ்தூதாய் நாடியே—மோனமுடன் 183

இடமும் காலமுமறிகவெனல்

வந்திருக்கு மவ்விடத்தில் வாயைத் திறவாதே
சந்தமுறு நற்செவ்வி தான்கண்டே—விந்தையுறக் 184

---

182. இது இரப்போருள்ளும் இழிதகவுடையாரை இகழ்வது. முறை—கிரமம். உறையாதே—வசிக்காதே.

தேனின் நலனுயுள்ளன இனிமை, உடல்நலந்தால் முதலியன; தெள்ளமுதத்திற்குச் செங்கோலாயிருப்பது அருந்தினோர் மூப்பெய்தா திருக்கச் செய்வது. ஞானத்தமிழ் அவை இரண்டினும் மேன்மையுடைமை கருதித் 'தேனினலனழித்து' என்றும் 'தெள்ளமுதின் கோல்வீழ்த்தி' என்றுங் கூறப்பட்டது. அழித்து, வீழ்த்தி என்பன 'வந்திருக்கும்' என்பதனோடு முடிவன. ஞானத்தமிழ் எழுவாய்.

184. செவ்வி--எற்றசந்தர்ப்பம்; கண்டு—எதிர்பார்த்து; விந்தைஉற—இதுபோலும் அதிசயத்தூது இதுகாறும் வந்திலதெனத் தலைவணங்கிய முருகன் வியப்பு அடையும்படி.

வேண்டுகை

**கண்டு தரிசித்துக் கைதொழுது நின்றுருகி**
**வண்கடப்பந் தார்வாங்கி வா.** 185

---

185. கண்டு தரிசித்து—கண்ணாரக்கண்டு நேர் நின்று தரிசித்து; கைதொழுது—கைகளை உச்சியிற்சேர்த்து வணங்கி; உருகி—உள்ளம் கரைந்து; கடப்பந்தார்-இது தலைவன் அணிந்த மாலை, முருகனுக் குரியது. இங்ஙனம் தலைவன் சூடிக்களைந்தன பெறுதல் தலைவிக்கு இன்பம் நல்கும். "உடுத்துக்களைந்த நின் பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு, தொடுத்த துழாய் மலர் சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்" என்றார் பெரியாழ்வாரும்.

*முற்றிற்று*

பதிப்பகம்

ஸ்ரீ ஷண்முகா பிரிண்டிங் ஒர்க்ஸ்,

திருப்பாதிரிப்புலியூர்.